R.R. 285/701

*Issued* 11—6—1965]

21 JUL 1965
MADRAS

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## WEDNESDAY, 10TH MARCH 1965

### VOLUME XXVII—No. 2

201

*CONTENTS*


| | Pages |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 85–101 |
| II Privilege Matters— | |
| (1) Publication of an article in the ' Nathigam ' .. .. .. | 101–102 |
| (2) Alleged treatment meted out to Sri M. Rajangam, M.L.A. while in Police custody .. .. .. .. .. .. .. | 102–105 |
| III Voting on Demands for Grants for 1965–66—*cont.* | |
| Demand No. XXIV—Labour including Factories .. .. .. | 105–162 |
| IV Papers laid on the Table of the House .. .. .. .. | 162–163 |


©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Madras.*

PRICE 50 *Paise.*]

V2N.31 N65
N65. 27. 2

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

---

**Wednesday, the 10th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort. St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

**முன்னுள் போலீஸ் அதிகாரி போலீசாரால் சுடப்பட்டது.**

* 193 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து, திரு. மீ. கலியாணசுந்தரம், திரு. கே. ஏ. மதியழகன், திரு. எம். வி. கரிவேங்கடம் :** [illegible] அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் முன்னுள் போலீஸ் அதிகாரி [illegible] சுடுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக கோவை கலெக்டர் நடத்திய விசாரணை முடிவு பெற்று விட்டதா?

(இ) ஆமெனில், அவ்விசாரணையின் நகல் [illegible] சபை முன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :**

(அ) ஆம்.

(இ) இச்சம்பவத்தின் விளைவாய் எழுந்த ஒரு வழக்கு [illegible] நீதி மன்ற விசாரணையிலுள்ளதால், அந்த அறிக்கையின் [illegible] சபை முன் வைக்க இயலாமைக்கு அரசாங்கம் வருந்துகிறது.

64891

(*a*) Yes.

(*b*) The Government regret their inability to place a copy of the report on the table of the House as a case arising out of the incident is now *sub judice*.

**திரு. செ. மாதவன் :** கலெக்டர் விசாரணை செய்தார்கள். அதன் முடிவு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அது இப் பொழுது தெரிவிக்கப்படுமா ?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** விடை அளிக்கவேண்டுமென்றால் அளிக்கிறேன். ஆனால்........

MR. SPEAKER : Will not an answer to this question affect the judicial enquiry?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோர்ட்டில் இருப்பதனால் விடை அளிக்க முடியாதென்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : If the hon. Member gets a reply from the Hon. Chief Minister, will it not influence the mind of the parties to the case? Therefore I do not think it is proper to allow this question.

V2:1.51 N65
N65.27.2

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 10th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort. St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

**முன்னாள் போலீஸ் அதிகாரி போலீசாரால் சுடப்பட்டது.**

* 193 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து, திரு. மீ. கலியாணசுந்தரம், திரு. கே. ஏ. மதியழகன், திரு. எம். வி. கரிவேங்கடம் :** [illegible] அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் முன்னாள் போலீஸ் அதிகாரி அர்ச்சுனனை சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக கோவை கூட்டுக் கலெக்டர் நடத்திய விசாரணை முடிவு பெற்று விட்டதா?

(இ) ஆமெனில், அவ்விசாரணையின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

64891

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :**

(அ) ஆம்.

(இ) இச்சம்பவத்தின் விளைவாய் எழுந்த ஒரு வழக்கு இன்னமும் நீதி மன்ற விசாரணையிலுள்ளதால், அந்த அறிக்கையின் நகலை சபை முன் வைக்க இயலாமைக்கு அரசாங்கம் வருந்துகிறது.

(*a*) Yes.

(*b*) The Government regret their inability to place a copy of the report on the table of the House as a case arising out of the incident is now *sub judice*.

**திரு. செ. மாதவன் :** கலெக்டர் விசாரணை செய்தார்கள். அதன் முடிவு அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அது இப் பொழுது தெரிவிக்கப்படுமா ?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** விடை அளிக்கவேண்டுமென்றால் அளிக்கிறேன். ஆனால்........

MR. SPEAKER : Will not an answer to this question affect the judicial enquiry?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோர்ட்டில் இருப்பதனால் விடை அளிக்க முடியாதென்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : If the hon. Member gets a reply from the Hon. Chief Minister, will it not influence the mind of the parties to the case? Therefore I do not think it is proper to allow this question.

**திரு. செ. மாதவன்** : முடிவு எப்படி இருந்தாலும் அந்த நபர் தனிப்பட்ட விரோதத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறதே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கோர்ட்டிலே வழக்கு இருப்பதால் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை.

*22nd Indian Labour Conference*

* 194 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon the Chief Minister be pleased to state—

(a) whether the decisions of the 22nd Indian Labour Conference held in Bangalore on 29th and 30th July 1964, have been received by the Government; and

(b) if so, details of the action taken in so far as they relate to our State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) A statement * is placed on the table of the House.

*Industrial disputes during 1962–63 and 1963–64*

* 195 Q.—Sri M. V. KARIVENGADAM: Will the Hon. the Chief Minister be pleased to state the number of disputes settled and the number referred to arbitration under the Industrial Disputes Act, 1947, during the years 1962–63 and 1963–64?

The Hon. Sri M. BHAKTAVATSALAM:

| | 1962–63. | 1963–64. |
|---|---|---|
| Number of disputes settled .. .. | 1,067 | 1,140 |
| Number of disputes referred to arbitration under the Industrial Disputes Act, 1947 .. .. .. .. | 1 | 2 |

**திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, தொழில் தகராறு சட்டத்தின் 10-வது செக்ஷன்படி அரசாங்கம் ரெபர் செய்திருக்கிறது. அப்படி ரெபர் செய்வதிலே அரசாங்கம் ஏதாவது ஒரு கொள்கை கடைப்பிடிக்கிறதா ? எந்தெந்த தகராறுகள் லேபர் கோர்ட்டிலே தீர்க்கப்படுகின்றன? எந்தக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கொள்கை விஷயம் பற்றி கேள்விக்கு பதில் அளிப்பதற்கில்லை. பின்னால் மானியம் வரும்போது விளக்கம் கூறலாம்.

**திரு. எம். எஸ். மணி** : தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்று மாவட்டவாரியாக தெரிவிப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : என்னிடம் தகவல் இல்லை.

**திரு. செ. மாதவன்** : இந்தத் தொழில் தகராறில் லேபர் கோர்ட்டுகளு ரெபர் செய்வதிலே அரசாங்கம் இன்எக்ஸ்பிடியண்ட் என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறதே அதற்கு அரசாங்கம் என்ன விளக்கம் அளிக்கிறது ?

* Printed as Appendix on pages 164–170.



**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கத்திற்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. சில கொள்கைகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. குறிப்பிட்ட வழக்குகளிலே அரசாங்கம் எந்த அளவுக்கு விளக்கம் கூற முடியுமோ அந்த அளவிற்குத் தான் அளிக்கும்.

**திரு. செ. மாதவன்** : இந்த மூன்று கோர்ட்டுகளிலும் எவ்வளவு வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : என்னிடம் தகவல் இல்லை.

**திரு. செ. மாதவன்** : அரசாங்கத்திற்கு தொழில் தகராறு சட்டத்தின் 10-வது பிரிவின்படி டிஸ்க்ரீஷன் இருக்கிறது. ஆனால் ஜுடீஷியல் டிஸ்க்ரீஷனை அரசாங்கம் சரிவர பிரயோகிக்கவில்லை. சுப்ரீம் கோர்ட் அரசாங்கத்தின் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

**கனம். திரு. எம். பக்தவத்சலம்** : என்னுடைய கவனத்திற்கு வரவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்** : லேபர் ஆபீசர்களுக்கு தகராறிலே தீர்ப்பு சொல்லக்கூடிய அதிகாரம் அதிகமாக இல்லை. அவர்கள் வெறும் கன்ஸிலியேட்டிங் ஆபீசராக இருக்கிறார்கள். ஆகவே சிறு சிறு தகராறுகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு அதிக அதிகாரம் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எம். எஸ். மணி** : இந்த தொழில் தகராறு சட்டத்தின் கீழ் எத்தனை வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன ? இப்பொழுது இருக்கும் மூன்று கோர்ட்டுகள் போதாததினால் இன்னும் ஒரு கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : மேலும் ஒரு கோர்ட் ஏற்படுத்த போதிய அவசியம் வேண்டும். எப்போது அவசியம் இருக்கிறது என்று அரசாங்கம் உணருகிறதோ அப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. செ. மாதவன்** : "லீகல் அட்ஜுடிகேஷன்", "இன்பார்மல் அட்ஜுடிகேஷன்" என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. அப்படி எத்தனை வழக்குகள் ரெபர் செய்து தீர்ப்புக் கூறப்பட்டுள்ளன.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இன்பார்மல் அட்ஜுடிகேஷன் தான் ஆர்பிட்ரேஷன்.

**எலும்பு உரத் தொழிற்சாலை**

* 196 கேள்வி.—**திரு. ம. கமலநாதன்**: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

இறந்த கால்நடைகளில் இருந்து கிடைக்கும் எலும்புகளைச் சேகரித்து உரத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ பெரிய அளவில் இம்மாதிரியான தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை.

ஆனால் தனியார் துறையில் ஏற்கெனவே சில சிறு தொழிற்சாலைகள் நடந்து வருகின்றன. State Khadi and Village Industries Board-இன் திட்டப்படி எலும்புத் தூள் செய்யும் சிறு தொழிற்சாலைகள் சில நிறுவப்பட்டுவருகின்றன.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இந்த எலும்பு உரம்
மிகச் சிறந்தது என்று சொல்லுகிறார்கள். 1961-ம் ஆண்டின் கணக்
கெடுப்பின்படி கால்நடைகளின் எண்ணிக்கை 2,39,000 என்று
சொல்லப்படுகிறது. கால் நடைகள் ஏராளமாக இருந்தாலும், அவைகள்
இறந்த பின் அந்த எலும்புகளைச் சரிவர சேகரிப்பதில்லை. ஆகவே மக்க
ளுக்கு ஜனன மரணக் கணக்கு இருப்பது போல், கால்நடைகளுக்கும்
அந்தக் கணக்கை எடுக்க ஏற்பாடு செய்து இறந்த கால்நடைகளின்
எலும்புகளைச் சேகரித்து உர உற்பத்தி செய்ய பெரிய தொழிற்சாலை
ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** உரம் எலும்புத் தூள் கலந்து
செய்வது என்ற விவரம் எல்லோருக்கும் தெரியும். தனியார் துறை
யிலே ஐந்து உரத் தொழிற்சாலைகள் வேலை செய்துகொண்டிருக்கின்றன.
தனியார் துறையிலே யாரும் ஊக்கம் அளிக்காவிட்டால் அப்பொழுது
அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஏற்கெனவே ஐந்து தொழிற்சாலைகள்
லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மூலதனம் போடப்பட்டு நடந்துவருகின்றன.
ஏராளமான சிறு சிறு தொழிற்சாலைகள் 10 ஆயிரம் ரூபாய் மூலதனத்
தில் நடக்கக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினால் சர்க்கார் நடத்த
வேண்டும் என்ற உத்தேசம் இல்லை.

**திரு ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, சிறு சிறு தொழிற்சாலை
களில் அதாவது காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸில் உரம் விற்பனை
யாகாமல் அதிகமாகத் தேங்கிக் கிடப்பதால் அதற்கு சப்சிடி ஸ்கீம்
ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது என்னுடைய சக அமைச்ச
ருக்குப் போடவேண்டிய கேள்வி.

**திரு. து. ப. அழகமுத்து :** நமது மாநிலத்தில் எலும்புகள் சேகரிக்கப்
பட்டு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனிக் கேள்வி
வேண்டும்.

## *Radio photo equipment factory*

* 197 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to instal a radio photo equipment factory in the city; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

**திரு. வை. சங்கரன் :** இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இல்லாவிட்டா
லும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்தத் தொழிற்சாலையை
ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் சர்க்கார் கொள்கையை
அடிக்கடி விளக்கிச் சொல்லியிருக்கிறேன். எந்த ஒரு தொழிற்சாலையை
ஆரம்பிப்பதன் மூலமாக பல தொழில்கள் தனியார் செய்ய முன் வரக்
கூடுமோ, அதை சர்க்கார் ஆரம்பிக்க முன் வரும். பொதுவாக மற்ற
தொழில்களைத் தனியாருக்கு விட்டுவிடுவதுதான் சர்க்காரின் கொள்கை.
இந்த ரேடியோ போட்டோ சாதன தொழிற்சாலை தனியார் செய்யக்கூடிய
ஒன்று. அதற்கு யாராவது முன்வந்தால் வேண்டிய உதவி அளிக்கப்
படும்.



**திரு. வை. சங்கரன் :** இது வரையில் யாராவது முன் வந்து விண்ணப்பம்
கொடுத்து இருக்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** உதகையில் இருக்கும் ஹிந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் பாக்டரியில் இந்த கதிர் ஒளி சாதனங்களைத் தயாரிக்க
ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது வேறு. ஹிந்துஸ்தான்
போட்டோ கம்பெனியில் தயாரிக்கும் பண்டங்கள் வேறு.

## *Pay of constables*

* 198 Q.—Sri K. CHEEMAICHAMY, Pulavar K. GOVINDAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal under consideration of the Government for increasing the pay of the constables on the recommendation of the Committee on Estimates?

The Hon. Sri P. KAKKAN : The Government have carefully considered the recommendation of the Committee on Estimates for revising the scale of pay of Police Constables. They are, however, unable to accept this recommendation, as any revision of the pay scale of Police force could take place only as part of a general revision of the pay structure of the State Government employees.

போலீஸ் கான்ஸ்டபிள்களின் சம்பள விகிதங்களை மாற்றியமைக்கும்படி
மதிப்பீட்டுக் குழு செய்த பரிவுரையை அரசாங்கம் கவனமாகப் பரிசீலித்தது.
எனினும், மாநில அரசாங்க ஊழியர்களின் சம்பள வீதங்களைப் பொதுவாக
மாற்றியமைக்கும்போதுதான் போலீஸ் படையினரின் சம்பள வீதங்களையும்
மாற்றியமைக்க முடியுமாதலால், இந்தப் பரிவுரையை அரசாங்கம் ஏற்க
இயலவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களின்
சம்பளங்கள் மற்ற ஊழியர்கள் சம்பளங்கள் உயர்த்தப்படும்போது உயர்த்த
படும் என்ற கருத்தை அமைச்சர் தெரிவித்தார்கள். அண்மையில் மாநில
போலீஸாரின் சம்பளத்தை உயர்த்தி சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அது
எந்தக் கொள்கையின் அடிப்படையில் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சம்பள விகிதத்தை உயர்த்துவதற்கும், இன்கிரி
மெண்ட் கொடுப்பதற்கும் உள்ள தாரதம்மியத்தை கனம் அங்கத்தினர்
அறிவார் என்று நினைக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மற்ற மாநில ஊழியர்
களைவிட போலீஸ் போர்ஸில் உள்ளவர்கள் சம்பளம் சம்பந்தப்பட்ட மட்டில்,
தனி போலீஸ் கமிஷன் ஏற்படுத்தி, அந்தக் கமிஷன் மூலமாக அவர்களின்
"பே ஸ்கேல்களை" "ரிவைஸ்" பண்ண அரசாங்கத்திற்கு திட்டம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** போலீசார் சம்பள விகிதங்களைப் பொறுத்த
வரை எவ்வளவு தூரம் சலுகை காட்டமுடியுமோ அவ்வளவு தூரம்
அரசாங்கம் காட்டிக்கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் போலீசாரின்
சேவையை நன்கு தெரிந்து இருக்கிறது. நிதி நிலைமைக்குத் தக்கபடி,
எவ்வளவு தூரம் இதர ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படுகிறதோ,
அப்போது அவ்வளவு தூரம் இவர்களின் சம்பளமும் உயர்த்த அரசாங்கம்
முன் வரும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அண்மையில் நடந்த கலவரங்கள் காரணமாக எதிர்காலத்தில், குறைந்த சம்பளம் பெறுவதால், போதிய போலீஸ்காரர்கள் வருவார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே இப்போது உள்ள சம்பளத்தை இரண்டு மடங்காக பாவலாக உயர்த்தலாம் என்ற காரணத்தால், இதை சர்க்கார் மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்ற பிரச்னை இல்லை. போதுமான சம்பளம் கொடுக்கவேண்டும். அதை அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொண்டு இருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, மற்ற மாநில உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படும்போது இவர்களின் சம்பளம் உயர்த்துவது பற்றியும் கவனிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்கள். உயர்த்தப்படும் சம்பளம் எந்த நிலையில் இருக்கும் என்று அறியலாமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதற்குள்ளே எப்படிச் சொல்ல முடியும் ?

**திரு. செ. மாதவன் :** இந்தப் போலீஸ் இலாகா அதிகாரம் பொருந்தியது. ஆனால் அதற்குத் தக்க சம்பளம் இல்லாமல் இருக்கிறது. பிரிட்டிஷ் பாரம்பரிய நிலைமை இன்னும் இருந்துகொண்டே இருக்கிறது. அதிகாரிகளின் சம்பளத்தைக் கூட்டுவதற்கு, புதிய போலீஸ் கமிஷன் நியமித்து "என்க்வொயர்" செய்வார்களா? ஏற்கெனவே மற்ற மாநிலங்களில், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், போலீஸ் கமிஷன் ஏற்படுத்தியாகி விட்டது. இண்டியன் போலீஸ் கமிஷன் 1861-ல் போட்டார்கள். இது போன்று, சுதந்திரம் அடைந்த பிறகு மற்ற மாநிலங்களில் போட்டமாதிரி, நம் மாநிலத்திலும் போலீஸ் கமிஷன் போட்டு "என்க்வொயர்" செய்து "ரிவைஸ்ட் ஸ்கேல் ஆப் பே" கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கமிஷன் போட்டுத்தான் போலீஸ்காரர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்பது இல்லை. அரசாங்கத்திற்கு தெரியும் எவ்வளவு தூரம் அவர்களுடைய சேவைக்குத் தக்கவாறு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பது. ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்த போதிருந்த சம்பளத்தைப் பற்றி சொன்னார்கள். அப்போது ரூ. 30–½–40 ஆக இருந்தது. சுதந்திரம் பெற்ற பிறகு சம்பளம் ரூ. 65–1–70–2–90 ஆக உயர்ந்திருக்கிறது. இன்னும் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். எல்லா இலாகா ஊழியர்களின் சம்பளமும் உயர்த்தப்படும்போது இவர்களின் சம்பளமும் உயர்த்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** நம் சட்டசபையில் பணி செய்கிற "வாட்ச் அண்ட் வார்டி"ல் ஹெட்கான்ஸ்டபிளுக்கு 1 ரூபாயும், கான்ஸ்டபிளுக்கு 10 அணவும் "ஸ்பெஷல் அலவன்ஸ்" ஆகக் கொடுக்கப்படுகிறது. அது 1958-ல் நிர்ணயித்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் விலைவாசி உயர்ந்து இருக்கிறது. "ஸ்பெஷல் அலவன்ஸை" உயர்த்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கான்ஸ்டபிள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டும் என்று மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்தது. இப்போது மாநில ஊழியர்களுக்கு உயர்த்தியிருக்கிற படியையும்—அது இவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்—இப்போது இவர்களுக்குக் கொடுத்திருக்கிற இன்க்ரிமென்டையும் சேர்த்துப் பார்த்தால், அந்த அளவு வருகிறதா ? வித்தியாசம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதர ஊழியர்களுக்கு அரசாங்கம் பரிசீலித்து எந்த அளவுக்கு படியை உயர்த்தி இருக்கிறதோ, அந்த அளவுக்கு இவர்களுக்கும் உயர்த்தி இருக்கும் என்று நினைக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சொல்கிறேன்.



**திரு. வை. சங்கரன் :** பொதுவாக பந்தோபஸ்து வேலைபார்க்கும் கான்ஸ்டபிளுக்கு சாப்பாட்டுச் செலவுக்கு 1½ ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது போதாது, தற்போதைய விலைவாசி உயர்வினால். இதை உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. எம். எஸ். மணி :** பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோது கொடுத்த சம்பளத்தைக் காட்டிலும் இப்போது அதிகமாக சம்பளம் கிடைக்கிறது என்று கனம் அமைச்சர் விளக்கினார்கள். அப்போது இருந்ததைவிட இப்போது வாழ்க்கைச்செலவு புள்ளிகள் அதிகமாக உயர்ந்து இருக்கிறதை கனம் அமைச்சர் அறிவாரா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** புள்ளிகள் அதிகரித்திருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும். நான் ஏற்கெனவே சொன்னபடி இதர அதிகாரிகளுக்கு புள்ளிவிவரத்தைப் பார்த்துக் கொடுக்கும்போது இவர்களுக்கும் கொடுக்கப்படும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** என் மாவட்டத்தில், மாதத்தில் 20 அல்லது 22 நாட்கள் வெளியிலே உத்யோகம் பார்த்தால், போலீஸ்காரருக்கு ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குத்தான், அதாவது 10 அல்லது 15 நாட்களுக்குத்தான் படி கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அப்படியானால் வெளியே எவ்வளவு நாட்கள் சென்று உத்யோகம் பார்த்தாலும் அவ்வளவு நாட்களுக்கும் படி கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர் மாவட்டத்தில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. செ. மாதவன்.:** போலீஸ் இலாகாவில் அதிகாரம் அதிகம். சம்பளம் குறைவு. இதனால் லஞ்சம் அங்கே தாண்டவமாடுகிறது என்ற கருத்தை அரசாங்கம் ஒத்துக்கொள்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** லஞ்சம் அங்கே தாண்டவமாடுகிறது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. லஞ்சத்தை ஒழிக்க அவர்கள் உதவியை நாடுகிறோம். லஞ்சம் தாண்டவமாடுகிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, போலீசாரின் அடிப்படை சம்பளம் 65 ஆக இருக்கிறது. அதை ரூ. 85 ஆக உயர்த்தினால் பஞ்சப்படியையும் சேர்த்து ரூ. 120-லிருந்து ரூ. 125 வரை ஆகுமென்று மதிப்பீட்டுக் குழு முடிவு செய்து இருக்கிறது. பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே போலீசாரின் அடிப்படை சம்பளம் ரூ. 150 அளவுக்கு கொடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். பெரும்பாலான மாநிலங்களில் இங்கிருப்பதைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள். சில மாநிலங்களிலே குறைவாக இருக்கிறது. மதிப்பீட்டுக் குழு செய்த சிபார்சு நியாயமான அடிப்படையில் செய்தது என்பதை உணர்ந்து இந்த மாநில போலீஸ்காரர்களின் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸ்காரர்கள், மற்றவர்கள் சம்பள விகிதங்கள் அப்போதைக்கப்போது ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டு வருகிறது. முன்பே "பே கமிஷன்" அவர்களின் சம்பளத்தை நிர்ணயித்தது. அதற்குப் பின்னால் "பஞ்சப் படியை" உயர்த்திக் கொண்டே வருகிறோம். வேறு என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து கொண்டு வருகிறோம். எஸ்டிமேட்ஸ் கமிட்டி இதிலெல்லாம் தலையிட்டு இன்ன ஸ்கேல் கொடுக்கவேண்டும் என்று தன் அபிப்பிராயத்தை சொன்னால் அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் வரம்புக்கு மேற்பட்டது இது. இன்னென்ன சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பஞ்சப்படி உயர்ந்துகொண்டே போகிறத என்ற காரணத்தால், நாட்டிலே பஞ்சமும் உயர்ந்துகொண்டே போகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. எனவே, பஞ்சப்படியை நீக்கி, அதை அடி படைச் சம்பளத்தோடு சேர்த்துக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது கொள்கையைப் பற்றிய விஷ யம். பொதுவாகத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டும் எவ்வளவு பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்துக்கொடுப்பது என்பது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : என்புமேண்ட் கமிட்டி சிபாரிசு செய்வதையெல்லாம் அரசாங்கம் செய்ய முடியாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனல் நியாயமான முடிவு செய்து, எல்லா மாநிலங்களையும் பார்த்து, நம்முடைய மாநிலத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை உத்தேசித்து ஏதாவது ஏற்றிக்கொடுப்பதற்கு அர சாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சம்பள விகிதங்களைப்பற்றி எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபார்சு செய்தால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றுதான் சொன்னேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : அவர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்துவது பற்றி சிந்தித்து முடிவுசெய்தாலும் கூட இப்பொழுது அவர்கள் டியூட்டியிலே இருக்கும்பொழுது ஏதாவது நகரத்திலிருந்து 7, 8 மைல்கள் தூரமுள்ள இடங்களுக்குச் சென்று வேலை செய்கின்ற நேரத்திலே அவர்களுக்கு ஃபுட் பார்சல்கள் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

## மதுரை விவசாயக் கல்லூரி

* 199. கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி, திரு. வை. சங்கரன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965 ஜூனில் ஆரம்பிக்கவிருக்கும் மதுரை விவசாயக் கல்லூ ரிக்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆமெனில், செலவாகும் மொத்தத் தொகை எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் :

(அ) ஆம்.

(இ) மொத்தச் செலவு மதிப்பீடு 22.60 லட்சம் ரூபாய்.

திரு. வை. சங்கரன் : இதுவரை அதிலே எந்த அளவுக்கு வேலை பூர்த்தியாகி உள்ளது. கண்டிப்பாக இந்த ஜூன் 1965-லேயே ஆரம்பிப் பதற்குத் தகுந்தபடி வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : கண்டிப்பாக இந்த ஜூலை 1965-லேயே காலேஜ் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற் கான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

Sri V. S. S. Mani : Is there any provision in the estimate for a hostel?

கனம் திரு. பூ. கக்கன் : காலேஜ் இருக்கும்பொழுது ஹாஸ்டல் இல்லா மல் இருக்க முடியாது. அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : தஞ்சை மாவட்டம்தான் அதிகமாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம். எனவே, அங்கு இந்த விவ சாயக் கல்லூரி ஏற்படுத்தப்படும் என்று எதிர்ப்பார்த்தோம். அடுத்த 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தினல் அதைத் தஞ்சை மாவட்டத்திலே வைக்கும் உத்தேசம்உண்டா ?



கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே கோவையில் ஒரு கல்லூரி இருக் கிறது. இப்பொழுது 2-வது கல்லூரி மதுரையிலே ஆரம்பிக்கப்போகிறோம். மூன்றாவது கல்லூரி தேவை என்று கருதினல் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

201

திரு. பி. கே. மூக்கைய்யா தேவர் : மதுரையிலே விவசாயக் கல்லூரி எந்த இடத்திலே அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரைக்கு அருகிலே ஒத்தக்கடைக்குப் பக் கத்தில் வெள்ளாலதோட்டம் என்ற இடத்திற்குப் பக்கத்தில் அந்தக் கல் லூரியை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. ர. ஜீவரத்னம் : தஞ்சைக்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு மாவட்டம்தான் உபரியாக உள்ள மாவட்டமாக இருக்கிறது. அங்குதான் உணவு உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்பதை நமது முதலமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். எனவே வட ஆற்காடு மாவட்டத்தில் அந்த விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்காமல் மதுரையிலே ஆரம்பிப்பதற்கு முடிவு செய்த காரணம் என்ன ? அடுத்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஜில்லாவிலே அமைப்பதற்கு முக்கிய காரணம் அங்கே வைகைப் பாசனம் இருக்கிறது. அதைத் தவிர அர சாங்கத்திற்குச் சொந்தமான நிலம் அங்கு ஏற்கனவே ஆர்ஜிதமாகி இருந் தது. தண்ணீரும் வசதியாக இருக்கிறது. அதனல்தான் இந்தக் கல்லூ ரியை அங்கு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வந்தது. மேலும் மதுரை யில் இருந்தால் அது இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வசதியாகவும் இருக்கும் என்ற காரணத்தினல்தான் அவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

திருமதி சி. குழந்தையம்மாள் : மதுரையிலே ஆரம்பிக்க இருக்கும் விவசாயக் கல்லூரிக்கு ஆகும் செலவினங்கள் தயாரிப்பதற்கு முன்பு, கோவையிலே விவசாயக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள், எம். எஸ்ஸி. படிக்கின்ற மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேறு சில சப்ஜெக்டுகளைப் படிப்பதற்கான யோசனைகள் பரிசீலிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல்கள் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன் : மதுரையிலே விவசாயக் கல்லூரி ஏற்படுவதை மாற்றி தற்போது வேறு மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சிப்பது முறை யாகாது, சரியாகாது. தனியாக வேண்டுமானல் அவரவர்கள் கேட்டுக் கொள்ளலாம் என்று அட்வைஸ் செய்வார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்த விவசாயக் கல்லூரியில் எந்த அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்? தஞ்சை மாவட்டத் தில் உள்ளவர்களுக்கு அதிகமாக இடங்கள் ஒதுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கோவையில் எந்த முறையிலே மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களோ அந்த முறையிலே தான் மதுரையிலும் மாணவர் கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

திரு. ஆ. துரையரசன் : பஞ்சம் வருகின்ற நேரம் எல்லாம் தஞ்சை மனிக்கின்றது தஞ்சை மாவட்டம் என்று சொல்கிறார்கள். ஆனல் இதுவரை யில் அங்கு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தஞ்சை மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை மாவட்டத்தை இந்த அரசாங்கம் எப்பொழுதும் மறக்காது. தஞ்சை நெல் களஞ்சியம் ஆக விளங்குகிறது. அந்த ஜில்லாவுக்கு உதவி செய்யவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின்

எண்ணம். ஆனால் உடனடியாக உதவிசெய்யவில்லை என்ற காரணத்தால் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்ற அவநம்பிக்கை கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** திருச்சி மாவட்டமும் ஒரு மாவட்டமாகத் தான் கருதப்படுகிறது. எனவே, அந்த வகையிலே [illegible] அடுத்த படியாக திருச்சியிலே ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருச்சி, மதுரைக்கு அருகில்தான் இருக்கிறது. அப்படி இருப்பதால் திருச்சியில் இருப்பவர்கள் மதுரைக்கு போய் படித்துக்கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு என்ன என்ன வசதிகள் இருந்தால் ஆரம்பிக்கலாம் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டிய அவசியமில்லை. அப்படி அமைக்கவும் முடியாது. இரண்டாவது விவசாயக் கல்லூரிக்கு மதுரை பொருத்தமான இடம் என்று எண்ணித்தான் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** இந்த விவசாயக் கல்லூரியில் தொழில் அனுபவம் பெற்றவர்கள்தான் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விவசாயக் கல்லூரி ஆசிரியர்களுக்கு என்ன என்ன தகுதி வேண்டுமோ அதைப் பார்த்துத்தான் நியமிக்கப்படுவார்கள்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** இந்த விவசாயக் கல்லூரிக்கு முடிவு செய்யப்பட்ட புறம்போக்கு நிலம் எத்தனை ஏக்கர், ஆர்ஜிதம் செய்யப்பட்டது எத்தனை ஏக்கர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது அரசாங்கமே கட்டிடத்திற்காக 92·21 ஏக்கர் எடுத்திருக்கிறது. இன்னும் 89 ஏக்கர் பிரைவேட் லேண்ட்ஸ் அக்வொயர் பண்ண அரசாங்கம் முயற்சி செய்கிறது. சீக்கிரமே அக்வொயர் செய்யும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த விவசாயக் கல்லூரிக்கு செலவினங்கள் ஒதுக்குவதற்கு முன்பு அமைச்சர் அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று விவசாயக் கல்லூரிகளுக்கு இன்னும் எந்தெந்தத் துறைகளிலே முன்னேற்றம் அளிக்கப்படவேண்டும் என்பதை அறிந்து அதன் பிறகு முடிவு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ர. ஜீவரத்னம் :** இரண்டாவது விவசாயக் கல்லூரி மதுரையிலே ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது. வடக்கு வாழ்கிறது, வடக்கு வாழ்கிறது என்று நமது நண்பர்கள் சொல்வது போல், வடக்கு எங்கே வாழ்கிறது என்று தெரியவில்லை. வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஒரு கல்லூரியை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்த ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** குறிப்பிட்ட ஒவ்வொரு ஜில்லா
9-00 a.m. வுக்கும் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** புதிதாகத் துவக்கப்படும் இந்த விவசாயக் கல்லூரிகளைக் கிராமப் பகுதியில் துவக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது துவக்கப்படவிருப்பது கிராமத்தின் பக்கத்தில் தான்.



**திருமதி சி. குழந்தையம்மாள் :** இப்போது போடப்பட்டிருக்கிற எஸ்டிமேட்டின் படி விவசாயக் கல்லூரியில் ஆராய்ச்சியின் மூலமாக விவசாயிகளுக்குச் செலவு செய்யப்படுகிற தொகை எவ்வளவு ? நேரடியாகச் செலவு செய்யப்படுகிற செலவு எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் ? கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ? அல்லது தற்காலிகமாகக் கொட்டகைகள் அமைத்திருக்கிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆரம்ப வேலைக்காக 1,70,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கோவையிலே அமைந்துள்ள விவசாய கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் அதே கல்வியைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடுதான் இந்த விவசாயக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா ? அல்லது சிறப்பாகத் தனிக்கல்வியைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் : :** கோவை விவசாயக் கல்லூரியைப் போன்றேதான் இங்கும் ஆரம்பிக்கப்படும். இங்கே புதிதாக ஏதேனும் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அரசாங்கம் அக்கறை காட்டும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் குறைந்த பட்சம் எவ்வளவு நிலம் வேண்டும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆரம்பத்தில் குறைந்த பட்சம் 300 அல்லது 350 ஏக்கர் நிலம் வேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தஞ்சை ஜில்லாவில் ரெயில்வே செஸ் பண்ட் ஒன்றரை கோடி ரூபாய் இருக்கிறது. டிஸ்டிரிக்ட் போர்டு இருந்த காலத்திலேயே அந்தத் தொகையைக் கொண்டு ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். நிதிவசதி இடம் கொடுக்காவிட்டாலும், அந்தத் தொகையை வைத்தாவது தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மூன்றாவது விவசாயக் கல்லூரியை எங்கு அமைப்பது என்பது பரிசீலிக்கப்படும்போது தஞ்சை ஜில்லாவைக் கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கோவையிலுள்ள விவசாயக் கல்லூரியிலே தற்போது வருஷம் ஒன்றுக்கு 60 மாணவர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். நீலகிரி ஜில்லாவில் இருந்து ஒரே ஒரு மாணவனைத் தான் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆகவே, அந்த எண்ணிக்கையை 90 அல்லது 100 என்று உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** “அக்காமடேஷ”னுக்குத் தக்கபடி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒரேயடியாக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கஷ்டத்தை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் முன் வராது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விவசாயக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கு முதலிடம் தரப்படுகிறதா ? அவர்களுக்குத் தனிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கு முதல் சலுகை அளிக்கப்படுகிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** மதுரை ஜில்லாவில் ஒத்தக்கடைக்குப் பக்கத்தில் கல்லூரிக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் விலை உயர்ந்ததாகவும், தனியாருக்குச் சொந்தமானதாகவும் இருப்பதால் அதற்கு ஏதேனும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? இதை விட நல்ல இடம் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு இல்லையா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கம் பல இடங்களைப் பார்த்து இது தான் நல்ல இடம் என்று தேர்ந்தெடுத்திருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** ஆரம்பிக்கப்பட இருக்கும் விவசாயக் கல்லூரியில் 80 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று அறிகிறேன். ஆரம்பிக்கும்போதே அதிகப்படியான மாணவர்களைச் சேர்ப்பதற்காகத் திட்டமிட்டு ஏற்பாடு செய்துவிட்டால், பின்னால் இட நெருக்கடி ஏற்படாது என்பதை அரசாங்கம் உணருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆரம்பத்திலே மாணவர்கள் குறைவாகத்தான் இருக்கும். போகப் போக எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்றால் அதிகமாக்கிக் கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** விவசாயக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாவட்ட வாரியாகத்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க 300 எக்கர் நிலம் வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலம் நஞ்சையாக இருக்க வேண்டுமா அல்லது புஞ்சையாக இருக்கவேண்டுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நஞ்சையும் வேண்டும்; புஞ்சையும் வேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** விவசாயக் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ள உத்தேசம் உண்டா ? அப்படிப் பெண்கள் விவசாயக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்வருவார்களானால் அவர்களுக்கென்று தனியாக ஹாஸ்டல் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** பெண்களை விவசாயக் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபம் இல்லை. கோவை விவசாயக் கல்லூரியில் ஒன்றிரண்டு பெண்கள் படிக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவசாயக் கல்லூரியில் அதிகமான பெண்கள் வந்து அரைகுறையாகப் படித்தால் கூட அந்த அளவுக்கு நல்லதுதான். டாக்டர் படிப்பு படிக்கிறவர்கள் அரைகுறையாக இருந்தால் தான் ஆபத்தே தவிர, இதைப் பொறுத்த வரை எந்த அளவுக்குப் படித்தாலும் அது பயன் தரும். ஆகவே, அதிகமாகப் பெண்கள் இந்தக் கல்லூரியிலே வந்து சேருவதை வரவேற்கிறேன்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** ஜூனில் மதுரையில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று கூறுகிறார்கள். அப்படியானால் அதற்கான கட்டடங்கள் எல்லாம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அது எந்த நிலைமையில் இருக்கிறது. ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கட்டடம் இப்போது கட்டப்பட்டு வருகிறது. ஜூலை ஆரம்பத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்.



**திருமதி சி. குழந்தையம்மாள் :** எங்களுடைய பகுதியில் பெரும்பாலான விவசாயக் குடும்பங்களில் இருக்கக் கூடிய பெண்களே விவசாயத்தை நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள். என்றாலும் இன்றைய உலகத்தில் படிப்பதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருக்கும் காரணத்தால் விவசாயக் கல்லூரிகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்வதில் தனிச் சலுகைகளைச் செய்து கொடுக்க இந்த விவசாயக் கல்லூரியில் இடம் இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாணவிகள் அதிகமாக வரும் பட்சத்தில் இந்த அரசாங்கம் அவர்களுக்கென்று தனி இடம், மற்ற வசதிகளைச் செய்து கொடுக்க முன் வரும்.

**திரு. நா. இராசாங்கம் :** விவசாயக் கல்லூரியில் சேருவதற்கு குறைந்த பட்சத் தகுதி என்ன ?

**கனம் சபாநாயகர் :** அதெல்லாம்தான் விதிகளிலே இருக்கின்றதே. இதற்குக் கேள்வி வேண்டியதில்லை.

### *Veterinary College at Madurai*

* 200 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Veterinary College in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No.

(*b*) Does not arise.

(அ) ஆம்.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** மதுரையில் சர்வகலாசாலை ஏற்படுத்தப் போவதால் ப்ரொபஷனல் காலேஜும் இணைப்பாக இருக்க வேண்டுமென்ற முறையில் அங்கு ஒரு வெட்டரினரி காலேஜை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு வெட்டரினரி கல்லூரியை மதுரையில் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. இப்போதுதான் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

### தொழில் நிறுவனங்கள் நடத்தக்கூடிய உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்கள்.

*201. **கேள்வி.—திரு. மு. கருணாநிதி; புலவர் கா. கோவிந்தன் :** } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா.

பெரிய தொழில் நிறுவனங்களில் நியாய விலைக்கடைகளையோ அல்லது உபயோகிப்போர் கூட்டுறவு நிறுவனங்களையோ திறக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்திருக்கின்றதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** தொழில் நிறுவன முதலாளிகளின் ஒத்துழைப்புடன் அந்த நிறுவனத் தொழிலாளர்களுக்காக, பயன் கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கும்படி அரசாங்கம் 1962 டிசம்பரில் ஒரு திட்டத்திற்கு அனுமதி

யளித்தது. இத்திட்டம் 250 தொழிலாளர்களும், அதற்கு மேலும் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், மலைத் தோட்டங்களுக்குமே பொருந்தும். இம் மாநிலத்தில், இத்தகைய 150 பயன் கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை (தொழில் நிறுவனங்களுக்காக 100 பண்டகசாலைகள் மலைத்தோட்டப் பகுதிகளுக்காக 50 பண்டகசாலைகள்) அமைக்க உத்தேசித் துள்ளது. பயன்கொள்வோர் பண்டகசாலைகள் இல்லாத இடங்களில் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தும்படி தொழிலாளர் துறை ஆணை யாளருக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இந்த நியாய விலைக் கடைகள் பின்னர் பயன்கொள்வோர் பண்டகசாலைகளாக மாற்றப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தொழில் நிறுவனங்களில் பணி புரிகின்ற வர்களுடைய சம்பளத்தில் ஒரு பகுதியைப் பண்டங்களாகக் கொடுக்க ஏதாவது வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** அந்தத் தொழிலாளர்களுக்குச் சாமான்கள் கொடுக்கப்பட்டு சம்பளத்தைக் குறைத் துக்கொள்ளச் சில இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன் :** தற்போது நகரங்களில் உள்ள கூட்டுறவு ஸ்டோரில் அரிசி கொடுக்கப்படுவதில்லை. அரிசிக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டதால் அங்கே அரிசி கொடுக்கப்படுவதில்லை. தொழிலாளர் லாளர்கள் அந்த ஸ்டோரில் கிரெடிட்டுக்கு அரிசி மற்றும் பல சாமான்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் அரிசியைப் பணம் கொடுத்து வெளியே வாங்க வேண்டியிருக்கிறது. இதுபற்றி சர்க்கார் கவனிக்குமா ?

(பதில் இல்லை.)

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** பெரிய தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக பண்டங்களாகக் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத் தின் சிபாரிசா அல்லது உத்தரவா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** அவ்வாறு கூட்டுறவு சொஸைடிகளை அமைக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ப்ளான்டேஷன் வகையிலே 44 கடைகளும், இண்டஸ்ட் ரியல் எஸ்டாப்ளிஷ்மெண்ட் துறையில் 132 கடைகளும் திறக்கப்பட்டிருக் கின்றன.

## *Co-operative motor transport societies*

* 202 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of co-operative motor transport societies in the State; and

(*b*) the number of vehicles fixed and owned by them?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி! சர்க்கரை மன்ருடியார் :** (அ) இம் மாநிலத்தில் பத்து கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள் உள்ளன.

(இ) இச் சங்கங்கள் இத்தனை வண்டிகள் தான் வைத்திருக்க வேண்டு மென்று உச்ச வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இச்சங் கங்கள் மொத்தம் 4 லாரிகளும், 93 பஸ்களும், ஒரு ஜீப்பும், ஒரு காரும் வைத்திருக்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** இந்த பத்து கூட்டுறவு மோட்டார் போக்கு வரத்துச் சங்கங்களில் எத்தனை லாபத்தில் வேலை செய்கிறது, எத்தனை நஷ்டத்தில் வேலை செய்கிறது ?



**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** நஷ்டம் என்று எடுத்துக்கொண்டால் வேலூர் ஒன்றுதான். மற்றவைகள் எல்லாம் லாபத் தில்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றன.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த பத்து கூட்டுறவு மோட்டார் சங்கங்களில் ஜீப்புகள் இருக்கிறதா ? அந்த சங்கங்கள் எங்கெங்கு பணி யாற்றி வருகின்றன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** மொத்தத் தில் ஒரு ஜீப் இருக்கிறது என்று முன்பே சொன்னேன். நார்த் ஆற்காடு, சவுத் ஆற்காடு, சேலம் கூட்டுறவு மோட்டார் டிரான்ஸ்போர்ட், கோயம்புத்தூர் மோட்டார் டிரான்ஸ்போர்ட், திருச்சி கோவாப்ரேட்டிவ் மோட்டார் டிரான்ஸ்போர்ட், திருநெல்வேலி மோட்டார் டிரான்ஸ்போர்ட், ஈரோடு மோட்டார் டிரான்ஸ்போர்ட்.

The following three societies for civilians have also been formed :—

1. Pudukottai Co-operative Motor Transport Society.
2. Chingleput District Employees' Co-operative Motor Transport Society.
3. Madurai District Co-operative Motor Transport Society.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப் படுகிற மோட்டார் தொழில்களில் ஹரிஜனங்களாகயிருந்தால் முதல் சலுகை கொடுக்கப்படும் என்று முன்பே சொன்னார்கள். இந்த பத்து இடங்களில் ஹரிஜனங்கள் எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** எக்ஸ்-சர்வீஸ் மென் என்ற துறையில் அவர்களும் வந்திருப்பார்கள் என்று தெரிகிறது. உறுதியாகத் தெரிய வேண்டுமென்றால் ஈரோடு கூட்டுறவு மோட்டார் டிரான்ஸ்போர்ட்டில் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ் மணி :** இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப் படுகிற செகரட்டரிகள் மோட்டார் தொழில் தெரிந்தவர்களாக அனுப்பப் படுவது நல்லதல்லவா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** தற்சமயம் மெக்கானிக்ஸ், டிரைவர்கள்தான் மெம்பர்களாக இருக்கிறார்கள். நிர்வா கத்தில் இருக்கிறவர்கள் எப்படியும் இருக்கலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** வடஆற்காடு மாவட்டச் சங்கத்தில்தான் நஷ்டம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த சங்கத்தில் எவ்வளவு வண்டிகள் இருக்கின்றன. எவ்வளவு ஆண்டுக் காலமாக நஷ் டத்தில் நடைபெற்று வருகிறது ?. நஷ்டத்திற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** ஐந்து பழைய வண்டிகள் ரிப்பேர் செய்ததால்தான் அதில் ஏற்பட்ட நஷ்டம்.

**திரு. ம. கமலநாதன் :** மோட்டார் போக்குவரத்து கூட்டுறவுச் சங்கங் களில் எந்த அடிப்படையில் அவர்களுக்கு பஸ் பெர்மிட்கள் வழங்கப் படுகின்றன ? இதில் அரசாங்கம் எதாவது முதலீடு செய்திருக்கிறதா ? அல்லது ஷேர் காபிட்டல் போட்டு பஸ் ஓடுகிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** இதற்கு மத்திய பாங்கிலிருந்து மூன்று ஆண்டில் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடனுகக் கொடுக்கப்பட்டது. நான்காவது திட்டத்தில் பத்து ஆண்டுகளில் அவர்கள் திருப்பிக் கொடுக்கும்படியான வசதி ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** மோட்டார் தொழில் தெரியாதவர்கள் சங்கங்களுக்கு செகரட்டரிகளாக அனுப்பப்படுகிற காரணத்தினால் பல தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதை ஒத்துக் கொள்வதற்கில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கூட்டுறவு மோட்டார் சங்கங்களுக்கு பஸ் பெர்மிட்கள் கொடுப்பதற்கு தனிச் சலுகைகள் ஏதாவது வழங்க வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்கு ஏதாவது உத்தரவு இடப்பட்டுள்ளதா ? இல்லை என்றால் அவ்விதம் உத்தரவு இடப்படுவது நல்லதல்லவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனக்கு தனிக் கேள்வி போட்டால் இதற்குப் பதில் சொல்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** நம் மாநிலத்தில் பத்து மோட்டார் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதேபோல் இந்த மாநிலத்தில் உள்ள தனிப்பட்டவர்களிடத்தில் டாக்ஸி ஓட்டக்கூடிய டிரைவர்கள் இருக்கிறார்கள். அவர்களைச் சேர்த்து ஒரு சொஸைடி அமைத்துக் கொடுத்தால் அரசாங்கம் டாக்ஸி வாங்கப் பணம் கொடுத்து பின்பு மெம்பர்களிடம் இருந்து அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** டாக்ஸி கூட்டுறவு சங்கம் கூட இருந்து இப்போது வேலை செய்துகொண்டு வருகிறது, மதராஸ் நகரத்தைப் பொறுத்தவரையில்.

**புலவர் கா. கோவிந்தன் :** வடஆற்காடு மாவட்டத்தில் சங்கத்தில் எவ்வளவு வண்டிகள் ஓடுகின்றன ? எவ்வளவு ஆண்டுகளாக நஷ்டத்தில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** பத்து ரூட்கள் இருக்கின்றன. இரண்டு ஸ்பேர் பஸ்கள் இருக்கின்றன.

**திரு. ம. கமலநாதன் :** இந்த மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அடிப்படையான விதிகள் யாவை ? மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இப்படி அமைக்க வேறு இடங்களில் முன்வந்தால் அரசு அங்கிகாரம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** டாக்ஸி கூட்டுறவுச் சங்கம் இனிமேலும் ஆரம்பிப்பதற்குச் சர்க்காருக்கு உத்தேசமுண்டா ? அப்படியானால் திருச்சியில் ஆரம்பிக்க அவர்களுக்குச் சலுகை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** நான்காவது திட்டத்தில் இதற்கு நல்ல தொகை ஒதுக்கப்பட்டு இந்த ஸ்கீமை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம். புதியதாக ஏற்பட வேண்டுமென்றால் வேண்டிய வாய்ப்பு வசதி செய்து கொடுப்பதற்கும் உற்சாகமூட்டுவதற்கும் உறுதி கொடுப்பதுதான் நான்காவது திட்டத்தின் முடிவு என்று சொன்னேன்.

**திரு. ர. ஜீவரத்னம் :** வடஆற்காடு ஜில்லா கூட்டுறவு மோட்டார் சங்கம் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நஷ்டத்தில் வேலை செய்யக்கூடிய கூட்டுறவு



ஸ்தாபனம் சுமார் ஒரு லட்சம் ரூபாய் போட்டு அங்கு கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறது. அதை அவர்கள் கட்ட அரசாங்க அனுமதி பெற்றுக் கட்டுகிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** சென்னையில் இருக்கும் டாக்ஸி கூட்டுறவுச் சங்கத்தில் இப்போது பத்து வண்டிகள்தான் இருக்கின்றன. அது லாபத்தில் வேலை செய்வதாகக் கேள்விப்படுகிறேன். அதை அதிகமாக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்களுக்கு 12 வண்டிகள் கொடுப்பதற்கு நம் தொழில் அமைச்சர் அவர்கள் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பத்து வண்டிகள் இப்போது வாங்கப்பட்டிருக்கிறது. இரண்டு வண்டிகள் கூடிய சீக்கிரம் வாங்கி விடுவார்கள் என்று கருதுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—PRIVILEGE MATTERS.

### (1) PUBLICATION OF AN ARTICLE IN THE " NATHIGAM "

**திரு. எம். எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, நம் சட்டமன்றம் பாராளுமன்ற ஜனநாயக முறைப்படி தங்களுடைய சீரிய தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்தச் சட்டமன்றத்தில் கடந்த 1-ம் தேதி நடந்த சம்பவத்தைப்பற்றி சென்னையில் இருக்கிற ஒரு வாரப் பத்திரிகை, நாத்திகம் என்ற பத்திரிகை, 5—3—1965 அன்று ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. அதில் அங்கத்தினர்களின் உரிமைகளைப் பறிக்கிற அளவிற்கும் மக்கள் இந்தச் சட்டமன்றத்தில் உள்ள அங்கத்தினர்களைக் கீழ்த்தரமான முறையில் நினைப்பதற்கும் அந்த எழுத்து ஏதுவாக இருக்கிறது. எனவே அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அன்று எழுதப்பட்ட பிரசுரத்தில், "பொதுவாழ்க்கைக்கும் மக்கள் தொண்டுக்கும் சிறிதும் யோக்யதை அற்ற அசல் ரௌடிக் கூட்டம்தான் ஒரு கட்சியாக இயங்கி வருகிறது" என்று வெளியிடப்பட்டிருக்கிறது. தலையங்கத்தில் " சென்னை சட்டமன்றத்தில் ரௌடிகள் வெளி நடப்பு" என்று இருக்கிறது. இது அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்ல. " சென்னை சட்டமன்றத்திற்குள்ளே நடந்த சின்னத்தனம் சிகரம் வைப்பதைப்போல் உள்ளது" என்று இங்கு நடைபெறும் சம்பவங்கள் மிகச் சின்னத்தனமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை சட்டமன்றத்திலே வெளி நடப்புகள் நடத்திய இழி மக்களைப்போல், "இதைவிட இழிவான வார்த்தைகளே கிடையாது —இழி மக்களைப் போல்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். " மன்றத்தை விட்டு வெளியேறிய மூடர்கள்" என்று இங்குள்ள அங்கத்தினர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு பிரதிநிதித்துவம் வகிக்கிற அங்கத்தினர்களை மூடர்கள் என்று ஒரு பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. கனம் சபாநாயகர் அவர்களையும் இதில் இழுத்திருக்கிறார்கள். மேலும் அந்தப் பத்திரிகை சொல்லுகிறது.... "ஆனால் சில ரௌடிகளை அம்மன்றத்திற்குள்ளே தமிழகம் அனுப்பிய பலனை இன்று அனுபவிக்கிறது..." என்று பொதுமக்களைக் கேலி செய்கிறது. இங்கே மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் தினசரி அலவன்ஸ் 15 ரூபாய் என்று இருக்கும்போது அதை உண்மைக்கு மாறாகச் சொல்லு

[திரு. எம். எஸ். மணி] [10th March 1965

கின்ற அளவில் இந்தப் பத்திரிகை மேலும் சொல்லுகிறது....."அரசாங்கப் பணத்தில் மாதம் 250 ரூபாய் வாய்க்கரிசியும், தினசரிப்படி 25 ரூபாயும் வாங்கிக்கொண்டு அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருக்கும் இந்த பெரு டிகள்.." என்று அங்கத்தினர்களுக்கு வாய்க்கரிசி போடுவதாகக் குறிப்பிட் டிருக்கிறது. இத்துடன் அந்தப் பத்திரிகை நின்று விடவில்லை, இந்தச் சபையைச் சரிய முறையில் நடத்திச் சென்று கொண்டு இருக்கும் கனம் சபாநாயகர் அவர்களையும் இழுத்திருக்கிறது. இதே பத்திரிகை மேலும் குறிப்பிடுகிறது.." இதற்கு சபாநாயகர் அவர்கள் எப்படித்தான் அனுமதித் தார்களோ தெரியவில்லை.." என்று நிகழ்ச்சிகளை அனுமதித்த கனம் சபாநாயகர் அவர்களையும் இழுத்திருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்கள் இதற்குப் பொதுமக்களுக்கு எப்படி பதில் சொல்லப்போகிறார்களோ தெரிய வில்லை. இப்படிப்பட்ட நிலையில் எழுதுகின்ற இதே பத்திரிகை இதற்குமுன் பல சம்பவங்களில் ஏற்கெனவே தப்பு செய்து கோர்ட்டுகளில் அபராதமும் கட்டியிருக்கிறது. இதில் குறிப்பிட்டிருக்கின்ற விஷயங்கள் எல்லாம் இந்த மன்றத்தின் அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாகவும் கனம் சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பைக் கேள்வி செய்வதாகவும் அமைவதால் இதை உரிமைக் கமிட்டிக்குத் தாங்கள் அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Is this against the Editor alone or against the printer and others also?

SRI M. S. MANI : It is against all, Sir.

MR. SPEAKER : I find that there is a *prima facie* case. It is a clear case of breach of privilege.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்ற அங்கத்தினர்களின் உரிமையைப் பாதிக்கின்ற விதத்தில் "நாத்திகம்" என்ற பத்திரிகை எழுதியிருக்கின்ற காரணத்தால், இதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக, இதன் மீது எழுதப்பட்ட விஷயத்தை உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று பிரேரேபிக்கின் றேன்.

Sir, I move—

" That the matter of privilege regarding an article published in the Tamil Weekly 'Nathigam', dated 5th March 1965 be referred to the Committee of Privileges."

SRI A. P. DHARMALINGAM : Sir, I second the motion.

The motion was put and carried and the matter was referred to the Committee of Privileges.

(2) ALLEGED TREATMENT METED OUT TO SRI M. RAJANGAM, M.L.A., WHILE IN POLICE CUSTODY.

MR. SPEAKER : The House is aware that I have reserved my ruling on the matter of breach of privilege raised by the hon. Member Sri S. Madhavan, regarding the assault or ill-treatment on the person of Sri M. Rajangam, M.L.A., at the time of his arrest when he was engaged in the work of his Constituency.

The Hon. Chief Minister denied the fact of any assault or ill-treatment as alleged and also stated that any such question of ill-treatment could be raised before the Magistrate before whom he was produced or who was enquiring into the case.



10th March 1965] [Mr. Speaker]

Article 194 (1) and (2) of the Constitution specifies certain privileges of the Members of the State Legislatures. Article 194 (3) states that other privileges can be defined by the Legislature by law and until they are so defined they should be the same as those of the House of Commons of the United Kingdom on the date of the commencement of the Constitution, viz., 26th January 1950.

The privileges of the Members of the House of Commons have been evolved and grown for several centuries. The latest decision, after reviewing the various parliamentary decisions on the question of privilege, was in 1939 in the case of Capt. Ramsay, where the Committee of Privileges of the House of Commons declared the law as follows :—

" The precedents lend no support to the view that Members of Parliament are exempted by privilege of Parliament from detention under Regulation 18-B of the Defence (General) Regulations, 1939. Preventive arrests under statutory authority by executive order is not within the principle of the case to which the privilege from arrest has been decided to extend. To claim that the privilege extended to such cases would be either the assertion of a new parliamentary privilege or unjustified extension of an existing privilege."

This decision has been followed by our Legislatures on several occasions. The latest case in our Legislature is the one in which Sri M. Kalyanasundaram, M.L.A., raised a question of breach of privilege when he was arrested under Rule 30 of the Defence of India Rules. This case was decided by me in February 1963 in which it was held that no breach of privilege arose when arrested under the Preventive Detention Act.

The West Bengal case cited by Sri Madhavan is one of 1954 and I am not able to find a decision of the Privileges Committee or the decision of the House of the Legislature there. However, the question now before us is not relating to any arrest under any Preventive Detention Act. Therefore, that ruling is not in any way useful to decide the present case.

Sri Madhavan has quoted another ruling of the House of Commons, reported in May's Parliamentary Practice at page 122 in which one Mr. Mason, a constable and Mr. Carne, a High Constable were found guilty of apprehending, insulting and abusing a Member of Parliament in the Liberty of the West minster on a particular night in the year 1751. That is a case of molesting a member within the precincts of the House of Commons, and as hon. Members are aware, the Liberty of Westminster is part of the House of Commons. So, that ruling also is not in any way useful to canvass a point of privilege in this case.

Sri Madhavan himself has not raised that the arrest itself on a criminal charge is a breach of privilege, since it is a well established principle that the right of privilege could not interfere with

the administration of criminal justice, but is limited to civil cases only. I have received intimation from the Police and Judicial Sub-Magistrate, Uthamapalayam, that Sri M. Rajangam has been arrested on criminal charges and remanded to custody by the Judicial Sub-Magistrate and that he has been lodged in the Central Jail, Madurai. When the arrest and custody do not constitute a breach of privilege, the further question arises whether any ill-treatment or assault in the course of arrest or detention can be the basis of such a motion.

Again, it is established by rulings and convention in the British Parliament that assaulting, insulting or menacing any Member of the Parliament in his coming to or going from the House, or upon the account of his behaviour in Parliament, is a high infringement of the privilege, and that it is a gross breach of privilege of the House to endeavour to compel the members by force or influence in favour or against any proposition brought up before the House. The facts of the present case raised by Sri Madhavan do not make out anything like that.

Sri M. Kalyanasundaram stated that it had been held that handcuffing of a member of the Legislature arrested by police is a breach of privilege, though the arrest may be regular. The Privilege Committee of the Lok Sabha has expressed an opinion that in the light of the rules laying down conditions under which handcuffs are to be used, the police officers of the Punjab State committed no irregularity under the law in attempting to handcuff a member of the Parliament. The Hon. Speaker on that report raised a question whether it would be desirable to provide that a Member of Parliament, who is under arrest on a criminal charge, should ordinarily be exempted from being handcuffed. The Committee, after going through several circulars of the Government, directed that handcuffs should not be used as a matter of routine in the case of every under-trial prisoner or a convict, but the use should be restricted to desperate prisoners or when there were reasonable grounds to believe that he would use violence or attempt to escape, and also recommended to the State Government to stress upon them the desirability of strictly complying with the rules, especially in the case of Members of Parliament in view of their high status. There is no decision that handcuffing did involve a breach of privilege. Nor is that matter in question before me.

Another point raised by Sri Madhavan and also the Leader of the Opposition is whether a new privilege can be established on this matter by referring this matter to the Committee of Privileges. Unless the so-called new privilege comes under express or implied rulings or conventions existing as a privilege of the House of Commons and its Members in the year 1950, we cannot make a new privilege by merely referring the matter to the Privileges Committee.



In the result, I do not find a *prima facie* case be referred to the Committee of Privileges.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66—*cont.*

### DEMAND No. XXIV—LABOUR INCLUDING FACTORIES

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,61,96,000 under Demand XXIV—Labour including Factories."

**திரு. எம். எஸ். மணி:** ஸார், சர்க்கார் தொழில் சட்டங்களைத் திறமை
யான வகையில் அமுல் நடத்தத் தவறியது என்று சுட்டிக்காட்ட என்
பெயரில் இருக்கும் கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 1,61,96,000 under Demand No. XXIV—Labour including Factories—be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

***திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தொழில் தகராறு 9-30
களைத் தீர்ப்பதிலும், தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்வதிலும் a.m.
சுதந்திரத்திற்குப் பின்னாலே நம் அரசாங்கம் பல நல்ல நடவடிக்கைகளை
எடுத்து வந்திருக்கிறது. அரசாங்கம் தந்திருக்கும் குறிப்பிலே கூட என்
னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இன்னும் கொஞ்சம்
விளக்கமாகச் சொல்லியிருக்கலாம்—ஆங்காங்கு கோடிட்டுக் காட்டியிருக்கிறார்
கள். பொதுவாகக் கொள்கை அளவிலே, சோஷலிசக் கொள்கையை
ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, பொதுத் துறையில் பல தொழிற்சாலைகள் ஆரம்
பிக்கப்பட்டிருக்கின்றன. பொதுத் துறையிலே இருக்கக்கூடிய தொழிலா
ளர்களுக்கும் சம வாய்ப்பை, எந்த வசதிகளை மற்றத் தொழிலாளர்களுக்குக்
கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறதோ, வற்புறுத்துகிறதோ,
அதே வாய்ப்பு வசதிகளைப் பொதுத் துறையில் இருக்கும் தொழிலாளர்
களுக்கும் கொடுக்க இந்த அரசு தவறி இருக்கிறது என்று நான் சுட்டிக்
காட்ட ஆசைப்படுகிறேன். தனிப்பட்ட நிருவனங்களில் உள்ள தொழி
லாளர்களுக்கு இன்ன இன்ன சட்டப்படி இன்ன இன்ன குறைகளை நிவர்த்
திக்க வேண்டுமென்று சர்க்கார் அப்போதைக்கப்போது வற்புறுத்தி வந்திரு
கிறது. அந்த நிலை பொதுத் துறையில் பின்பற்றப்படவில்லை என்பதை,
சமீபத்திலே மத்திய சர்க்காரிலே தொழில் அமைச்சராக இருக்கக் கூடிய
திரு. சஞ்சீவய்யா அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நம் அமைச்சரின் கவனத்
திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அவர் உரையிலே இன்னொரு
கருத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுத் துறையில் இருக்கும் அதி
காரிகள் தொழிலாளர்களைத் தொழிலாளர்களாக மதிக்கக் கூடியவர்களாக
இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட நிருவனங்களில்
உள்ளவர்கள் தொழிலாளர்களை எப்படி எப்படி நடத்திச்செல்ல வேண்டு
மென்று சொல்லுகிறோம். ஆனால் பொதுத் துறையில் இருக்கின்ற அலு
வலர்கள் தொழிலாளர்களை மதிக்கும் அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட
வில்லை, அல்லது மதிக்கும் பண்பாட்டில் வளர்க்கப்படவில்லை என்பதை
மத்திய அமைச்சர் குறிப்பிட்டிருப்பதை நம் அரசாங்கத்தின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணங்கள் மூலமாகக்கூட
இதை விளக்க முடியும். உதாரணத்திற்கு, எலக்ட்ரிசிடி போர்டு இன்
றைக்குப் பொதுத் துறையில் நடத்தப்பட்டு வருகிறது. அந்த மின்சார
இலாகாவினிடம் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் ஏற்கனவே அரசாங்க

[திரு. செ. மாதவன்] [10th March 1965

ஷிப்பந்திகளாக நடத்தப்பட்டார்கள். அதற்குப் பின்—அது ஒரு ஸ்டாச்சுட்டரி
பாடியாக ஆக்கப்பட்டதற்குப் பின்—தொழிலாளர்களுடைய நிலைமை திரி
சங்கு சொர்க்க நிலையில் தான் இருக்கிறது. அரசாங்கம் கொடுத்த நன்
மைகளும் போய்விட்டன. தொழிலாளி என்ற முறையில் சட்டத்தின் கீழ்
நன்மை பெறக் கூடிய வாய்ப்பையும் இழந்து வருகிறார்கள். இதை அர
சாங்கம் தொடர்ந்து மறுத்து வருகிறது. இதற்கு என்ன காரணம்
என்று எனக்குப் புலப்படவில்லை. தனிப்பட்டவர்களாக இருக்கக் கூடியவர்
கள், மானேஜ்மெண்டில் இருக்கக் கூடியவர்கள் அரசாங்கம் சொல்லக்கூடிய
ஒரு கருத்தை எதிர்த்து லேபர் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அதற்கு
மேல் உயர் நீதி மன்றத்திற்குச் செல்லுகிறார்கள். அதற்கு மேல்
லெட்டர்ஸ் பேட்டண்டின் கீழ் டிவிஷன் பெஞ்சுக்குச் செல்லுகிறார்கள்.
சர்க்கார் நங்களுடைய கொள்கைக்கு முரண்பட்டதாக இருந்தால் அவர்கள்
செல்லுகிறார்கள். சர்க்காரே இப்படிப்பட்ட நிலையைப் பின்பற்றும்போது
வருத்தப்படக் கூடியதாக இருக்கிறது. ஆதியிலே, எலக்ட்ரிசிடி போர்டு
பிரச்சினை பற்றி வந்தபோது மெட்ராஸ் ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்ளிஷ்
மெண்ட்ஸ் ஆக்டின் கீழ் அந்தத் தொழிலாளர்கள் வருவார்களா என்ற
பிரச்னை எழுப்பப்பட்டது. லேபர் கமிஷனர் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்
தொழிலாளர்களுக்குச் சாதகமாக. அதை எதிர்த்து சர்க்கார் ஹைக்
கோர்ட்டிலே ரிட் போட்டார்கள். சர்க்கார் ரிட்டிலும் தோல்வி அடைந்தார்
கள். அதன் பிறகு லெட்டர்ஸ் பேட்டண்டில் அப்பீல் போட்டார்கள்.
அதிலும் தொழிலாளர்களுக்குச் சாதகமாக, சர்க்காருக்கு எதிராகத் தீர்ப்பு
வழங்கப்பட்டது. இப்படி இரண்டு கோர்ட்டுகளில் தீர்ப்பு வழங்கப்பட்ட
பிறகுகூட, அந்தச் சட்டத்தின் பெயரால் நன்மைகளைப் பெற மின்சார
இலாகா ஊழியர்கள் தகுதி பெற்றவர்கள் என்ற உத்திரவாதம் அளிக்க
சர்க்கார் இது வரையில் முன்வரவில்லை. என்ன காரணம் என்றும் தெளி
வாகக் குறிப்பிடப்படவில்லை. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு தவரு?
அரசாங்கச் சட்டத்திற்கு முரணாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதா? அதைப்
பரிசீலிக்கக் கூட மறுத்திருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம்
என்ன என்பதை இது வரையில் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிய
வில்லை. இப்படி ஒவ்வொன்றிலும் செய்கிறார்கள். திருவாங்கூர்-கொச்சி
யிலிருந்து நம் மின்சார இலாகாவிற்குச் சிலரைத் தந்தார்கள். 1959-ம்
ஆண்டு மின்சார இலாகாவிற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே எற்பட்ட
ஒப்பந்தத்தின் பிரகாரம் நன்மைபெற உரிமை உண்டு என்ற பிரச்னை. இது
அரசாங்கத்தோடு பேசித் தீர்க்கப்படவில்லை. பிரச்னை கோர்ட்டுக்குப் போனது
சாதாரணப் பிரச்னை, ஒப்புக்கொண்ட ஒப்பந்தம், ஒப்பந்தத்தின் கீழ் ஒரு
பகுதியினர் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயன்பெறுகிறார்கள் என்ற
இந்தப் பிரச்னையைக் கூட இரக்க சிந்தனையோடு தீர்க்க முன்வரவில்லை.
பிரச்னை லேபர் கோர்ட்டுக்குப் போயிற்று. லேபர் கோர்ட்டின் தீர்ப்புக்குப்
பிறகு பிரச்னை உயர் நீதி மன்றத்திற்குச் சென்றது. உயர் நீதி மன்றத்
தின் தீர்ப்புக்குப் பின் அவர்களுக்குள்ள நன்மையைக் கொடுக்க அவர்கள்
முன் வந்தார்களா என்றால் இது வரையில் இல்லை என்று எனக்கு வந்த
தகவல். ட்ரைபார்டைட் அக்ரிமெண்ட் என்று தொழிலாளர் தகராறில்
பார்க்கிறோம். இந்தத் தீர்மானங்களை ஒப்புக் கொள்ள வேண்டும். அவை
களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது எற்கனவே பின்பற்றி வரும்
கொள்கை என்பதை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.
மின்சார போர்டு சம்பந்தப்பட்ட அளவில் இதுவும் மீறப்பட்டிருக்கிறது.
மூன்று பேர்களும் சேர்ந்து முக்கூட்டாகத் தீர்மானம் போட்டார்கள்.
அதிலே முக்கியமாகக் கூறப்பட்டது, பே ஸ்கேலை ரிவைஸ் செய்வதற்கு
முன் தொழிலாளர்களைக் கலக்க வேண்டும், வொர்க்கிங் அவர்ஸை அதிகப்
படுத்துவதற்கு முன் தொழிலாளர்களைக் கலக்கவேண்டும் என்று ஒப்புக்
கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்போது தொழிலாளர்கள் இருந்
திருக்கிறார்கள். போர்டு நிருவனத்தார் இருந்திருக்கிறார்கள், சர்க்கார்
அதிகாரி இருந்திருக்கிறார்கள், ஆனால் தொழிலாளர்களைக் கலக்காம
லேயே வேலை நேரத்தை அதிகம் ஆக்கினார்கள். உடனே அந்த ஒப்பந்
தத்தைத் தொழிலாளர்கள் டெர்மினேட் செய்யும் அளவுக்கு நிலைமை
வளர்ந்து விட்டது. என் இப்படிப்பட்ட நிலைமை? மின்சாரக் கழகம்
என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே எற்றுக்கொள்ளக் கூடிய நிலை
தான் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை . . .



10th March 1965]

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே,
கனம் அங்கத்
மின்சார இலாகாவிற்கும், மின்சார போர்டுக்கும் உள்ள தொடர்பை அங்கத்
தினர்கள் தெரிந்துகொள்வார்களானால் அவர்கள் இந்தப் பிரச்னையில்
சர்க்காருக்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்று உணர்ந்துகொள்ள முடி
யும். எலெக்ட்ரிசிடி ஆக்ட் பிரகாரம் எல்லாவிதமான இன்டர்னல்
வொர்க்கிங், அட்மினிஸ்ட்ரேஷன் எல்லாம் எலெக்ட்ரிசிடி போர்டைச் சேர்ந்
தது. அது அட்டானமஸ் பாடி. சர்க்காரைக் கேட்டு அப்பீல் போட
வேண்டியதில்லை. இதற்கெல்லாம் சர்க்காரைக் கேட்கவேண்டியதில்லை.
என்ன சம்பளம் கொடுக்க வேண்டும், என்ன வீதம் கொடுக்க வேண்டும்,
என்று சர்க்காரைக் கேட்டுச் செய்ய வேண்டியதில்லை. சர்க்காருக்கும்,
போர்டுக்கும் தொடர்பு என்ன என்றால், சர்க்கார் இவ்வளவு எலெக்ட்ரி
சிடி உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்னால் இத்தனை கோடி பணம்
வேண்டும் என்று சொல்லுவார்கள். இத்தனை வேண்டுமென்று கேட்டால்
நாங்கள் இவ்வளவு கொடுக்க முடியும் என்று சொல்லுகிறோம். அட்டான
மஸ் பாடியாக இருப்பதால். அவர்கள் அப்பீல் செய்வதோ, வீதங்களை
நிறைவேற்றிக்கொள்வதோ, மாறுதல்கள் செய்வதோ அவர்கள் பொறுப்பு,
இதில் சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம்
தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எலெக்ட்ரிசிடி போர்டானது
ஸ்டாச்சுட்டரி பாடி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எலெக்ட்ரி
சிடி போர்டானது நம்முடைய சர்க்காரினாலே நியமிக்கப்படுகிறது. நமது
சர்க்காரினாலே நியமிக்கப்பட்டு, அதன் அமைப்பு முறை இந்தச் சர்க்காரினால்
நிர்ணயிக்கப்படுவதாக இருப்பதால், அது அமல்படுத்தும் தொழில் கொள்
கைக்கு இந்தச் சர்க்காரும் பொறுப்பாக இருக்கிற காரணத்தினால் இதைப்
பற்றி விவாதிக்கவும் உரிமை இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட மட்டில்
சர்க்காருக்குத் தொழிலாளர் விவகாரத்தில் பொறுப்பு இருக்கிறது. அந்தப்
பொறுப்பைப் பற்றித் தான் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள்
சொல்லுகிறார்கள். ஆகவே இது இந்த மான்யத்தின் கீழ் விவாதத்திற்கு
வரும் என்று கூறிக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நான் இங்கே விவாதிக்கக்கூடாது
என்று சொல்லவில்லை. விளக்கினால் சர்க்காருடைய பொறுப்பு என்ன,
போர்டினுடைய பொறுப்பு என்ன என்பது தெரியும். கனம் அங்கத்தினர்
சொல்லட்டும். பிறகு வேண்டுமானால் நான் சொல்லுகிறேன்.

**திரு. செ. மாதவன் :** இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருந்தால்
நான் விளக்கியிருப்பேன். மின்சாரக் குழுவிற்குள்ளே அவர்களுக்கும்
தொழிலாளிகளுக்கும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி நான் குறிப்பிட
வில்லை. அது முடிந்து அதற்கு அடுத்த கட்டத்தில் தான், சர்க்கார்
புகுகின்ற அந்தக் கட்டத்தில் தான் அரசாங்கம் செய்ய வேண்டியதைச் செய்ய
வில்லை என்று குறிப்பிடுகிறேன். உயர் நீதி மன்றத்தில் The first
respondent is the State Government. நம்முடைய மாகாண சர்க்கார்
அதிலே பார்டியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நமது மாகாண சர்க்கார்
சட்டப்படி சில நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டது.

இன்னொரு உதாரணம் கூற விரும்புகிறேன். பாக்டரி சட்டப்படி சில
நிகழ்ச்சிகள் நடைபெற்றால், ஒரு ஆக்ஸிடெண்டு நடந்தால் அதை உடனே
சீப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும், அங்கே சீப் இன்ஸ்பெக்டர்
உடனே போகவேண்டும், அவர் ஒரு ரிப்போர்டு சமர்ப்பிக்கவேண்டும், அதற்
குப்பின்னால் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுதான் இருக்கக்கூடிய சட்ட
விதி. இன்றைக்கு மின்சாரக் குழுவில் எதாவது ஆக்ஸிடெண்ட் நடந்
தால், அதைப்பற்றி அவர்கள் தெரிவிக்காமல், அதை "ரெக்டிபை" செய்து,
அதற்குப் பின்னால் தான் சீப் இன்ஸ்பெக்டருக்கு ரிப்போர்ட் அனுப்புகிறார்
கள். இதனால் ஆக்ஸிடெண்ட் என் எற்பட்டது, அவர்களுக்கு என்ன
காம்பென்ஸேஷன் கொடுக்க வேண்டும், தொழிலாளர்கள் மீது என்ன
தவறு இருக்கிறது என்பதைத் தெளிவாக்குதவதற்கு வழி இல்லாமல்
செய்யப்படுகிறது. பாக்டரீஸ் ஆக்ட் மீறப்படுகிறது மின்சாரக் குழுவினால்.

[திரு. செ. மாதவன்] [10th March 1965

இதனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் அங்கே அரசாங் கம் நடவடிக்கை எடுக்கத் தவறுகிறது. அரசாங்கம் செய்யத் தவறிய சில நிலைமைகளைத் தான் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். அர சாங்கமும் ஒரு பாட்டியாகச் சேர்ந்து முதலில் தொழிலாளியோடு ஏற்படுத்தப்பட்டது 1958-ல். அது ஒரு ரிவைசிடு சம்பளத்திருக்கிறது. அதை இது வரையில் அமுல் படுத்துவதற்கு அந்த விதமான நடவடிக்கை யும் எடுக்கவில்லை. அதற்குப் பின்னாலே 1959-ம் வருடம் பிப்ரவரி மாதம் 3-ம் தேதியில் இந்த சர்க்காரும் சேர்ந்து, மனுஷன் செக்ரடரியும் அதில் கலந்து கொண்டிருக்கிறார். ஒரு அக்ரிமென்ட் நடைபெற்றிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில் இந்த சர்க்கார் கையெழுத்திட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் மீறப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? அப்பொழுதாவது இந்த சர்க்கார் தலையிடலாம் அல்லவா, அது தனிப்பட்ட பாடியாக இருந்தா லும் என் தலையிடவில்லை? 1960-ல் உடனே ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத் தார்கள். வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் 12-வது பிரிவிலே கன்ஸிலி யேஷனுக்கு லேபர் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது. லேபர் கோர்ட் ஒரு தீர்ப்பு கொடுத்தது. அந்தத் தீர்ப்புக்குப் பின்னாலே அரசாங்கம் அதைப் பரிசீலிக்க வேண்டும் செக்ஷன் 10-ன் படி. முதலில் லேபர் கோர்ட்டுக்கு அனுப்பலாமா, அனுப்பக் கூடாதா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். அந்தப் பொறுப்பை அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது. அந்தப் பொறுப்பைச் சரிவர செய்ய வில்லை. உடனே ஒரு உத்தரவு போட்டார்கள். உத்தரவுகூட போடவில்லை முதலில். உடனே உயர் நீதி மன்றத்திற்கு கேஸ் போயிற்று. உயர் நீதிமன்றத்தில். . . . . . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த கேஸ் அப்பீலில் இருப்பதி னால் இதுவரையிலும் நான் சொன்னது சரி. அதற்கு மேல் சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். . . .

**திரு. செ. மாதவன் :** லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் இருப்பது எனக்கும் தெரியும். நான் குறிப்பிட விரும்புவது ஒரு சட்ட நிகழ்ச்சி. இண்டஸ்ட்ரி யல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின் கீழ் இந்தச் சர்க்காருக்கு சில கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளை இந்த சர்க்கார் செய்யத் தவறி விட்டது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது அப்பீலில் இருப்பது அது தான். இப்பொழுது அப்பீலில் இருப்பது என்னவென்று சொன் னால், நம்முடைய சர்க்கார் வாதம், எலெக்ட்ரிசிடி போர்டு வொர்க்கர்ஸ் வாதம் இரண்டும் இருக்கிறது. வொர்க்கர்ஸ் வாதம் தங்களை சாதாரண தொழிலாளர்கள் போல் நடத்த வேண்டும் என்பது. சர்க்கார் வாதம், சர்க்கார் ஊழியர்கள் போல், அவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், சர்க்கார் ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுத்துக்கொண் டிருக்கிறோமோ அந்தச் சலுகைகளெல்லாம் அவர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது. சம்பளக் கமிஷன் ரெகமென்டேஷன் படி அவர்களுக்கு சம்பளம் கொடுத்தோம். சர்க்கார் ஊழியர்களுக்கு "டிய ர்னஸ் அலவன்ஸ்" உயர்த்தப்பட்ட பொழுது அவர்களுக்கும் உயர்த் தினோம். இன்னும் அவர்களுக்கு வைத்திய வசதி குறைவாக இருந்ததை சர்க்கார் ஊழியர்களுக்கு வைத்திய வசதி கொடுத்திருப்பது போல், அவர் களுக்கும் வைத்திய வசதி செய்து கொடுத்தோம் என்பது தான் சர்க்கார் வாதம். எது சரி அல்லது இல்லை என்று நான் சொல்லவில்லை. அந்த வாதத்தின்படி உயர் நீதி மன்றம் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. அதற்கு மேல் அப்பீல் இருக்கிறது. ஆகவே, அது அப்பிலில் இருக்கும் பொழுது திரு. மாதவன் அவர்கள் தன்னுடைய வாதத்தை, ஆர்க்யூ செய்தார்களானால், எனக்கு அதைவிடக் கொஞ்சம் அதிகமாக வாதம் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தொழில் அமைச்சர் அவர்கள் இது அப்பீலில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கனம் மாதவன் அவர் கள் "சர்க்கார் வரையறுத்த கொள்கைகளுக்கு சர்க்காரால் பிரகடனப்படுத்தப் பட்ட கொள்கைகளுக்கு விசுவாசமாக நடந்துகொண்டார்களா" என்பதைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.



10th March 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

Whether they are faithful to the policy adumbrated or enunciated by them is the question.

MR. SPEAKER : The hon. Member can speak on that aspect without referring to the facts of the case.

SRI K. A. MATHIALAGAN : The matter can be discussed in a general way as to whether they are faithful to the policy which they have adumbrated or enunciated. The point is whether they are sincere to the policy they themselves have enunciated.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எலக்ட்ரிசிடி போர்டைப் பொறுத்த மட்டில், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறியபடி அது அடானமஸ் பாடி. அதை அரசாங்கம் தான் அமைக்கிறது என்றாலும் அந்த அடானமஸ் பாடியாக இருப்பதனால், அரசாங்கம் ஒரு கொள்கை நிர்ணயிக்கிறது, ஒன்றைச் செய்ய வேண்டும் என்று சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்ளா மல் இருக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. வழக்கு தொடர்ந்து அதில் ஏற்பட்ட தீர்ப்பின் மேலே லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் செய்தால், அப்பீல் செய்யக் கூடாது, வழக்கு தொடரக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுவதற்கில்லை. அரசாங்கக் கொள்கை எப்படியிருந்தாலும், அர சாங்கத் தொழிலாளர் இலாகா விரும்பினாலும், அவர்கள் அதற்கு மேல் வழக்கு தொடர்ந்தால், அப்பீல் செய்தால், அப்பீல் செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுவதற்கு இல்லை, தொழில் இலாகா உத்தர விடுவதற்கில்லை. மின்சார இலாகாவும் அம்மாதிரி உத்தரவிடுவதற் கில்லை. அது அட்டானமஸ் பாடி.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் அப்பீல் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. தொழிலாளர் நலனுக்கு என்ன கொள்கைகள் வைத்திருக்கிறோமோ, அந்த அடிப்படையைப்பற்றி விமர்சனம் செய்வதற்கு உரிமை இருக்கிறதா என்பதை. . . . . . .

**கனம் சபாநாயகர் :** அது உண்டு. ஆனால் கேஸ் இருக்கிறது.

So, the hon. Member should not refer to the facts of the case. In theory, the hon. Members may say so many things. In theory, the hon. Members may say what a murder is and what the consequences of a murder are and such other matters. They can explain such matters in a general way. But, when cases are pending in a Court of law, it will not be in order for the hon. Members to make a reference to the facts of these particular cases. After all, the hon. Member Sri S. Madhavan knows well what is meant by '*sub judice*'.

**திரு. செ. மாதவன் :** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னது போல கேஸைப் பற்றிப் பேசவில்லை. ஆனால் இன்னொரு கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். செக்ஷன் 10-ன் படி இந்த சர்க்கார் தன் னுடைய கடமையைச் செய்தார்களா? அது தான் பிரச்னை. அது தான் என்னுடைய குற்றச்சாட்டு. ரெபர் செய்யவில்லை என்பதற்குக் காரணம் கொடுக்க வேண்டும் என்று உயர் நீதி மன்றம் சொல்லியிருக்கிறது. பல தீர்ப்புகளில் உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. **"in expedient to refer"** என்று மட்டும் சொல்லியிருப்பது தவறு என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am sorry, that is exactly the matter in appeal. Whether it is enough for the Government to say 'inexpedient to refer' is the question under

[Sri R. Venkataraman] [10th March 1965

appeal. The contention of the Government is that in exercise of the powers under section 10,—the Government thinks after going through the facts—it is enough to say that it is "inexpendient to refer". The decision is that we must give more reasons. That matter has again been taken on appeal. Now, the hon. Member is speaking about the same question which is directly before the court of appeal.

**திரு. செ. மாதவன் :** அதற்குப் பின்னுலே "ஷாப் அண்டு எஸ்டா
பிளிஷ்மெண்ட்" ஆக்ட் பற்றி சொன்னேன். செக்ஷன் 41 பற்றி பல
தடவை சொல்லியிருக்கிறேன். நாம் சொல்லுவதற்கு அமைச்சர் அவர்
களிடமிருந்து பதில் சில சமயங்களில் தான் வருகிறது. வராத பதில்
களைப் பொறுத்த வரையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டால்,
திரும்பவும் அதைப்பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது.
அமைச்சர் அவர்களின் அறிக்கையில் செக்ஷன் 41 பற்றி சொல்லப்
பட்டிருக்கிறது. அதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று மட்டும்தான்
சொல்லப்பட்டிருக்கிறது. செக்ஷன் 41 "ரீஇன்ஸ்டேட்மெண்ட்" பற்றியது.
"ரீஇன்ஸ்டேட்மெண்ட்" செய்ய மறுக்கிறார்கள் மானேஜ்மெண்ட். அதற்கு
என்ன பரிகாரம் ? ஒன்றும் செய்ய முடியாது. சர்க்கார் "ப்ராஸிக்யூஷன்"
செய்யலாம். ரூபாய் 25, 50 அபராதம் விதிக்கப்பட்டால் கட்டி விடுகிறார்கள்.
ஆனால், அந்தத் தொழிலாளியினுடைய வேலை பாதிக்கப்படுகிறது. இதில்
சர்க்கார் என்ன செய்யப் போகிறது? அதற்கு விளக்கம் இந்த அறிக்கையிலே
இல்லை. அப்படி ஒரு முயற்சி இருக்கிறது. ஒரு தீர்மானம் வந்திருக்கிறது;
பரிசீலிக்கப் போகிறோம் என்று மட்டும்தான் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்
கிறது. இதுவரையில் உயர் நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளைச் சட்ட
மன்றத்திலே முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அதற்குப் பின்னுலாவது
இதற்கு விமோசனம் தேட அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிலே அட்வைசரி போர்டு வேண்டும்
என்று ஸ்டேட் கான்ஃபரன்சிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்தத்
தீர்மானத்தையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு
கிறேன். இதே தீர்மானத்திலே, ஃபேர் ப்ரைஸ் ஷாப் ஆரம்பிக்க வேண்டும்
என்றும் தீர்மானம் இருக்கிறது. மத்திய சர்க்காரிலே ஒரு சட்டம் வருவ
தாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
இன்றைக்குக் கொடுத்திருக்கும் பதிலிலே, நம்முடைய அரசாங்கம் பரிசீ
லித்து, மானேஜ்மெண்டுகளை வற்புறுத்திக் கட்டாயம் நியாய விலைக் கடை
களை ஆரம்பிக்க வேண்டும். அந்த உதவி செய்ய வேண்டும் என்று
வற்புறுத்த என்ன செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடி, இந்த மோட்டார் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்கிற
போது, 1961-ல் சட்டம். இதற்கு விதிகள் செய்வதற்காக இரண்டு ஆண்டு
களுக்கு முன்பு 1962-ல் ட்ராஃப்ட் ரூல்ஸ் போடப்பட்டு, ரிவைஸ்ட் ரூல்ஸ்
1964-ல் போடப்பட்டது என்றும், அப்ஜக்ஷன்ஸ் கேட்டிருக்கிறோம் என்றும்
அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எவ்வளவு வருத்
தப்படக்கூடிய செய்கை ? மோட்டார் தொழில் மன்னர்களைக் கண்டு சர்க்கார்
பயப்படுகிறார்கள் என்று தான் தோன்றுகிறது. 1961-ம் வருட சட்டத்திற்கு
1964-ல் தானு விதிகள் ஏற்படுத்துவது ? 1965-லும் அதை அமுல்
நடத்த அரசாங்கம் முன் வரவில்லையென்றால், எவ்வளவு வருந்தப்பட
வேண்டிய செய்கை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம் சிறு சிறு ஆபரேட்டர்களை
ஊக்குவிக்கிறீர்கள். வரவேற்க வேண்டிய செய்கை என்றாலும், தொழில்
சங்கங்கள் அமைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஆரம்பித்தாலும்
நல்ல விதத்தில் அமுலாவதில்லை. ஆகவே சட்டபூர்வமாக ஒவ்வொரு
மோட்டார் நிறுவனத்திலும் ஒரு தொழில் சங்கம் இருந்தாக வேண்டும்
என்று விதிகள் மூலம் செய்ய முன் வந்தால் அது தொழிலாளர்களுக்கு
சௌகரியமாக இருக்கும். அப்படி இல்லாததால், பெரிய நிறுவனங்
களில்தான் தொழில் சங்கங்கள் செயல்படுகின்றன. அதிலும் இரண்டு
மூன்று சங்கங்கள் தோன்றுகின்றன. முதலாளிகளே சங்கங்களை ஊக்கு
விக்கிறார்கள். அதன் காரணமாக, மோட்டார் மன்னர்கள் தவறுகள்



10th March 1965] [திரு. செ. மாதவன்]

செய்தாலும், தொழில் கோர்ட்டில் கொண்டு வர முடியவில்லை. தொழில்
சங்கங்கள் எடுக்காமல், தனிப்பட்ட தொழிலாளி தனிப்பட்ட முறையில்
தொழில் கோர்ட்டுக்குப் போகும் வசதியைச் செய்து கொடுத்தால் நலமாக
இருக்கும். இந்த அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று பல முறை
வற்புறுத்தியிருக்கிறோம். இந்தப் பிரச்னையையும் கவனிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல்
அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து
ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாடு சுதந்திரம்
அடைந்த பிறகு, மத்தியிலும், மாநிலங்களிலும் தொழிலாளர்கள் முன்
னேற்றத்திற்காகவும், தொழிலில் அமைதி ஏற்படவும், பல நல்ல சட்டங்கள்
கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தோட்டத் தொழிலாளிகளுடைய நிலைமை,
நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டில், மிகவும் உயர்ந்த நிலையில்
இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஒரு நிலைமை
நமது மாநிலத்திலே ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்த நமது கனம்
முதல் அமைச்சர், கனம் தொழில் அமைச்சர், லேபர் கமிஷனர், அவர்
கீழே பணிபுரியும் அதிகாரிகள் இவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்
களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறன். குறிப்பாக நான் சார்ந்துள்ள
ஜில்லாவிலே தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் . . .

**கனம் சபாநாயகர் :** பாராட்டுதலைத் தெரிவிக்கும்போது debatable
point ஆகக் கொண்டு வரக்கூடாது. That can be limited to those who
are here in this House. But, I would request the hon. Member
not to drag the officers into the discussion.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** தோட்டத் தொழிலாளிகள் சம்பந்தமான
சில பிரச்னைகளை நான் இந்த சமயத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நமது நாட்டிலே
சுமார் பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று
மதிப்புப் போடப்பட்டிருக்கிறது. இந்தப் பத்து லட்சம் தொழிலாளி
களிலே, வடக்கேயும், வடகிழக்கேயும் உள்ள பிராந்தியங்களில், அஸ்ஸாம்,
வெஸ்ட் பெங்கால் முதலிய பிராந்தியங்களில், எட்டு லட்சம் பேர்கள்
வேலை செய்கிறார்கள். தென் பிராந்தியத்திலே அதாவது கேரளா,
மைசூர், தமிழ்நாடு ஆகிய பிராந்தியங்களிலே, இரண்டு லட்சம் பேர்கள்
தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது சமீபத்திலே, ஹைதராபாத்திலே நடந்த I.N.T.U.C.
மகாநாட்டிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.
வடக்கே இருக்கும் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி
களுக்கு—80 சதவிகிதம் தொழிலாளிகளுக்குமேல் அங்கே இருக்கலாம்—
தோட்ட அதிபர்களால் ஃபுட் கிரெயின்ஸ், அரிசி, கோதுமை போன்ற
உணவுப் பொருள்கள், பகுதி விலையில், ஸப்ஸிடைஸ்ட் ரேட்டில்
கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு மணு ரூ. 15 முதல் ரூ. 20
வரை குறைவாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. இந்தச் சலுகை தென்
பிராந்தியத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.
ஹைதராபாத் மகாநாட்டிலே தீர்மானித்தது, தென் பிராந்தியத்திலுள்ள
தொழிலாளர்களுக்கும் அந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்று
வற்புறுத்தியிருக்கிறார்கள். அது கொள்கை அளவிலே ஒப்புக் கொள்ள
யாதொரு இடையூறும் இருக்காது என்று நினைக்கிறேன். நமது முதல்
அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இந்தச் சலுகையை எங்கள் மாவட்ட
தோட்டத் தொழிலாளிகளுக்கும், மற்ற தென் பிராந்தியத் தொழி
லாளிகளுக்கும், வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள
விரும்புகிறேன். இந்த மாநிலத்திலேயே பெரிய தோட்டத் தொழிலாளிகள்
சங்கம், ஏன், முதல் அமைச்சர் பாராட்டிய இந்தியத் தொழில்
சங்கங்களிலெல்லாம் நல்ல ஒரு தொழில் சங்கம் நீலகிரி தோட்டத்
தொழிலாளர்கள் சங்கம். நாங்கள் எல்லா முதலாளிகளுக்கும் எங்கள்
டிமாண்டுகளைக் கொடுத்திருக்கிறோம். அரிசியைக் குறைந்த விலைக்குக்
கொடுக்க வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் மனது வைத்தால் இந்தப்

பிரச்னையை விரைவில் தீர்க்கலாம் என்று யோசிக்கிறேன். இவர்கள் இன்றைய பதிலிலேயே ஒரு உறுதியைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வீட்டுவசதிப் பிரச்னையைப் பற்றி சில வார்த்தைகள். அகில இந்திய ஆவரேஜில் பார்த்தால், மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வீட்டுவசதி பிரச்னையை தோட்ட தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் தீர்த்திருக்கிறோம். எல்லாத் தொழிலாளிகளுக்கும் வீட்டு வசதி ஏற்பாடாகிவிட்டது என்ற நிலையை இந்தப் புத்தகத்தில் பார்க்கிறோம். ஆனால் உண்மையிலே இருக்கும் பிரச்னையைப் பார்த்தால், நம் திட்டங்களால், சுமார் 50 சத விகிதத் தொழிலாளர்களுக்குத்தான் வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வீட்டு வசதி ஏற்படுத்துவதில் ஒரு ஆபத்தான நிலை இருக்கிறது. தோட்ட அதிபர்கள், டெம்பரரி ஒர்க்கர்ஸ் என்று போட்டுவிடுகிறார்கள். அதுவும் இல்லாமல், பல இடங்களில், பல திட்டங்களிலே பல வேலைகள் அவர்களுக்கு நாம் சட்டபூர்வமாக சலுகைகளைக் கொடுக்கமுடியவில்லை அப்படி மறுக்கவே அவர்களை டெம்பரரி என்று போட்டுவிடுகிறார்கள். கண்டிராக்டுகளுக்கு விடப்படுகின்றன. அப்படி விடுவது சட்ட விரோதம், அதைத் தடுக்க வேண்டும் என்று மத்திய பாராளு மன்றத்திலே ஒரு சட்டம் வருவதாக இருக்கின்றது என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் விரைவில், அந்தச் சட்டத்தை பார்லிமெண்டில் கொண்டுவரச் செய்து, இந்த காண்டிராக்ட் விடுவதை, இப்படி வைக்கும் பழக்கத்தை, நிறுத்தும்படி, அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தோட்டத் தொழிலாளர்களுக்கென ஏற்பட்டுள்ள வேஜ் போர்டு பற்றி இந்த சமயத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிசுக்கு இரண்டாவது ஊதிய போர்டு அமைக்கப் பட்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு போர்டு ஒன்று ஏற்பட்டு நான்கு வருஷங்கள் ஆகியும், அதனுடைய முழுமையான தீர்ப்பைச் சொல்லாமல் இருக்கிறார்கள். ஊதிய போர்டுகள் எதற்காக ஏற்படுகின்றன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிலிலே ஒரு அமைதி ஏற்படுத்தவும், தொழிலாளர்களுக்கும் தோட்ட அதிபர்களுக்கும் ஏற்படும் தகராறுகளை கோர்ட்டுகளில் கொண்டு சென்றால் காலதாமதம் ஏற்படும் என்பதற்காக ஊதிய போர்டுகள் ஏற்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், தோட்டத் தொழிலாளிகள் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட ஊதிய போர்டு இரண்டு இடைக்கால நிவாரணம் அளித்திருந்தாலும், இன்னும் ஒரு ஆண்டு காலந்தான் அதற்கு லைஃப் இருக்கிறது. அவர்கள் போகிற போக்கைப் பார்த்தால், இந்தத் தொழிலிலே அமைதியை ஏற்படுத்துவதற்கு ஊதிய போர்டுகளை அமைக்கிறோம் என்றாலும், தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அமைதி இன்மை தான் ஏற்படும் ஆபத்து நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை இருக்கிறது. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அந்த ஊதிய போர்டின் தீர்ப்பை உடனடியாக வழங்கி தொழிலாளிகளுக்கு நன்மையைச் செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

10-00 a.m. அடுத்தபடியாக, பாக்டரி சட்டத்தின் கீழ் வெல்ஃபேர் ஆபீசர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் நமது அரசாங்கத்தின் சார்பாக பல தொழிற்சாலைகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் போதிய வேலை செய்யவிடாமல் தடுப்பதாக அநேக புகார்கள் என்னிடம் நேரில் வந்து சொல்லியிருக்கிறார்கள். வெல்ஃபேர் ஆபீசருக்கு என்ன வேலை, அவர்கள் என்ன என்ன வேலை செய்யவேண்டும் என்பதை அவர்களுக்குக் குறிப்பாக எடுத்துச்சொல்ல நமது சர்க்கார் நிர்வாகம் வழி வகை செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"கோட் ஆப் டிஸிப்ளின்" சம்பந்தப்பட்ட வரையில், தனிப்பட்ட தொழில் அதிபர்களிடம் நாம் எவ்வளவு எதிர்பார்க்கிறோமோ அதே அளவு சர்க்கார்த் தொழில் நிறுவனங்களிலும் நம் அதிகாரிகளுக்கு உத்த விட்டு நாம் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று என்பதை நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சர்க்கார் நிறுவனங்களிலுள்ள மேல் அதிகாரிகள் தொழிற்சங்க இயக்க





களிலே ஈடுபட்டு, தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உகந்த முறையில் அந்தத் தொழிற் சங்கங்கள் இயங்கவேண்டும் என்ற முறையில் உள்ளே புகுந்து அந்தத் தொழிற் சங்கங்களை ஒழிக்கவேண்டும் என்ற நிலையில் பல தொழிற் சங்கங்களிலே ஈடுபட்டிருப்பதாக என்னிடம் தகவல் இருக்கிறது. குறிப்பாக நான் சொல்ல வேண்டுமானால், சர்க்கார்த் துறையில் நடைபெறும் அச்சுத் துறையில் அதிகாரிகள் இவ்விதமான நிலையைத் தொழிற் சங்கத்திலே ஏற்படுத்தி, அங்கே தொழிலாளர் தலைவராயிருப்பவரை "நீங்கள் ராஜிநாமா செய்துவிட்டுப் போங்கள்" என்று கூறுகிற அளவுக்குத் தைரியம் அங்கு அதிகாரிகளுக்கு வந்திருக்கிறது என்றால், "கோட் ஆப் டிஸிப்ளின்"க்கு என்ன நிலைமையிலே நம் அதிகாரிகள் மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நமது அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றித் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தீவிரமாக பிரசாரம் செய்யவேண்டியது அவசியம். நமது தொழில் அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நீலகிரிக்கு வந்த சமயத்தில் ஹாஸ்யமாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றால் 'மெடர்னிடி பெனிஃபிட்' கொடுக்காமல் நிறுத்திவிடலாமா என்ற யோசனை உண்டு" என்றார்கள். நான் அந்த அளவுக்குச் சொல்லத் தயாராயில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் அப்படிச் சொல்லவில்லை. மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறுகின்றவர்கள் "வாஸெக்டமி" என்கிற கருத்தடையைச் செய்துகொண்டால் மொத்தப் பணமாக, இன்னும் சற்றுக் கூடவே கொடுத்து விடலாமா என்கிற யோசனை உண்டு என்று தான் சொன்னேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்தச் சலுகை மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறுகின்றவர்களுக்கு என்றாலும், இப்பொழுது அநேகமாகக் குழந்தைகள் அதிகமாகப் பெற்று பெற்று ரொம்ப அசந்து போயிருக்கிறோம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** "மெடர்னிடி பெனிஃபிட்"க்குப் பதிலாக குழந்தைகள் பெறாமலிருப்பதற்கு ஒரு மானியம் கொடுக்கலாம் என்று நான் சொன்னேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அந்த ஒரு சலுகையை அமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசித்து தொழிலாளர்கள் மத்தியிலே இதைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆஸ்பத்திரி வசதி தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் பிராந்தியங்களில், இந்த மலைப் பிரதேசங்களில், மிகவும் குறைவாக இருக்கிறது. "க்ரூப் ஆஸ்பிடல்" ஏற்படுத்த சட்டத்திலே செய்திருக்கிறோம். தோட்ட முதலாளிகள் இந்தச் சட்டத்தை மதித்து ஆஸ்பத்திரி வசதி ஏற்படுத்தி, டாக்டர்களை நியமித்து, நல்ல மருந்துகள் கொடுக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை என்று தான் நான் இந்தச் சமயத்தில் வருத்தத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காட்டுப் பிரதேசத்தில் ஐம்பது மைல்களுக்கு அப்பாலுள்ள ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு வருவதற்குள்ளே உயிர் போனாலும் போய்விடும். மலைப் பிராந்தியத்திலே தோட்டத் தொழிலாளர்கள் இப்படியாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் நாம் எப்படியாவது அவர்களுக்கு வைத்திய வசதியை இன்னும் மிகத் தீவிரமாக ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

*** திரு. கே. பொன்னையன் :** தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தொழில் மானியத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

[திரு. கே. பொன்னையன்] [10th March 1965

1947-ம் ஆண்டிலிருந்துப் பிற்பாடு நமது அரசாங்கம் தொழிலாளர்களுக்கான
பல நல்ல சட்டங்களைக் கொண்டுவந்தும், அவர்களுடைய வாழ்க்கை ஒருமாறு
சீரடைந்தும், இன்னும் பரிபூரணமாக மலர்வதற்கு இல்லை என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக தோட்டத் தொழி
லிலே உள்ளவர்களைப் பற்றி நான் ஒரு சில கருத்தைத் தெரிவிக்க விரும்பு
கிறேன். தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையில் மிக மிகப் பின்
தங்கியவர்கள். இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கும் கூலியை ஏனைய
தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் கூலியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது
அவர்களுடைய கூலி மிகக் கம்மி என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டு
தான் ஆகவேண்டும். ஆண் தொழிலாளிக்கு இரண்டு ரூபாயும், பெண்
தொழிலாளிக்கு ஒன்றரை ரூபாயும் கூலி கொடுக்கப்படுகிறது. தோட்டத்
தொழிலாளர் சட்டத்தையும், ப்ளாண்டேஷன் ரூல்ஸையும் தீவிரமாக அமு
லாக்கவேண்டும்.

குடி நீர் வசதி இன்னும் பல எஸ்டேட்களில் சரியாகக் கொடுக்கப்பட
வில்லை. சுகாதார வசதி கொடுக்கப்படவில்லை. பல எஸ்டேட்களில் கக்கூஸ்
வசதி மிக மிக மோசமாக இருக்கிறது, வீடு கட்டிக் கொடுப்பதற்கு
ஒப்பந்தம் ஏற்பட்டாலும், அதைத் தோட்ட முதலாளிகள் பரிபூரணமாக
முடித்துக்கொடுப்பதில்லை. புதிய வீடு கட்டிக்கொடுப்பதிலும், பழைய
வீடுகளைப் புதுப்பித்துக் கொடுப்பதிலும் மிக மிகக் கால தாமதம் செய்
கிறார்கள். ஆண்டுக்கு 8 சதவிகிதம் புது வீடு கட்டுவது, 8 சத விகிதம்
பழைய வீடுகளைப் புதுப்பிப்பது என்று இருந்தாலும், அதை அமுல் செய்
வதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. அதை இன்னும் கொஞ்சம் வேக
மாகச் செய்யும்படி அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்கள் வேலைக்குப் போகும் நேரத்தில், தங்களுடைய சிறு
குழந்தைகளை ஆயாக்களிடம் விட்டு விட்டு செல்கிறார்கள். அப்படிக் குழந்
தைகளை விட்டுவிட்டுச் செல்லும்படியான இடத்தைப் பிள்ளைபாடி என்று
சொல்வார்கள். அந்தப் பிள்ளைபாடி மிகமிக மோசமாக இருக்கிறது. அது
வும், தேயிலைத் தோட்டப் பகுதிகளில் வருஷத்திற்கு ஆறு மாதம், எழு
மாதம் மழைக் காலம். அந்த மழைக் காலத்தில் இப்படிப்பட்ட சிறு
பூங்குழந்தைகளைத் தகுதியில்லாத இடங்களில் விட்டுப் போவது மிகவும்
வேதனையாக இருப்பதால், அம்மாதிரி பிள்ளைப்பாடி வசதியைச் சரியாக
ஒழுங்காக செய்துகொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்கள் ஓய்வு நேரங்களில் பொழுது போக்குவதற்கான இட
வசதிகள், ரெக்ரியேஷன் க்ளப்கள் அவசியம் வேண்டும் என்று நான்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டு முழுவதும் தோட்டத் தொழிலதிபர்
கள் "காஷுவல் லேபர்"களை வைத்துக்கொண்டு, தொழிலாளர்களுக்கு
என்ன என்ன உரிமை கிடைக்க வேண்டுமோ, அது அத்தனையும் கொடுக்கா
மல் மறுக்கிறார்கள். இது மிக மிக முக்கியமான பிரச்சினை. ஒரு எஸ்டேட்
டில் ஆயிரம் தொழிலாளர்கள் வேண்டுமென்றால், உண்மையிலேயே 300
முதல் 400 வரை "ரஜிஸ்டர்ட் லேபர்"களாக வைத்துக்கொண்டு, பாக்கி
யுள்ளவர்களைக் காஷுவல் லேபர்களாக வைத்துக்கொள்ளுகிறார்கள். ப்ரா
விடெண்ட் பண்டு, க்ராசுவ்டி, வழிச் செலவு, கம்பளி, வைத்திய வசதி
போன்ற வசதிகளெல்லாம் காஷுவல் லேபர்களுக்கு மறுக்கப்படுகிறது
என்றால், நாம் பல நல்ல சட்டங்களைத் தொழிலாளர்களுக்காகக் கொண்டு
வந்தும், அந்தப் பலன்கள் தொழிலாளர்களுக்குப் போகாமல், அந்தச்
சட்டங்களெல்லாம் மீறப்படுகின்றன என்று தான் அர்த்தம் ஆகிறது. அர
சாங்கத்தின் கவனத்திற்கு இதையும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1951-ம் வருஷத்தில் பிரசவ சட்டம் கொண்டுவந்தோம்.
அப்பொழுது பிரசவத்திற்கு நாம் நிர்ணயித்த பணம் ரூ. 5.25. இன்றைய
விலைவாசி உயர்வுக்குத் தகுந்தாற்போல் ஸிக் அலவன்ஸ் விகிதத்தைத்
திருத்தியமைத்து அதிகமாகக் கொடுத்து வருகிறோம். நஷ்ட ஈடு சம்பந்த
மாக சட்டத்தைத் திருத்தியமைத்து அதை இரட்டிப்பாகக் கொடுத்து வரு
கிறோம். ஆனால், பிரசவப் பணம், என்று கொடுக்க ஆரம்பித்தோமோ
அன்றிலிருந்து இன்றுவரை அதே நிலையில் தான் இருக்கிறது. அதை
யும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.



10th March 1965] [திரு. கே. பொன்னையன்]

அடுத்தபடியாக, "தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி" என்ற தலைப்
பின்கீழ் ஒதுக்கப்பட்ட பணத்தை முக்கால் பாகத்திற்குமேல் ஆஸ்பத்திரி
யிலுள்ள டாக்டர்களுக்கும் ஊழியர்களுக்கும் தான் செலவு செய்கிறார்கள்.
மிஞ்சியுள்ள பணத்தை வைத்துத்தான் மருந்துகள் வாங்குகிறார்கள்.
மருந்துக்காக ஒதுக்கப்படும் பணம் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது.
ஆகையால், எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தைத் தோட்டத்
தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
ளுகிறேன்.

ஒழுங்கு முறை விதிகளுக்கு (கோட் ஆப் டிசிப்ளின்) தொழிலாளிகள்
மட்டும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. முதலாளிகளும் கட்டுப்பட்டவர்கள்.
கோட் ஆப் டிசிப்ளினை மீறுகிறவர்கள் எந்த முதலாளியாக இருந்தாலும்
சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் தோட்டத் தொழி
லாளர்களுக்கு சப்சிடைஸ்ட் ரைஸ் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்.
தோட்டத் தொழிலாளர்களுக்கு வாராவாரம் அரிசி, கோதுமை, மைதா
போன்றவைகளைக் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முன்காலத்தில் தோட்டத் தொழிலாளிகள் கங்காணி
களாக இருந்தவர்கள் எல்லாம் இப்போது சூப்ரவைசர்களாக நியமிக்கப்
பட்டுவிட்டார்கள். அவர்கள் தனிப்பட்ட தொழில் செய்பவர்கள் என்று
இருக்கிறார்கள். நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்
இவர்களுடைய நிலையைத் தனியாக ஆராயவேண்டும்.

அடுத்தபடியாக அவர்களுக்கு ஸ்டாண்டிங் ஆர்டர் staff labourers-க்கு
இருப்பது போல தோட்ட சூப்ரவைசர்கள் எல்லோருக்கும் ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு gratuity
கொடுப்பதில் வருஷத்தில் பதினைந்து நாள் என்று ஒரு ஏற்பாடு
செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் சூப்ரவைசர்களுக்கு வருஷத்திற்கு
ஒரு மாதமாவது கொடுக்க வேண்டும். தோட்ட குமாஸ்தாக்களுக்கு போக்கு
வரத்து வழிச் செலவு படி கொடுக்கிறோம். ஆனால் தொழிலாளர்களுக்கு
ஒருவிதமாக வழிச் செலவு கொடுக்கிறோம். அதைப்போல சூப்ரவைசர்க
ளுக்கு தோட்ட குமாஸ்தாக்களுக்குக் கொடுப்பதுபோல "டு ஆண்ட் ப்ரோ"
வழிச்செலவு கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்
களுக்கு சிக் அலவன்சு கொடுப்பதுபோல சூப்ரவைசர்களுக்குக் கொடுக்க
வேண்டும். சூப்ரவைசர்கள் தனி வேலை செய்வதால் வீட்டுவசதி, கம்பளி
வசதி, இன்னும் மழைக்காலத்தில் குடை முதலியன போன்ற வசதி
கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொண்டு இந்த நேரத்தைக் கொடுத்த சபா
நாயகருக்கு நன்றியைத் தெரிவித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்,
வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்
களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற தொழில்
மானியம் சம்பந்தமாக சில விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகின்றேன். இந்த ராஜ்யத்தில் விவசாயத் தொழிலாளர்
கள் எல்லா மாவட்டங்களிலும், எல்லாக் கிராமங்களிலும் பரந்த ரீதியில்
வாசம் செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் மனித
சமுதாயத்திற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொண்டிருக்
கிறார்கள். அவர்கள் இன்றைக்கு எந்தவிதமான முன்னேற்றமும் இல்லா
மல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்கமுடி
யாது. இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க
வழி செய்ய வேண்டும் என்பதற்காகவே குறைந்த பட்ச கூலி நிர்ணய
சட்டம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்தச் சட்டத்தை முறையாக
அமுல் நடத்த கோர்ட்டோ, எந்த விதமான அதிகாரியோ நியமிக்கப்பட
வில்லை. இன்றையதினம் அந்தச் சட்டம் சரியான முறையில் அமுல்
நடத்தப்படாமல் இருப்பதால் விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் குறைந்த
ஊதியத்திற்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அர
சாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். விவசாயத்

[திரு. ஆ. கு. சுப்பையா] [10th March 1965

தொழிலாளர்களுக்கு என்று கொண்டு வரப்பட்டிருக்கிற குறைந்த பட்ச
கூலி நிர்ணயச் சட்டத்தை ராஜ்யம் முழுவதும் அமுலுக்குக் கொண்டு வர
வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலங்களில் நிங்
கள் பார்த்து இருக்கலாம். அறுவடை சமயங்களில் கூலி தானியமாகக்
கொடுக்கப்படுகிறது. இதுபோல, நடவு காலங்களிலும் பணமாகக் கூலி
கொடுப்பதற்குப் பதிலாக தானியமாகவே கூலி கொடுக்க வகை செய்ய
வேண்டும். அவர்களுக்கு நியாயமான கூலி கிடைப்பது கிடையாது. 24
மணி நேரமும் விவசாயத் தொழிலாளர்கள் உழைத்துக் கொண்
டிருக்கிறார்கள். இரவிலும் பகலிலும் வேலை செய்யும்படியான நிலைமை
ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச
கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதுவும் கூலி தானியமாகவே
கொடுக்க வகை செய்யப்பட வேண்டும். இன்றைய தினம் நடவு காலங்களில்
பணமாகவே கூலி கொடுக்கப்படுகிறபோது அந்தப் பணத்திற்கு அரிசி
வாங்க அவர்கள் நகரங்களுக்குப் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது.
அவர்களுக்கு நியாயமான விலையில் அரிசி கொடுப்பதற்குப் பதில் தானிய
மாகவே கூலி கொடுப்பது சரியாக இருக்க முடியும். ஆகவே, அம்மாதிரி
கொண்டுவருவதற்கு ஒரு சட்டம் கொண்டுவரலாம். மேலும் கூலி சம்பந்த
பட்ட வரையிலும் ஒவ்வொரு அறுவடை சமயங்களிலும், நடவு காலங்
களிலும் தகராறு ஏற்படுகிறது. குறைந்த கூலியை நிலச்சுவான்தார்கள்
கொடுப்பார்கள். கூலி கட்டுப்படியாகாது என்று சொல்வார்கள். கொடுக்க
மறுப்பார்கள். தகராறு ஏற்படாதிருக்க தகராறுகளைத் தீர்த்து வைக்க கூலி
நிர்ணய போர்டு அமைக்க வேண்டும். சாகுபடிக்காரர்கள், அதிகாரிகளைக்
கொண்டு கூலி நிர்ணய போர்டு அமைத்தால் அந்தச் சமயங்களில் அந்த
போர்டு கூடி எந்த எந்த வேலைகளுக்கு எப்படி கூலி நிர்ணயம் செய்வது
என்று பரிசீலனை செய்து தக்கபடி நிர்ணயிக்க வழியேற்படும். இப்போது
அவர்களுக்குள்ளே தகராறு ஏற்பட்டால் யாருமே தலையிடுவது கிடையாது.
கலெக்டர் சமரசம் செய்து வைக்கலாம். ஆனால் அவர்களும் அதற்கு
வழியில்லை என்று கையை விரித்துவிடுகிறார்கள். அதனால் விவசாயத்
தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய
குழந்தைகள் மாடுகள் மேய்க்க உபயோகப்படுத்தப்படுகிறார்கள். அம்மாதிரி
மாடுகள் மேய்க்க உபயோகப்படுத்தக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு
வந்தாக வேண்டும். அக்குழந்தைகள் பள்ளிக்குச் சென்றுதான் ஆக
வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தியாக வேண்டும். நகர்ப்புறங்களில்
உள்ள தொழிலாளர்கள் விஷயம் வேறு. அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து
வேலை செய்கிறார்கள். ஏதாவது தகராறு ஏற்பட்டால் உடனே அதிகாரி
கள் தலையிட்டு தீர்த்து வைக்க முடிகிறது. விவசாயத் தொழிலாளர்களு
டைய நிலைமை அப்படி இல்லை. இவர்கள் ஆங்காங்கே சிதறுண்டு கிராமப்
புறங்களில் வசிக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் அதிக எண்ணிக்கை
உள்ளவர்களாக இருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் நிலைமையை ஒழுங்கு
படுத்துவதற்கு முடியாமல் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக
இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி இவர்களுக்குத் தேவையான பாது
காப்புகளை எல்லாம் அளிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்
வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. கோ. சி. மணி:** கனம் மன்றத் தலைவர் அவர்களே இன்றைய
தினம் எங்கள் கட்சியின்சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணையை
ஆதரித்து இங்கே பேசுகிறேன். குறிப்பாக தொழிலாளர் நலத் துறையைப்
பற்றியும் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதித் தொகை
யைப் பற்றியும் இப்போது இங்கே பேசப்படுகிறது. ஆனால் நாட்டில்
தனியார் துறையில் நடைபெறுகின்ற தொழில்களாக இருந்தாலும்,
பொதுத் துறையில் நடைபெறுகின்ற தொழில்களாக இருந்தாலும் தொழி
லாளர்களுடைய நலன் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட்டு வருகிறது,
சட்டம் எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவியாக இருக்கிறது என்பதைப்
பற்றி எல்லாம் எங்கள் கட்சி சார்பாக திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்

**(Mr. Deputy Speaker in the Chair)**

டார்கள். குறிப்பாக இன்றைய தினம் தொழிலாளர்கள் சட்டப்படி தொழிற்
சங்கங்கள் வைத்தும், தொழிற் கோர்ட்டுகளுக்கு வரமுடியாத அளவுக்கு
நாட்டிலே தொழிலாளர்கள் சமுதாயம் இரண்டு இருக்கிறது. ஒன்று



10th March 1965] [திரு. கோ. சி. மணி]

விவசாயத் தொழிலாளர் சமுதாயம். மற்றொன்று நெசவுத் தொழிலாளர்
சமுதாயம். இவர்கள் அத்தனை பேர்களும் நிரந்தரமாக வேலைக்கு வைத்
துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான சட்டம் இல்லை. அவர்களுக்கு
கூலி போன்ற வசதிகளையும், மற்ற வசதிகளையும் நிர்ணயிப்பதற்கு சட்டம்
இல்லை.

சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் ஒரு குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்
தைத் தொழிலாளர்களுக்காகச் செய்யுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்
கொண்டேன். அப்படி ஒரு சட்டம் இந்தத் தமிழ்நாட்டு விவசாயத்
தொழிலாளர்களுக்கு இல்லையென்பதையும் தெரிவித்துக்கொண்டேன்.
அதற்கு நமது தொழிலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்பொழுது அப்படி
ஒரு சட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டத்தில்
இருக்கும் கூலி நிர்ணயத்தைவிட தொழிலாளர்கள் அதிகமாகப் பெற்றுக்
கொண்டிருக்கிறார்கள் என்றும், எனவே அந்தச் சட்டத்தை அமுல்படுத்த
வேண்டிய அவசியம் இல்லையென்றும் சொன்னார்கள். நான் பணிவன்
போடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். சாதாரணமாக, மக்களாக
விரும்பிக் கொடுக்கக்கூடிய கூலிக்கும் குறைந்த கூலியை நிர்ணயமாகக்
கொண்டிருக்கக்கூடிய ஒரு சட்டத்தை நாம் இத்தனை நாள் வைத்துக்
கொண்டிருப்பது தவறு இல்லையா? என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்களைப்பற்றி ஒரு நேரத்தில், தினக்கூலி விவ
சாயத் தொழிலாளர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று கேள்வி
கேட்கப்பட்டது. 99 லட்சத்துச் சொச்சம் பேர் என்று குறிப்பிட்டார்கள்.
ஏறத்தாழ ஒரு கோடிப் பேர்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயத்
தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் தினக்கூலி பெறுவோர்கள்
பெரும்பான்மையினர்; சிறுபான்மையோராகப் பண்ணையாட்கள் இருக்
கிறார்கள். பண்ணையாட்களுக்கு என்று ஒரு சட்டம் இந்த மன்றத்தில்
1952-இல் நிறைவேறியிருக்கிறது. மிராசுதார்கள் தினக் கூலிகளை
இஷ்டப்பட்டால் வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்; இல்லையென்றால்
நீக்கி விடலாம். அந்த நிலைமையில்தான் இந்த ஒரு கோடிப் பேர்களும்
இன்று இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மேட்
டூரில் தண்ணீர் திறந்துவிட்டார்கள் என்று சொன்னால், அதன் பின்னு
லேயே, போலீஸ் வேன்களும், ஜீப்களும் செல்கின்றன. தண்ணீருக்குப்
பின்னாலேயே போலீஸ் வேன்களும் செல்கின்றன. மாயூரம்,
சீர்காழி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் போன்ற
இடங்களில் கலவரங்கள் ஏற்படுவதற்கு முன்னாலேயே அதைப் பாதுகாக்க
வேண்டும் என்ற அளவிலேயே போலீஸ் லாரிகள் வந்து கொண்டிருக்
கின்றன. இந்த ஆண்டும் வந்திருக்கிறது. இந்தச் செய்திகளைப் பத்திரிகை
களில்கூடப் பார்த்திருக்கலாம். திருத்துறைப்பூண்டியில் கலவரம் ஏற்படும்
என்ற காரணத்திற்காக, கம்யூனிஸ்ட்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்
கிறார்கள்; கிஸான்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; எத்தனை
யோ போலீஸ் வருகிறது. இவ்வளவும் எதனால் வருகிறது என்றால்,
சரியான சட்டம் இல்லாததால்தான் இவ்வாறு ஏற்படுகிறது. நாலு
மரக்கால் கூலி தரவேண்டியிருந்தும், 3 மரக்கால்தான் தருவேன் என்று
சொன்னார்கள். இதைக்கேட்க இந்த நாட்டிலே நாதி இல்லையா? என்று
கேட்பதால்தான் போலீஸ் வருகிறது.

இந்த வழக்குகள் எல்லாம் எப்பொழுதுமே சிவில் வழக்காகப் போவ
தில்லை. கூலிப் பிரச்னை சிவில் வழக்காகப் போவதேயில்லை; அது
போலீஸ் ஸ்டேஷனுக்குதான் போகிறதே தவிர, சாதாரண வழக்காக
இருப்பதில்லை. அந்த அளவுக்குத்தான் கூலிக்காரர்கள் தலைவிதி இந்த
நாட்டில் எழுதப்பட்டிருக்கிறது. கூலிக்காரர்கள் அத்துமீறிப் பிரவேசித்
தார்கள்; டிரெஸ்பாஸ் செய்தார்கள் என்று மிராசுதார்கள் போலீஸ்
ஸ்டேஷனில் பெட்டிஷன் கொடுக்கிறார்கள். தொழிலாளர்களும் மூன்று
மரக்கால் தந்து கொண்டிருந்தவர்கள், இப்பொழுது 2 மரக்கால் கூலி
தான் தருகிறார்கள் என்றும், தயவு செய்து தீர்த்து வையுங்கள் என்றும்
போலீஸ் ஸ்டேஷனில்தான் புகார் செய்கிறார்கள். அங்கு என்ன
சொல்கிறார்கள்? நீங்கள் 6 மரக்கால் கேட்கலாம்; அவர்கள் அதற்கு
ஒரு மரக்கால்தான் தருவேன் என்று சொல்லலாம்; 'ஏதாவது ரத்தக்

[திரு. கோ. சி. மணி] [10th March

காயம் இருக்கிறதா, அப்படியிருந்தால் இங்கு வா, இல்லா
இங்கே வராதே' என்று சொல்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால்
பற்றி சட்டம் இல்லை, நீ இங்கே வராதே' என்று சொல்கிறா
இந்த அளவுக்குத்தான் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள்
இருக்கிறது.

ஒவ்வொரு ஊரிலும் கூலி வேறுபடுகிறது. இந்த ஊரில் 4 மா
கூலி கொடுக்க வேண்டும். அதாவது எங்கே தொழிலாளர் அதி
இருக்கிறார்களோ அங்கே கூலி குறைவாகத் தரப்படுகிறது. எந்த
ஓங்கியிருக்கிறதோ அந்தக் கட்சிதான் வெற்றிபெறுகிறது. எந்த இ
தொழிலாளர்கள் பலம் குறைவாக இருக்கிறதோ அங்கு எல்லாம்
குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. இந்த ஒரு கோடித் தொழி
கள் பிரச்னையைப் போக்குவதற்கு இந்த மன்றத்திலே நடவ
எடுக்க வேண்டும். மிகக்குறைந்த கூலி நிர்ணயமாக உள்ள அந்தச்
இருக்கவேண்டியது அவசியமா?

நான் முன்பே குறிப்பிட்டேன். கூலி நிர்ணயம் மாநிலத்திற்கு
பொதுவாக இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்குப் வையுங்கள்
சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக குழு
யுங்கள்; அங்கு விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளை அழையுங்
நிலச் சுவான்தார் பிரதிநிதிகளையும் அரசாங்கத்தின் சார்பாக அதிகா
அனுப்புங்கள்; எல்லோரும் கூடி முக்கூட்டு மாநாடு நடத்திப் பேசுங்
பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி காணுங்கள். அதை விட்டுவிட்டு கொ
குத்து, களவு என்ற அளவிலே ஏற்படுவதற்கு இடம் கொடுக்காதீர்
நான் இதைச் சாதாரணமாக சொல்லவில்லை. அரசாங்கத்தின்மீது கு
கள் சொல்லவேண்டுமென்றும் சொல்லவில்லை. வருகிற அறுவடை
பாருங்கள்: அல்லது நடவு நேரத்தில் பாருங்கள். நாகப்பட்டணத்
போலீஸ் வேன்கள் நிறுத்தப்படும்; மன்னார்குடியில் போலீஸ் வேன்
நிறுத்தப்படும்; ஏனென்றால் முன்னேற்பாடாகக் கலவரம் வராமல் ப
காப்பதற்காகப் போலீஸ் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அ
அவர்கள் செய்யத்தான் வேண்டும். கலகம் வராமல் பார்த்துக் கொள்
தான் வேண்டும். ஆனால், இவ்வளவு கூலிதான் கொடுக்க வேண்டு
இவ்வளவு கூலிதான் கேட்கவேண்டும் என்று ஒரு சட்டம் இருக்குமா
தவறு யார் மீது இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு தக்க
வடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்றுதான் சொல்
கொள்ள விரும்புகிறேன். சில அரசாங்க இலாகாவில்கூட டெம்
ஒர்க்குக்கு பண்டர்ரோல் வைத்துக் கொண்டுகூட வேலை செய்கிறார்
ஆனால், இந்த ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கு, இந்
தினக் கூலிக்காரர்களுக்கு அந்த வசதியும் இல்லை. கூலிதான் குறை
என்றால் தகராறுகள் ஏற்படுகிற நேரத்திலாவது சரியான விசார
செய்து நல்ல தீர்ப்பளிக்க அவர்களுக்கு வசதி செய்துதர வேண்டாம
தமிழ் நாட்டுக்கு என்று ஒரு சட்டம் கொண்டுவர முடியாதே, மாவட்
திற்கு மாவட்டம் நிலைமை வேறுபடுகிறதே . என்று சொல்லலா
என் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுப் பிரயாணம் செய்யுங்
முன்பு இதைப்போல் ஏற்படுத்தவில்லையா ? ஐ.சி.எஸ். ஆபீஸர் சுப்
மணிய அய்யர் தலைமையில் குழு அமைத்து ஏற்கெனவே, 3, 4 சட்ட
இயற்றவில்லையா ? அதே மாதிரி இந்த விவசாயத் தொழிலாளர்
விஷயத்தில் ஏன் செய்யக்கூடாது ? வயிற்று வலிக்காரனுக்கு வயிற்
வலி என்று சொன்னால் மருந்து இருக்கிற வைத்தியனுடைய வீட்
காட்டவேண்டுமே தவிர, மளிகைக் கடையிலே சோடாப்பூ இருக்
என்று சொல்லி மளிகைக் கடையைக் காட்டக்கூடாது. நீதி மன்றத்
மூலம் ஒரு கமிஷன் போட்டு, இந்த வழக்குகளை விசாரித்து,
விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்ல பயனளிக்கக்கூடிய வகை
தீர்ப்பு வழங்கச் செய்யவேண்டும். போலீஸ் வந்துதான் விவசாயம் ந
வேண்டிய நிலைமையை உடனடியாகத் தடுங்கள்.

அரசாங்கத்திற்குக்கூடத் தகவல் வந்திருக்கும் என்று நினைக்கி
என்னுடைய தொகுதியிலே சென்ற ஆண்டு துகிலி என்ற கிராமத்
பெரிய கலவரமே ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆனால் அந்த



10th March 1965] [திரு. கோ. சி. மணி]

தில் எங்கள் வட்ட ஆர்.டி.ஓ. அவர்கள் வந்திருந்து, எல்லோரையும்
கலந்துபேசி, மூன்று நாட்கள் இரவு பகலாகக் கண்விழித்து ஒரு சமரச
உடன்பாடு அதுவும் தற்காலிகமாகச் செய்து வைத்தார். அதுபற்றி
அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்கள்கூட தகவல் அனுப்பி நடவடிக்கை 10-
எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த மனுவை ஆர். டி. ஓ.க்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள்
விசாரணை செய்திருக்கிறார்கள். அந்த விவகாரம் முடிந்து விட்டதா
என்றால் இல்லை. சட்டப்படி பரிகாரம் கண்டிருக்கிறார்களா என்றால் இல்லை.
அந்த நிலைமையைப் பொறுத்தமட்டில் மத்தியஸ்தம் செய்திருக்கிறார்கள்.
அதற்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காணவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பஞ்சாயத்து அலுவலகங்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் நகர சுத்தி
தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி விசாரிப்பதற்கென்று
தொழிலாளர் கமிஷன் இருக்கிறது. தொழில் கோர்ட்டுக்குப் போகிறார்கள்.
அவர்களில் எத்தனை பேர் தொழிற்கோர்ட்டுகளுக்குப் போய் தங்க
ளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் ? இதைப் பரிசீலித்
திருக்க வேண்டும். மாயவரம் முனிசிபாலிடியில் எட்டு நகர சுத்தித்
தொழிலாளர்களை, 4½ வருஷம், 3½ வருஷம் பணி புரிந்தவர்களை சென்ற
11—1—1965-ல் இருந்து வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அவர்கள்
மூன்றரை ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்ததற்கான சில தஸ்தா
வேஜுகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு ரிஜிஸ்டரில் அவர்களிடம்
எப்படி கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்
போது அவர்களுக்கு வேலை இல்லையென்று சொல்லும்போதுதான் அவர்
களுக்கு நிலைமை புரிகிறது.

பஞ்சாயத்துக்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு உடை
கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால்
அதிகாரிகள் அதைக் கூடக் கொடுக்காமல் வருவாய் இல்லை, பணம்
இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் இருக்கிற ஆடு
துறை பஞ்சாயத்திலே 2½ ஆண்டு காலமாக இருக்கின்ற நகர சுத்தித்
தொழிலாளர்களுக்கு சட்டை, கால்சட்டை கொடுப்பதற்குப் பணம் இல்லை
யென்று என்னிடம் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் சாதாரண
கடை நிலை ஊழியர்களுடைய நிலைமை, தொழிலாளர்களுடைய
நிலைமை நலமாக எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். தினக் கூலிப் பிரச்சினையைப் பற்றி நான் இங்கே எடுத்துச்
சொல்லக் காரணம் அமைச்சர் அவர்கள் அதற்கான தக்க நடவடிக்கையை
எடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் எடுத்துக் கூறுகிறேன். இந்த
வருஷம் சட்டத்தை ஏற்படுத்தாவிட்டாலும் கூட, ஒரு குழு அமைத்து அது
மாவட்ட ரீதியாகச் சென்று பார்த்து கூலி குறைவு, கூட என்ற பிரச்சினை
இல்லாமல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும். மேட்டூரில் தண்ணீர்
தீர்ந்து விட்டவுடன் தஞ்சை உயர்தர போலீஸ் அதிகாரி அங்கே காவலுக்கு
ஏற்பாடு செய்திருக்கிறார். வயல்களில் வரப்பில் மண்வெட்டி, கலப்பை
யோடு நிற்க வேண்டியவர்கள் இடத்தில் இன்று போலீஸ் துப்பாக்கியைத்
தூக்கிக் கொண்டு நிற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர்
அவர்கள் இந்த நிலைமையை மாற்றி அந்த விவசாயத் தொழிலாளர்
களுக்குக் குறைந்தபட்சக் கூலி கிடைப்பதற்கான சட்டத்தை உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். செங்காளியப்பன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொழிலாளர்
மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு
கிறேன். இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய முற்போக்கான திட்டங்
களிலே ஒன்று தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய திட்
டங்கள். நாடு விடுதலை பெற்றவுடன் தொழிலாளர்களின் பாதுகாப்புக்
கான நல்ல சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் நடந்த
கலவரத்தின்போதுகூட தேசியத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழி
லாளர்கள் அன்று தொழிற்சாலைகளுக்குச் சென்றதோடு அன்று வேலை

[திரு. ஆர். செங்காளியப்பன்] [10th March 1965

நல்ல முறையிலே நடைபெற்றது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று வாழ்க்கைப் புள்ளியைப்
பொறுத்து தமிழகத்திலே அது தவறுதலாக இருக்கிறதா அல்லது சரியாக
இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து சரியான வாழ்க்கைப் புள்ளி
யைக் கண்டு அதற்கேற்ப தொழிலாளர்களுக்கு அலவன்ஸ் கொடுக்க முன்
வரவேண்டும். அண்மையில் பம்பாய்-அகமதாபாத்தில் விலைவாசி உயர்வுப்
புள்ளியைப் பற்றிப் பரிசீலனை செய்ய நிபுணர் கமிட்டியை அமைத்தார்கள்.
அதன் பயனாக விலைவாசி 23 புள்ளி அளவுக்கு உயர்ந்திருப்பதை அறிந்து
அதனை அரசாங்கம் ஏற்று அதற்கேற்றபடி அலவன்ஸ் அந்தத் தொழி
லாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்று நமது தமிழ் நாட்டில் இருக்
கக்கூடிய விலைவாசிப் புள்ளியானது சரியானபடி இல்லையென்பது என்
போன்ற அங்கத்தினர்களுடைய கருத்து. இதை மறு பரிசீலனை செய்ய
ஒரு கமிட்டியை அமைத்து தொழிலாளர்களுக்கு விலைவாசிப் புள்ளிக்குத்
தகுந்தபடி அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று லீவும் அதிகப்படியாக தொழிலாளர்களுக்குக் கொடுக்
கப்பட வேண்டும். பஞ்சாலையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள்
பம்பாய், அகமதாபாத் நகரங்களிலே சென்ற ஆண்டிலே ஒரு கோரிக்
கையைக் கொடுத்தார்கள். அங்கு ஏற்கனவே 15 நாட்கள் ஓய்வு லீவு
கொடுத்து வந்தார்கள். 22 நாள் லீவு வேண்டும் என்று அந்த அரசாங்
கம் அந்தக் கோரிக்கையைக் கோர்ட்டுக்கு அனுப்பியது. அதன்படி அவர்
களுக்கு 22 நாட்கள் ஓய்வு லீவு கிடைத்திருக்கிறது. அதே போன்று தமிழ்
நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான ஓய்வு லீவு
வேண்டுமென்று சென்ற இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு மதுரை
ஆர்வி மில் தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஐ.என்.டி.யு.சி. அனுப்
பியது. ஆனால், அந்தக் கோரிக்கையை சர்க்கார் புறக்கணித்து விட்டார்கள்.
பம்பாயிலே இருக்கின்றவர்களுடைய கோரிக்கை கோர்ட்டுக்குப் போனதன்
காரணமாக அவர்கள் 7 நாட்கள் அதிகமான லீவைப் பெற்றிருக்கிறார்கள்.
ஆனால், நம்முடைய சர்க்கார் கோர்ட்டுக்கு அனுப்ப மறுத்து விட்டார்கள்.
இது சரியானதாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தொழிலாளர்
களுடைய கோரிக்கை சரியானதாக இருந்தால் அங்கே நியாயம் கிடைக்
கட்டும். இல்லையென்றால் சர்க்கார் தீர்ப்புப் பிரகாரம் தொழிலாளர்களும்,
முதலாளிகளும் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இதிலே
அரசாங்கம் நேரடியாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும் நீதி மன்றத்
திற்கு அனுப்பி வைத்து இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம்
தொழிற்துறையில் அமைதி நிலவும் நிலைமை ஏற்படும் என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டிலே நடைபெற்ற லேபர் முத்தரப்பு மகாநாட்டிலே
" எல்லா ஆலைகளிலும், 250 தொழிலாளர்கள் உள்ள எல்லா ஆலைகளி
லும் நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும் " என்பது முதலாளி
கள், சர்க்கார் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எல்லோராலும்
ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.
ஆலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாயவிலைக் கடைகள் அமைத்து
பண்டங்கள் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய நியாயவிலைக் கடைகள்
கோவை, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் சில ஆலைகளில்
ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலே போனஸ் பிரச்சினையைப் பொறுத்து கோவையைப்
பொறுத்தமட்டிலும் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு சுமுகமான முறை
யிலே தீர்த்து வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தி
லிருந்து போனஸ் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தினார்கள். அந்த போனஸ்
கமிஷன் ரிப்போர்ட்டை மத்திய அரசாங்கத்திடம் கொடுத்திருக்கிறார்கள்.
மத்திய அரசாங்கம் அதை பார்லிமெண்டில் வைத்து சட்டம் இயற்றப்பட்ட
பின்னர்தான் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதை அமல் படுத்த
வேண்டுமென்ற நிலைமை இருப்பதால் இந்த ஆண்டு போனஸ் பிரச்சினை



10th March 1965] [திரு. ஆர். செங்காளியப்பன்]

தீர்க்கப்படாமலே இருக்கிறது. இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு
எடுத்துச் சொல்லி உடனடியாக சட்டமாக்கி அமல் நடத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில், அடுத்த வருட போனஸ் கூட சமீபத்தில் வர இருப்பதால்
உடனடியாக இதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக இரண்டாவது
சம்பள போர்ட் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. முதல் சம்பள
போர்ட் நடந்து கொண்டிருந்தபோது நீண்ட காலம் கடத்தி பல தொழில்
தகராறுகள் ஏற்பட்டன. இரண்டாவது சம்பள போர்ட் இப்போது நடந்து
கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் இந்த சம்பள போர்ட் வேலையை முடித்து
சர்க்காருக்குக் கொடுத்து சீக்கிரத்தில் அமல் நடத்தினால் தொழில் துறை
யில் சமாதானம் நிலவ வசதி வாய்ப்புக்கள் ஏற்படுமென்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன். இப்போது எவ்வளவோ பாதுகாப்புச் சட்டங்கள்
தொழிலாளர்களுக்காக இயற்றி இருந்தும்கூட இன்னும் பல ஆலைகளில்
பல ஆண்டுகளாக டெம்பரரி தொழிலாளர்களாக பல தொழிலாளர்களை
முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம் அரசாங்கச்
சட்டத்தில் 240 நாட்களுக்கு டெம்பரரி தொழிலாளியாக வேலை செய்
திருந்தபோதிலும்கூட அவர்களை பெர்மனெண்ட் செய்ய வேண்டுமென்று
சட்டம் இருந்தாலும் அந்தச் சட்டத்தை புரிந்து கொண்டு முதலாளிகள்
இன்று சுலபமாக ஏமாற்றி விடுகிறார்கள். 240 நாட்கள் ஆவதற்கு முன்
னால் இரண்டு மூன்று மாதங்கள் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி
விடுகிறார்கள். அப்படி நீக்கப்படுவதால் அவர்கள் சர்வீஸ் ப்ரேக்காகி விடு
கிறது. பின்னர் மீண்டும் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள்.
மறுபடியும் 240 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அவர்களை நிறுத்தி
விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு, என்ஜி
னியரிங் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு
ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. என்ன சட்டங்கள் இயற்றினாலும் முத
லாளிகள் சுலபமாக ஏமாற்றி விடுகிறார்கள். பத்து வருடங்களாக டெம்
பரரியாக இருக்கும் தொழிலாளர்கள் எவ்வளவோ தொழிற்சாலைகளில்
இருக்கிறார்கள். அந்த நிலைமைகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு தொழிற்சாலையிலும்
லேபர் வெல்பேர் ஆபீசர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முத
லாளிகளாகவே சம்பளம் கொடுக்கிற காரணத்தினால் தொழிலாளர்களுக்
கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்படும் நேரத்தில் அவர்கள் முதலாளி
கள் பக்கத்தில் இருந்து கொண்டு ஒருதலைப்பட்சமாக அவர்கள் அங்கிருக்கக்
கூடிய தொழிலாளர்களை கவனித்து வருகிறார்கள். அந்த நிலைமை இருக்
கக்கூடாது. இப்போது கூட்டுறவு டிப்பார்ட்மெண்டில் இருந்து ஒவ்வொரு
சொஸைட்டிக்கும் சீனியர் இன்ஸ்பெக்டர்களை இன்ஸ்பெக்ட் செய்ய, ஆடிட்
செய்ய அனுப்புகிறார்கள். அப்படி ஆடிட் செய்யும்போது இரண்டு மாதங்
கள், மூன்று மாதங்கள் ஆடிட் செய்யும்போது சம்பளத்தையும் அதற்
குண்டான போக்குவரத்து செலவையும் சொஸைட்டியிலிருந்து கொடுக்
கிறார்கள். அதேபோன்று ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளில் உள்ள
வெல்பேர் ஆபீசர்களின் சம்பளத்தை முதலாளிகள் அரசாங்கத்தினிடம்
கொடுத்து அரசாங்கம் மூலம் அவர்களுக்குக் கொடுத்து வெல்பேர் ஆபீசர்
களை ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வைத்திருந்தால் உண்மையில் தொழி
லாளர்களுக்கு நல்ல நியாயம் கிடைக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று ஒவ்வொரு தொழிற்சாலை
யிலும் குழந்தைகள் நலனைப் பராமரிக்க பேபி வார்ட்ஸ் கட்டிக் கொடுத்
ஆயாமார்களைப் போட்டு பார்த்து வருகிறார்கள். அவை பெரும்பாலும்
சுகாதார வசதியற்று கவனிப்பாரற்றுத்தான் ஒவ்வொரு ஆலையிலும் இருக்
கிறது. ஆகவே, நல்ல முறையில் சுகாதார வசதிகள் செய்து கொடுத்
குழந்தைகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கான வசதியை அரசாங்கத்தி
லிருந்து, அரசாங்க அதிகாரிகள் மூலம், பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் மூலம்
கவனித்து நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்
சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் கொடுத்
சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எ
பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[10th March 1965

***திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய தொழில்,
தொழிலாளர், தொழிற்சாலைகள் மானியங்களை நான் வரவேற்கிறேன்.
இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகளாக
தொடர்ந்து தொழில் துறையில் அமைதி நிலைநிறுத்தப்பட்டு வருகிறது என்ற
நற்செய்தி அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கங்களிலிருந்து தெரியும்.
நம் ராஜ்யத்தில் இயற்றப்படுகிற பல்வேறு தொழிலாளர் நலன் கருதிய
சட்டங்கள் எல்லாம் வேறு பல ராஜ்யங்களில் அவர்களால் பின்பற்றக்கூடிய
அளவிற்கு நாம் முன்னோடியாக வழிவகுத்து வருவது பெருமைக்குரியது.
நாம் இயற்றியிருக்கும் சட்டங்களை எல்லாம் முறையாக அமுல் நடத்தப்
பார்ப்பது நம் தலையாய கடமை. நான் தெரிந்து கொண்டதில் கடைச்
சிப்பந்திகள் சட்டம் நாம் எந்தளவிற்கு எதிர்ப்பார்க்கிறோமோ அந்த
அளவு முறையாக அமல் நடத்தப்படவில்லை என்று கருதுகிறேன். இந்த
ஆண்டு கொடுத்திருக்கிற விவரங்களை எடுத்துக்கொண்டால் 1965-ல் ஏறக்
குறைய 2,500 கடைகள் அதிகமாக பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியும்.
ஆனால், அதே நேரத்தில் 10,000 சிப்பந்திகள் குறைந்திருப்பதும் தெரி
கிறது. இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்ன என்பதை பரிசீலனை
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மற்றொரு
சட்டம் பீடித் தொழிலை ஒழுங்கு செய்வதற்காக 1958-ல் இயற்றப்பட்ட
சட்டம். ஆனால், சட்டம் இயற்றப்பட்டு ஏதோ அந்தத் தொழிலுக்கு
லைசென்ஸ் வழங்கக்கூடிய ஒரு சட்டமாக அந்த சட்டம் இருப்பதாக
தோன்றுகிறதே தவிர அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும், பீடி சுற்றும்
தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஒரு லட்சம் தொழிலாளர்களுக்கு வாழ்வு
அளிப்பதாகயில்லை. கடந்த ஏழு ஆண்டுகளாக ராஜ்ய சர்க்கார் எடுத்துக்
கொண்ட முயற்சி என்னவென்று கேட்க விரும்புகிறேன். அந்தச் சட்டத்தை
முறையாக அமுல் நடத்தியும், சிறிய வருமானத்தைக்
கொண்டு வாழவேண்டிய மக்களுக்கு, இத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்
கூடியவர்களுக்கு சட்டத்தின் போரால் கிடைக்க வேண்டிய பல்வேறுவித
மான பாதுகாப்புக்கள் கிடைக்காமல் இருக்கின்றன. அவற்றைப் பெற்றுக்
கொடுக்க வழிவகைகள் செய்ய வேண்டும். வொர்க்மென் காம்பென்
சேஷன் பெறுவதில் தொழிலாளர் இலாகாவைப் பொறுத்தவரையில்
தாமதமேயில்லை என்று சந்தோஷமாகக் குறிப்பிடுவேன். ஆனால்
ரெவின்யூ இலாகாவில் விவரம்கொடுக்கிறபோது பல மாதங்கள் தாமதம்
ஏற்படுகிறது. இந்தச் சிக்கல்களுக்கு காரணம் என்னவென்று பார்த்து
நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஸ்டேட் எம்ப்ளாயீஸ் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல்
நடத்துவதற்கு பல்வேறு நல்ல வழிவகைகளை செய்திருப்பது சந்தோஷத்
திற்குரியது. இந்த ஆண்டு புதிதாக ஒரு முயற்சி செய்வதற்கு அரசாங்கம்
திட்டமிட்டிருப்பது சந்தோஷம். சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில்
தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாமல் வர்த்தக நிறுவனங்களில் கூட
கமேர்ஷியல் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸில் கூட இதேபோல் ஸ்டேட் இன்ஷூ
ரன்ஸ் ஸ்கீமை கொண்டுவர திட்டமிட்டிருப்பது சந்தோஷகரமான செய்தி.
தொழில் நிறுவனங்களில் ஈடுபட்டிருப்பதைப் போன்று வர்த்தக நிறு
வனங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்
கள், தொழில் நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு கிடைக்கும் பாது
காப்பு, பந்தோபஸ்து, சுகாதார வசதிகள், செக்யூரிடி ஆப் சர்வீஸ், இது
போன்ற எதுவும் இன்றி கஷ்டப்படுகிறார்கள் என்று உணரப்படுகிறது.
ஆகவே இந்த முயற்சி தொடர்ந்து பல நகரங்களுக்கும் காலாகாலத்தில்
விஸ்தரிக்கப்படும் என்று நம்புகிறேன். தொழிலாளர்கள் பாதுகாப்பு,
பந்தோபஸ்து, சட்டப்படி கிடைக்கவேண்டிய அனுகூலங்கள் இவற்றைப்
பெற்று நல்ல சூழ்நிலையில் அவர்கள் இருக்கவேண்டுமென்பதே அரசாங்கத்
தின் எண்ணம். இன்று பல தொழிற்சாலைகளைப் பார்க்கும்போது, தொழிற்
சாலைகளில் எங்கெங்கு தொழிலாளர்கள் பெருகிக்கொண்டு வருகிறார்
களோ அந்த இடங்களில் எல்லாம் கடன் கொடுத்து வட்டி வாங்கி ஜீவிப்பவர்
களின் தொகையும் அதிகப்பட்டு வருகிறது என்பதை பார்க்கிறோம். தொழி
லாளர்களுக்கு கடன் கொடுத்தால் இலகுவாக பிரிந்து விடும் என்ற
நம்பிக்கையில் பல்லாயிரக்கணக்கான பணத்தை தொழிலாளர்களுக்குக்
கொடுத்து அதற்கு வட்டி கொடுப்பதால் ஏற்படக்கூடிய கஷ்டத்தை தொழி



10th March 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

லாளர்கள் அனுபவிப்பதை எல்லோரும் பார்க்க முடிகிறது. பணம்
கடன் கொடுத்து வட்டி வாங்கிக் கொண்டிருப்பவர்கள் அத்தகைய இடங்
களில் பெருகிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, தொழிற்சாலை
களைச் சுற்றி ஒன்று இரண்டு மைல் தூரத்திற்கு பணம் கடன் கொடுத்து
வட்டி வாங்குகிறவர்களை, அப்படி வாங்குகிறவர்களின் நடமாட்டத்தையே
தடை செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். அப்படி பணம் கடன்
கொடுத்து வட்டி வாங்குபவர்கள் தொழிற்சாலைகளை சுற்றிலும் இல்லாமல்
இருப்பதற்கு சட்டபூர்வமாக என்னென்ன வழிவகை செய்ய முடியுமோ
அதைப் பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்ப்
ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஸ் பெரும்பாலும் நல்லவிதமாக பணி செய்கிறது.
சென்னை நகரில் டிஸேபிள்டுக்காக ஸ்பெஷலாக அங்கஹீனர்களுக்கு வேலை
வாங்கிக்கொடுக்க சமீப காலத்தில் ஒரு முயற்சி செய்து அதற்காக ஒரு
எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் நிறுவப்பட்டது. கொடுத்திருக்கிற விவரங்
களின்படி 1964-65-ல் 253 பேர்கள் பதிவு செய்து 123 பேர்களுக்கு வேலை
கிடைத்திருக்கிறது. நான் தெரிந்து கொண்டிருக்கிற விவரப்படி தொழில்
ஸ்தாபனங்களுக்குரிய அதிபர்களை நாமாகவோ அல்லது சர்க்கார் சிப்பந்தி
கள் மூலமாகவோ கேட்கும்போது அவர்கள் அங்கஹீனமானவர்களை, அவர்
களுக்கு சக்தி குறைந்த அளவு இருந்தபோதிலும் சரி, அவர்களை எடுத்துக்
கொள்வதற்கு முன்வருகிறார்கள் என்பது நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்
கும் செய்தியாகும். இன்றைய தினம் 123 அங்கஹீனமானவர்களுக்கு இந்த
ராஜ்யத்தில் தொழில் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இன்னும்
130 பேர்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டியிருக்கிறது என்றும்
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கஹீனமாகஇருக்கிறவர்கள் தங்களை
பதிவு செய்து கொள்வதற்கு தகுந்த வசதி இதில் முக்கியமானது. இதற்
காக ஸ்பெஷல் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் இருக்கிறது. இதில்
பதிவு செய்து கொள்ளக்கூடிய வசதியிருக்கிறது. ஆனால், இதில்
நகரத்தைச் சேர்ந்தவர்கள்தான் தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளக்
கூடிய வாய்ப்பு இருக்கிறது. வெளியேயிருந்து ஒருவரோ அல்லது இருவரோ
நான் இந்த எக்ஸ்சேஞ்சுக்கு எழுதி பதிவு செய்து கொள்ள முடியும்.
காரணம் இதற்காக வெளியிலிருந்து வருவது மிகவும் கஷ்டமான காரியம்.
ஆகவே குறைந்தபட்சம் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு அங்க
ஹீனரையாவது எடுத்துக்கொள்வது, அதாவது வெட்டுதல் அல்லது ஒட்டு
தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்துதல், என்பது இருக்கவேண்டும். இந்த
நாட்டைப் பொறுத்தவரையில் கழிந்த பத்து வருடங்களில் லட்சக்கணக்
கான ரூபாய்களை செலவு செய்து பல ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள்
உருவாகியிருக்கின்றன. ஆகவே நான் சொன்னபடி ஒவ்வொரு தொழிற்
சாலையிலும் ஒரு அங்கஹீனரையாவது எடுத்துக்கொள்வது என்று வந்து
விட்டால் ஓரளவுக்கு இந்த பிரச்சினை தீர்ந்து விடும் என்று நான் நம்பு
கிறேன். அங்கஹீனர்கள் தங்களை பதிவு செய்து கொள்வதற்கு இப்போது
நகரங்களில் இதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவே தவிர மற்ற
ஜில்லா தலைநகரங்களில் இல்லை. ஆகவே, எல்லா ஜில்லா தலைநகரங்களி
லும் இதற்காக ஸ்பெஷல் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் ஏற்படுத்த
வேண்டும் அல்லது ஆங்காங்கு இருக்கின்ற எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு
களிலாவது ஒரு விங் தனியாக இதற்கென்று ஏற்படுத்தவேண்டும். அதுவும்
இயலாது என்றால் தனியாக இவர்களுக்கு அட்டன்ஷன் இருக்கின்ற முறை
யிலாவது வசதி இருக்க வேண்டும், அப்பேர்ப்பட்ட அட்டன்ஷன் அல்லது
பிரையாரிட்டி இருக்கக்கூடிய வகையில் வழி முறைகளைச் செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொளகிறேன். இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில்
சமீபத்தில் ஏற்பட்ட இலங்கை இந்தியர் ஒப்பந்தம் காரணமாக பல தோட்டத்
தொழிலாளர்கள்—அங்கு தேயிலைத் தோட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழி
லாளர்கள் இன்றைய தினம் இங்கு திரும்பியபின் வேலையில்லாமல் இருந்து
கொண்டிருக்கிறார்கள், அப்பேர்ப்பட்டவர்கள் மேலும் எந்தவிதமான ஆதா
வும் இல்லாமல் இன்றைய தினம் தாய் நாட்டுக்கு திரும்பக் கூடிய நிலைமை
யில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் எதிர்ப்பார்க்கின்ற அளவுக்கு
வேலை கொடுக்க முடியாது என்றிருந்தாலும், எந்தெந்த பிராந்தியங்
களில் இவர்களுக்கு, அதாவது பர்மா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து
வருகின்றவர்களுக்கு, வேலை கொடுப்பதற்கு தனியாக வேலை தேடி

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [10th March 1965

கொடுக்கும் எக்ஸ்சேஞ்ச் முதலிடம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய
வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இவர்
களுக்கு என்று மட்டுமில்லாமல், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் ஆட்வில்
பதிவு செய்து கொள்வதற்கு பல பிரையாரிட்டிகள் இருக்கின்றன. ஆனால்,
எந்த முறையில் இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது வரையறுக்கப்
படாமல் இருந்து வருகிறது. மிலிட்டரிக்காரர்களுக்கு பிரையாரிட்டி கொடுக்
கப்படுகிறது, அரிஜனங்களுக்கு கொடுக்கப்படுகிறது, அதே போன்று தங்கக்
கட்டுப்பாடு காரணமாக "டிஸேபிலிட்" என்ற நிலையில் இருப்பவர்களுக்கும்
பர்மா ரிப்பேட்ரியேட்டாக இருப்பவர்களுக்கும், இலங்கை ரிப்பேட்ரியேட்டாக
இருப்பவர்களுக்கும் பிரையாரிட்டி கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்
படுகிறது. ஆனால், யார் யார் எந்தெந்த முறையில் பிரையாரிட்டியை
பெற்றுக்கொள்வது என்பது வழிமுறை இல்லாமல் இருக்கிறது. இதன்
காரணமாக எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இருப்பவர்களுக்கும் சில
நேரங்களில் இதை அமல் நடத்துவதில் பல கஷ்டங்கள் இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. எந்த முறையில் இதை வழிப்படுத்திவிட வேண்டுமோ,
அதாவது ஸ்பெஷல் பிரையாரிட்டி என்னென்ன முறையில் கொடுக்கப்
படவேண்டும் என்பதை வழிப்படுத்தி—சானலேஸ் செய்து—ரெகுலரைஸ்
செய்து—கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகள் ஊர்கள் தோறும், கிராமங்
கள் தோறும், நகரங்கள் தோறும் வளர்ந்து கொண்டு வருகின்றன, அது
சந்தோஷகரமானதுதான். ஆனால், பாக்டரி எந்தெந்த இடத்தில் வரு
கிறதோ அந்த இடங்களில் எல்லாம் புதுப்புது பிரச்சினைகள் பல எழுகின்
றன. பாக்டரி ஆரம்பிக்கும்போது அருகாமையில் இருக்கும் இடங்களுக்கு
புகை, கழிவு நீரால் பலஇடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. சிலபாக்டரிகளில் கழிவு
நீர் குடிநீர் நிலையங்களின் அருகிலும், ஆற்றிலும் சேருகின்றது. இதைத்
தவிர்க்கின்ற முறையில் என்னென்ன நடைமுறைகளை கையாள்வது என்
பதைப்பற்றி தெரிந்து கொள்வதற்கும் அதை தீர்த்துக்கொள்வதற்கும்
ஒரு ஹை பவர் கமிஷன், உயர்தர நுணுக்க ஞானிகள் கொண்ட ஒரு
குழுவை ஏற்படுத்தினால் நல்லது என்று நான் கருதுகிறேன். புதிதாக
ஏற்படும் தொழிற்சாலைகள் காரணமாக மக்களுடைய சுகம் சுகாதாரம்
என்னென்ன விதத்தில் பாதிக்கப்படுகிறது, அதை என்னென்ன விதத்தில்
தீர்த்து வைக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுத்தால் அதன்
மூலம் இப்போது ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல, இனிமேல் ஏற்படப்போகும்
தொழிற்சாலைகளுக்கும் எச்சரிக்கையாக—காஷனாக—இருக்கும். வருங்கா
லத்தில் தொழிற்சாலைகள் எந்த அடிப்படையில் நிறுவுவது, என்னென்ன
காரியங்களை கருத்தில் கொள்ளவேண்டும் என்பதற்கும் இது உதவியாக
இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இத்தகைய ஹை பவர்
கமிஷன் ஏற்படுத்தினால் நல்லது என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப் போலவே நாட்டில் இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்
கள் பல இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக ஓரளவுக்கு
பெரிய படிப்பு இல்லாதவர்கள் வேலையில் ஈடுபட்டுக்கொள்வதற்கும் அதற்
கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்
கிறது. ஆனால், இந்த இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்டில் படிக்கின்றவர்
களில் மூன்றில் ஒரு பகுதியினருக்குத்தான் ஸ்டைஃபண்ட் வழங்கப்
படுகிறது. இது எல்லோருக்கும் கிடைக்காத காரணத்தால் பல ஏழை
மாணவர்கள் தங்கள் படிப்பை பாதியில் நிறுத்திக் கொள்ளக்கூடிய
நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையில் பல இடங்களில் சில பிரிவு
களுக்கு மாணவர்கள் வந்து சேராமல் பூர்த்தியடையாமல் இருக்கின்ற
நிலைமையும் நாம் காண்கிறோம். ஆகவே, எந்தெந்த வேலைகளுக்கு
சீக்கிரமாக இடம் பூர்த்தியாகிறது, எந்தெந்த வேலைகளுக்கு பூர்த்தி
யாகவில்லை என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். சில
இடங்களில் பூர்த்தியாகிற அளவுக்கு மாணவர்கள் வருவதற்கு வசதி
யில்லாமல் இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. ஆகவே எல்லோருக்கும்
ஸ்டைஃபண்ட் கொடுப்பதற்கு என்ன கஷ்டம் இருக்கும், குறைந்த பட்சம்



10th March 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கொடுத்து, கூடுதல் அளவுக்கு மாணவர்களைக் கொண்டுவந்து எல்லா இடங்களை
யும் பூர்த்தி செய்வதற்கு இயலுமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை
செய்ய வேண்டும். நம்முடைய திட்டத்தின்படி வெறும் கல்வி என்பது
மட்டும் போதாது, தொழில் கல்வியோடுசேர்ந்த படிப்பு தேவை என்பதை
உணர்ந்து செயலாற்றி வருகின்ற நிலையில் நாம் இதை பரிசீலனை செய்ய
வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மத்திய அரசாங்கத்தின் மூலமாக குறைந்தபட்சம் 300
தொழிலாளர்கள் இருக்கக்கூடிய எல்லா தொழிற்சாலைகளிலும் மத்திய
ஃபேர் ப்ரைஸ் ஷாப் திறக்கப்படுவதற்காக ஒரு சட்டம் இயற்றப்
படும் என்று ஒரு குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை
அவசரமாக கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியம். இதை மத்திய
அரசாங்கம் கொண்டு வருவதில் தாமதம் ஏற்படும் என்றிருந்தால் ராஜ்ய
அரசாங்கமே இதற்கான பொறுப்பை ஏற்றெடுத்து நடத்த வேண்டும்.
இதில் பல சிரமங்கள் ராஜ்ய அரசாங்கத்திற்கு இருக்கலாம். நாட்டில்
இருக்கின்ற தொழில் அதிபர்கள், அவர்கள் தொழிற்சாலையில் இருக்
கின்ற தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் அறுவடை
ஆகும் காலத்தில் உணவுப் பொருட்களை வாங்கி, அவர்களாகவே குறைந்த
பட்ச விலைக்கு கொடுத்துதவ முடியும். அதோடு இதை கடனாக கொடுத்து
உதவுவதற்கும் முடியும். ஆகவே இந்தச் சட்டத்தை சீக்கிரமாக மத்திய
அரசாங்கம் கொண்டுவருவதற்கு இந்த ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்
கத்தைத் தூண்ட வேண்டும்.

அதேபோன்று பல விஷயங்களுக்காகவும் ஒரு காம்பரஹன்ஸிவ் 11-00 a.m.
லெஜிஸ்லேஷன்—அதாவது அங்கயீனர்களுக்கு வேலை கொடுப்பதற்கும்,
அங்கயீனர்கள் யார் என்பதை சொல்வதற்கும், அவர்களை கண்டிப்பாக
வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில்—அதாவது
"மைல்ட் வே ஆஃப் இன்வலிஸ்டிங்...." என்ற முறையில் ஒரு சட்டம்
கொண்டு வரவேண்டும் என்று நானே இதற்கென்று ஒரு மசோதா
கொண்டு வந்தபோது, மத்திய அரசாங்கம் இது போன்று ஒரு சட்டத்தை
கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருக்கிறது, ஆகவே இதற்கான
சட்டம் இங்கே தேவையில்லை என்று ராஜ்ய சர்க்கார் எனக்குப் பதில்
சொல்லியிருக்கிறது. இது வரை அப்பேர்ப்பட்ட சட்டத்தை மத்திய அரசாங்கம்
கொண்டு வந்ததாக தெரியவில்லை. ஆகவே இதைச் சீக்கிரமாக
கொண்டு வருவதற்கு வேண்டிய தூண்டுதலை மத்திய சர்க்காருக்கு
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் முழு
வதிலும் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில்,
பல்வேறு இனத் தொழிலாளர்களில், உப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற
தொழிலாளர்கள் பல்லாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். நான்-பவர் லேபர்
ஆக்டின்கீழ் அந்த உப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய தொழி
லாளர்களுக்கு சட்டபூர்வமாக எல்லாவிதப் பாதுகாப்புகளையும் கொடுக்க
இந்த அரசாங்கம் முயற்சி செய்தது உண்டு. இந்த நிலை 10 அல்லது
15 ஆண்டுகளுக்கு முன். இந்தச் சட்டம் இயற்றப்பட்டதே தவிர, 1946-ம்
வருஷம் என்று நான் நினைக்கிறேன். கடுகளவு கூடப் பயன் அற்ற
சட்டமாகப்போய்விட்டது. இதனால் தொழிலாளர்களுக்கு எந்தவித
வசதியோ அல்லது உதவியோ செய்ய முடியாது போய்விட்டது. காம்ப்ரெ
ஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் என்ற முறையில் உப்புத் தொழிலாளர்
களுக்கு, தேசம் முழுவதற்கும் சட்டம் இயற்ற மத்திய அரசாங்கம்
முன் வரும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமுன் இந்த
ராஜ்ய அரசாங்கத்திலிருந்து பதில் சொல்லப்பட்டது. இதுவரையிலும்
மத்திய அரசாங்கமும் இதற்கு உரிய முயற்சி செய்ததாகத் தெரியவில்லை.
மாகாண அரசாங்கமும் என்ன செய்திருக்கிறது என்று புரிந்து கொள்ள
முடியவில்லை. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்
களுக்கும், இந்த தொழிலின் பந்தோபஸ்துக்கும், தொழிலாளர்களின்
சுகாதார வசதிகளுக்காகவும், இன்றைய தினம் சால்ட் செஸ் என்ற நிதியில்
கோடானுகோடி ரூபாய் இருக்கிறது, அதில் ஒரு பகுதியை இந்தத் தொழி
லாளர்களுக்கென்று ஒதுக்கி, இன்று எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ்

திட்டத்தின்கீழ் சுகாதார மருத்துவ வசதிகளுக்கென்று ஈடுபடுத்துகிருர்களே
அதுபோல இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு
உதவி செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு வேண்டிய
வழிவகைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாஞ்சோலை எஸ்டேட்டில் ஒரு சாதாரண இராமப் பள்ளிக்கூடம்கூட
ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதற்குக் கஷ்டமாக இருந்தது. இப்பொழுது கொடுத்
திருக்கிற குறிப்பிலே 25,000 ரூபாய் செலவில் ஒரு ஹையர் எலிமெண்டரி
பாடசாலை கட்ட வழி செய்யப்பட்டிருப்பது ஒரு சந்தோஷமான செய்தி.
தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களின் குழந்தைகள் கல்வி வசதி பெற
இந்த ராஜ்ஜியம் எடுத்துக்கொண்டிருக்கும் நல்ல முயற்சி, அந்த நல்ல
முயற்சியின் பலன் இது என்று கொள்ளுகிறேன். நேஷனல் பிராஸ்
பெரிடி மற்றொன்று இண்டஸ்ட்ரியல் பீஸ். இந்த இரண்டு குறிக்கோளை
நோக்கி, தொழிலாளர்களும் கல்வி பெற வேண்டும், தொழில் நிறு
வனங்களை நடத்துகிறவர்களும் இதில் ஈடுபடவேண்டும் என்ற நிலையில்
ஆரம்பித்திருப்பது நல்ல செய்திதான். நாடு முழுவதிலும் உள்ள
தொழிலாளர்களுக்கு பணி செய்யக்கூடிய லேபர் யூனியன், தொழிலாளர்
சங்கங்களுக்குக்கூட நான் ஒரு வேண்டுகோள் கொடுப்பேன். நாடு
முழுவதிலும் வசதி உள்ளவர்கள் தாங்களே தொழிற்சாலைகளை வைத்துக்
கொள்ள வேண்டும் என்ற லட்சியம் இந்த நாட்டில் இல்லை. முற்றிலும்
சர்க்காரே தொழிற்சாலைகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற
கொள்கை இல்லை. முற்றிலும் தனிப்பட்டவர்களே வைத்துக் கொள்ள
வேண்டும் என்ற கொள்கையும் இல்லை. இரண்டுக்கும் இடையில் உள்ள
நிலைதான் நமது சர்க்காரிலும் மத்திய சர்க்காரிலும் கொள்கையாக அமைந்
திருக்கிறது. தொழிற்சாலைகளை தனிப்பட்டவர்கள் வைத்துக்கொள்ளலாம்,
அரசாங்கம் வைத்துக்கொள்ளலாம். அல்லது கூட்டு முறையிலும் வைத்துக்
கொள்ளலாம். நாம் கேட்கக் கூடிய பணத்தை, கூலியை மாத்திரம்,
கூலி உயர்வை மாத்திரம் பெற்றுக் கொடுப்பதுதான் லேபர் யூனிய
னுக்குப் பொறுப்பு என்று நான் நினைக்கவில்லை. நாடு முழுவதும் இருக்கும்
தொழில் நிறுவனங்களில், சாதாரண நிறுவனங்களிலிருந்து கெமிக்கல்
ஃபாக்டரீஸ் வரையில் தொழிலாளர்களெல்லாம் சேர்ந்து பங்கு
பெறும் அளவுக்குத் தொழில் நிறுவனங்களைத் தாங்களாகக் கூட்டு முறை
யில் அமைக்கத் தொழிலாளர்களைப் பக்குவப்படுத்த வேண்டிய பெரும்
பொறுப்பு தொழிற் சங்கங்களுக்கு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

தொழில் துறையில் அமைதி ஏற்படுத்துவது முக்கியம். அந்த அமைதி
யிலிருந்து பிறக்கக்கூடிய வழிவகைகள், அந்த வழியில் நடந்து,
குறிக்கோள் சோஷலிஸ லட்சியம் என்ற முறையில் முற்றிலும் அமைந்
திருக்கிறது என்று நம்புகிறேன். அந்த லட்சியத்தை நோக்கிப் பல
வருஷங்களாக நடந்து வருவது போல் இந்த ஆண்டும் தொழில் துறையில்
அமைதியைப் பாதுகாத்து, மேலும் விஸ்தரிக்க எல்லா வழிகளையும்
செய்திருக்கிற இந்த ராஜ்ய சர்க்காரின் வழி முறைகள் பாராட்டத் தக்கது
என்று கூறி எனது வார்த்தைகளை நிறுத்திக் கொள்கிறேன்.

* **திரு. முனு. ஆதி:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே,
கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக்
கோரிக்கை மீது என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப்
பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னுல், தொழிலாளர்
களுக்கு நன்மை செய்ய பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது
என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனல் எடுக்கப்பட்ட முயற்சி
களால் தொழிலாளர்களின் உள்ளங்களில் அவர்களுக்குப் பயன் ஏற்
படும்படி செய்தோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவில்லை. எந்த இடத்
தில் எந்தத் தொழிலாளரை எடுத்துக் கொண்டாலும் இந்த ஆட்சி
யாளர்கள் வந்த பிறகு நல்வாழ்வு இல்லை என்ற குரல்தான் எங்கும்
கேட்கிறது. குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானுல், தொழி
லாளர்களுடைய குறைகளை, தனிப்பட்ட தொழிலாளி முதலாளியோடு





வாதாடிப் பெறுவதற்கு உரிமை கிடையாது. ஒரு தொழிற்சாலையில்
இருக்கும் தொழிற் சங்கம் பெருவாரியான தொழிலாளர்களை வைத்திருக்கு
மானுல் அந்தச் சங்கத்தின் மூலமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்குத்
தான் மதிப்பு தரப்படுகிறது. அதை ஒரு பக்கத்தில் நான் வரவேற்
கிறேன். எந்தமாதிரியான ஒரு சட்டத்தை சர்க்கார் செய்திருக்கிறது
என்று பார்த்தால் சங்கத்தில் சேர விரும்பாத ஒரு தொழிலாளி
முதலாளியின் மீது வழக்குத் தொடர அவருக்கு உரிமை கிடையாது.
தொழிலாளர்கள் எல்லோரும் சங்கத்தில் சேர்ந்தாக வேண்டும் என்ற
சட்டமும் கிடையாது. இந்தமாதிரி இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும்
தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெற முடியவில்லை. ஒரு
தொழிலாளி இருக்கக்கூடிய சங்கத்தில என் சேரவில்லை என்று கேட்கக்
கூடும். அந்த முதலாளி சங்கத்தில் சேரவில்லை என்று சொன்னுல்
சில சலுகைகள் தருகிறேன் என்று ஆசை காட்டியிருக்கலாம். அந்த
மாதிரியான ஆசைகளுக்குத் தொழிலாளர்கள் பலி ஆவது நல்லது
என்று ஏற்காவிட்டாலும் அப்படிப்பட்ட நிலையில் சங்கத்தில் சேராத
தொழிலாளர்களுக்குத் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு வாய்ப்பும்
வசதியும் இல்லை. அது மட்டுமல்ல. ஒரு தகராறு வரும்போது முதலாளி
களோடு வாதாடி, தொழிற் சங்கத்தினர் தொழில் அதிகாரியிடம் சமரசம்
பேசி அங்கே முற்றுப் பெருமல், அதற்கு மேல் தொழில் கமிஷனரிடம்
போய் அங்கும் முற்றுப் பெருமல், அரசாங்கத்திடம் சென்று அவர்கள்
அதைத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்பினுல், தொழில் கோர்ட்டு தொழி
லாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புச் சொன்னுல், அதை முதலாளிகள்
ஏற்றுக்கொள்வதாக இல்லை. எந்த முதலாளியோடும் சங்கப் பிரதி
நிதிகள் உட்கார்ந்து பேசும்போது, நம் தொழிற்சங்கம், நம் நாடு,
நம் சர்க்கார் என்ற எண்ணம் கொள்ள முடிவதில்லை. முதலாளிகள்
"எங்கள் சர்க்காரில் பார்த்துக்கொள்கிருேம்" என்று சொல்லும் நிலை
மையைத்தான் நடைமுறையில் பார்க்கிருேம். தொழிலாளர்கள் பக்கம்
தீர்ப்புச் சொல்லப்பட்டவைகளை முதலாளிகள் கட்டாயம் அமல் செய்ய
வேண்டும் என்று சட்டத்தைச் செய்ய சர்க்கார் முன் வரவில்லை. பல
ஆண்டுகளாக கொடுக்கப்பட்ட தீர்ப்பை அமல் படுத்தாமல் வைத்திருக்கிருர்கள்
இப்போது கோர்ட்டுகளில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின்படி சொத்துக்களை
ஜப்தி செய்து தருகிருேம். தொழில் கோர்ட்டுத் தீர்ப்பை பொறுத்த
வரையில் அந்த நிலைமையில்லை. தொழில் கோர்ட்டுக்கு தீர்ப்புச் சொல்லி
முடித்து விடுவதுதான் கடமையாக இருக்கிறது. கொடுக்கப்பட்ட தீர்ப்புகளை
முதலாளி அமல்படுத்துகிருரா என்று பார்க்கவோ அல்லது அமல்படுத்தி
ஆக வேண்டும் என்று சட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.
அந்த அளவில் சட்டம் இல்லாத காரணத்தினுல், முதலாளிகள், கொடுக்
கப்படுகிற தீர்ப்புக்களை எத்தனை ஆண்டு காலம் ஆனுலும் அமல் படுத்துவ
தில்லை. அப்படிப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் ஏராளமாகப் பாதிக்கப்
பட்டிருக்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கும். இந்தச்
சட்டத்தை மாற்றுவதில் எந்தவிதத் தவறும் இருக்காது. நாட்டில்
இருக்கிற ஒரு சில முதலாளிகளை அரசாங்கம் கவனித்துக் கொள்ள
வேண்டாம். இருக்கக்கூடிய கோடிக்கணக்கான தொழிலாளர்களைத்தான்
அரசாங்கம் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆதரவுதான்
தேவையே தவிர, கட்சிக்கு நன்கொடையாக 98 லட்சம் ரூபாய் நன்கொடை
தந்ததற்காக, 98 லட்சம் தொழிலாளர்களுக்குத் துரோகம் இழைப்பது
தவறு என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நீதிபதிகளும் தொழில் கோர்ட்டுகளுக்கு வருவதை விரும்புவது
இல்லை. சென்னையில் உள்ள தொழில் கோர்ட்டில் நான்கு நீதிபதிகள்
மாறிவிட்டார்கள். ஏன் மாறமாட்டார்கள்? அங்கே நீதிபதிகளுக்கு மதிப்பு
இருக்குமானுல்........

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தொழில் கோர்ட்டுக்கு நியமிக்கப்
பட்ட யாரும் ராஜிநாமா செய்யவில்லை.

**திரு. முனு. ஆதி:** யாரும் ராஜிநாமா செய்யவில்லை என்று சொல்லு
கிருர்கள். யாரும் வர விரும்பவில்லை..........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நீதிபதிகளை நியமிக்கும்போது அவர்களுடைய விருப்பத்தைக் கோருவதில்லை. நீதி நிர்வாகத் துறையில் தேவைக்குத் தக்கபடி டிரான்ஸ்பர் செய்யப்படுகிறது. யாரும் வரமுடியாது என்று சொல்ல முடியாது.

**திரு. முனு. ஆதி :** சில ரிட்டயர்ட் ஜட்ஜுகளை அல்லது ரிட்டயர்ட் மாஜிஸ்ட் ரேட்டுகளை நீதிபதிகளாக நியமிக்கிறோம்........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரிட்டயர்ட் ஜட்ஜஸ் இப்போது யாரும் இல்லை.

**திரு. முனு. ஆதி :** அப்படி இருக்கும் நிலையை வரவேற்கிறேன். நான்கு நீதிபதிகள் மாறியிருக்கிறார்கள். வெவ்வேறுபட்டாலும் நல்லாக விசாரித்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். தெரியாத ஒன்றைச் சொல்ல நான் விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள் சொன்னால் அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். நம் நாட்டிலே நீதிபதிகளை நியமித்து வழக்குகளைத் தீர்த்து வைப்பது துரிதமாக நடக்கிறது என்றாலும் நான் ஒரு சிறிய யோசனையைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது ஐந்து மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட், ஒரு லேபர் ஆஃபீஸர் என்ற நிலை இருக்கிறது. நம் மாநிலத்திலேயே மூன்று தொழில் கோர்ட்டுகளும், மூன்று லேபர் ஆஃபீஸர்களும்தான் இருக் கிறார்கள். சில மாவட்டங்கள் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டங்களாக இருக்கும்போது மூன்று அல்லது ஐந்து மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட் என்ற நிலையில் ஒரு கோர்ட் போதவில்லை. எங்கெங்கு அதிகத் தொழிற் சாலைகள் இருக்கின்றனவோ அத்தகைய மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட், ஒரு லேபர் ஆஃபீஸர் என்றும், அதைவிடக் குறைந்த தொழிற்சாலைகள் இருக்கின்ற மாவட்டங்களாக இருக்கும்போது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட், ஒரு லேபர் ஆஃபீஸர் என்றும், அதைவிடக் குறைந்த தொழிற்சாலைகள் இருக்கின்ற மாவட்டங்களாக இருந்தால் மூன்று மாவட் டங்களுக்கு ஒரு கோர்ட், ஒரு லேபர் ஆஃபீஸர் என்ற அளவுக்கு இருக்க வேண்டும். மாநிலத்திற்கே மூன்று தொழில் கோர்ட்டுகள், மூன்று லேபர் ஆஃபீஸர்கள் வைத்திருப்பது போதாது என்று சர்க்கார் கவனத் திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள், குறிப்பாக கவர்ன்மெண்டு டிரான்ஸ்போர்ட் டில் வேலைசெய்கின்ற தொழிலாளிகள் சில தவறுகள் செய்திருக்கலாம். மனிதர்கள் யாவரும் தவறு செய்ய மாட்டார்கள் என்று சொல்வதற் கில்லை. ஆளும் கட்சியே பல தவறுகள் செய்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது தனிப்பட்டவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. டெல்லி சர்க்காரில் ஜீப் ஊழல்களைப் பற்றி சொல்லப்பட்டது. நம்முடைய ஆட்சியில் பல ஆண்டுகளுக்கு முன்னால் அனுமார் என்ற விமானத்தை வாங்கியதன் மூலம் பல லட்சக்கணக் கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது பற்றி நம் நாடு மறந்திருக்க முடியாது. டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களில் ஒரு கண்டக்டர் டிக்கட் எல்லாவற் றையும் விற்றுவிட்டு கணக்குக் கொடுக்கும்பொழுது கடைசியில் ஒரு டிக்கட் நின்றுபோய்விட்டது. அந்தக் கணக்கு வாங்குகிற அதிகாரியும் அதைக் கேட்டு வாங்கவில்லை. இந்தத் தொழிலாளியும் மறந்து போய்விட்டார். பின்னால் மறுநாள் வரும்பொழுது தொழிலாளி ஏமாற்றுவதற்காக அந்த டிக்கட்டை வைத்துக்கொண்டார் என்று சொல்லி, வேலையிலிருந்து சஸ்பெண்டு செய்யப்பட்டு வேலையை விட்டு நீக்கப்பட்டு இருக்கிறார். உதாரணமாக இந்த ஒரு கேஸைப் பற்றி சொன்னேன். இம்மாதிரி பல தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சின்னஞ் சிறு தவறுகள், குற்றங்கள் செய்தால், அதற்கு மன்னிப்பு கேட்டால், மறுபடியும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதுதான் நல்லது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இப்பொழுது நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் இல்லை என்று மறுத்தால் நான் வரவேற்கிறேன். அடிஷனல் கோர்ட்டில் அடிஷனல் ஜட்ஜ் 6 மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டார்கள். அதிகமான வழக்குகள்





இருந்ததால், இம்மாதிரி அடிஷனல் ஜட்ஜை நியமித்தோம். இன்னும் தொடர்ந்து முடிவு பெறாமல் இருக்கிற கேஸ்களை விசாரித்து முடிப்பதற்கு வேண்டி இந்த அடிஷனல் கோர்ட்டை நீடிக்க வேண்டும் என்று உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எப்பொழுது அவசியம் ஏற்பட்டதோ அப்பொழுது அடிஷனல் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது. அதேமாதிரி அவசியம் இல்லையென்றால், அது நிறுத்தப்படும்.

**திரு. முனு. ஆதி :** மருத்துவத் துறையிலே உள்ள தொழிலாளர்கள், எப். என். ஒ., எம்.என்.ஒ. தொழிலாளர்கள் நீண்ட காலமாக பணியாற்றி வருபவர்கள் இதுவரையில் நிரந்தரமாக்கப்படவில்லை. தாம்பரத்திலுள்ள டி.பி. சானிடோரியத்தில் உள்ள தொழிலாளர் சங்கத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. ராஜாராம் அவர்கள் தலைவர், நான் துணைத் தலைவர். நீண்ட காலமாக பணியாற்றி வருகிற தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வில்லை. உதாரணம் காட்டி இது தொழில் தகராறு சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்டோம். இதுவரையில் அதற்கு விமோசனம் இல்லை. டி.எம்.எஸ்-க்கு அனுப்பி வைத்தோம். அவர் களும் ஒரு முறை எங்களை சந்தித்தார்கள், ஆவன செய்வதாகவும் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் விமோசனம் இல்லை. அது மாத்திரமல்ல. தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளுக்கு இந்த அரசாங்கம் நல்ல மதிப்புத் தருகிறது. நான் ஒரு சந்தோஷ செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த இலாகாவை எடுத்துக்கொண்ட பிறகு தொழிலதிபர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் சிக்கல் அதிகமாக இல்லை. சிக்கல் இருந்தால் முதல் அமைச்சர் அவர்கள் தானே அதில் தலையிட்டு சமரசம் செய்து வைத்துவிடுகிறார்கள். குறிப்பாக தொழிலாளர் சிக்கல் என்றால் கோவை மாவட்டத்தில் தான் ஆரம்பிக்கும், அடுத்து மதுரை. அந்த மாவட்டத்தில் போனஸ் சிக்கல் ஏற்பட்டபொழுது பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் தலையிட்டு சுமுகமாக சமரசம் செய்து வைத்ததினால்தான் நல்ல நிலை ஏற்பட்டது. இல்லையென்றால் அந்தக் கொந்தளிப்பு எந்த அளவுக்கு அதிகரித்திருக்கும் என்று சொல்ல முடியாது. தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் ஏற்பட்டபொழுது, அரசாங்கம் அதை சுமுகமாக் தீர்த்த பெருமை நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைச் சாரும். மருத்துவத் தொழிலாளர்கள் நீண்ட காலமாக நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் மிகவும் ஆபத்தான இடத்தில் தொத்து நோய் உள்ள இடத்தில், காச நோய் உள்ள இடத்தில் வேலை செய்கிறார்கள். 6 மாதங்களுக்கு ஒரு முறை அந்தத் தொழிலாளர்களின் உடல் நிலை பரிசோதிக்கப்படுகிற ஒரு இடமாகும். அந்த இடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். இதுவரையில் கொடுக்கவில்லை. ரிஸ்க் அலவன்ஸ் எந்த நிலையில் கொடுக்கப்படும் என்று ஒரு உறுதி கூட இல்லை. இம்மாதிரி இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முறையான கோட்பாடுகளை இயற்றி வைத்துக்கொண்டு, நிரந்தரமாக ஆக்கும் காலம் வந்தவுடன் இந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாகச் செய்துவிடுங்கள், ஒரு குறைவும் இல்லை.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** 'எப்.என்.ஒ.,' 'எம்.என்.ஒ. ஆகிய தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் பூராவுமாக முடிந்த பிறகு கண்டிப்பாக நிரந்தரமாக ஆக்குவார்கள்.

**திரு. முனு. ஆதி :** அம்மாதிரி அருகதையுள்ளவர்களைப்பற்றித்தான் சொன்னேன். வேண்டுமென்றால் தனியாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இது என்னுடைய சொந்தக் கருத்து. என்னுடைய கட்சிக் கருத்து என்று நினைக்க வேண்டாம். இப்பொழுது விலைவாசி ஏற்றம் நாட்டில் இருக்கிற நிலையிலே தொழிலாளர்களுக்கு பற்றுக்குறை இருக்கிற காரணத்

தினால், பழைய சம்பளக் கமிஷன் நிர்ணயித்த நிலைமை போதாது. இப்பொழுது புதுச்சம்பளக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, பஞ்சாயத்திலிருக்கிற சிப்பந்திகளுக்கு, லோ இன்கம் குரூப் ஹவுஸிங் ஸ்கீமின்கீழ் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டும், அதனுடைய பலன் 25 சதவிகிதம் தான் தொழிலாளிகளுக்குக் கிட்டுகிறது. 75 சதவிகிதம் பலன் பொதுமக்களுக்கு போய்விடுகிறது. பொது மக்கள் பயன் அடைய வேண்டாம் என்று சொல்லவில்லை. பொது மக்களுக்குத்தனியாக வேறு திட்டம் வைத்து வீடு கட்டிக் கொடுக்கலாம். ஆனால் கட்டப்படுகிற 15, 20 வீடுகளில், 4 வீடுகள்தான் தொழிலாளர் களுக்குக் கிடைக்கின்றன, மற்ற வீடுகள் பொது மக்களுக்குப் போய்விடு கின்றன. நான் பொதுமக்களுக்குக் கொடுப்பதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இருக்கிற 40, 50 தொழிலாளிகளுக்கு, சிறிய பஞ்சாயத்துகளில், மூன்றாம்தர நகராட்சி மன்றங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்குப் போதிய அளவுக்கு வீடுகள் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும், பொதுமக்களுக்கு முக்கால் பாகம் கொடுத்துவிடுவது, என்ற திட்டத்தை மாற்றி, தனியாக ஸ்தல ஸ்தாபன இலாகாவிற்கு ஒதுக்கப்படுகிற பணத்தை, லோ இன்கம் குரூப் ஹவுஸிங் ஸ்கீம் பணத்தை முழுவதும் அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற் காக ஒதுக்கி, அவர்களுக்கு அந்த வீடுகள் எல்லாம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். பொது மக்களுக்கு வேண்டுமானால், கூட்டுறவுத் துறையிலே அல்லது இதே திட்டத்தின் கீழே தனியாகப்பணத்தை ஒதுக்கி, அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த சிமெண்டு வகையறாக்களினால் செய்யப்படுகிற பொருள்களைச் செய்கின்ற தொழிலாளி களுக்கும், ஸ்டோன்வேர் பைப்ஸ் கம்பெனித் தொழிலாளர்களுக்கும் இதுவரையில் சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. தலைக்கு 75 ந.பை. அல்லது ரூ. 1 அல்லது 1.12 இப்படித்தான் அவர்கள் கூலி வாங்கு கிறார்கள். பஞ்சப்படி ரூ. 26 ஆக இருந்தது. இப்பொழுது நான் தலைவராக வந்த பிறகு ரூ. 7 கூடக் கேட்டு, ரூ. 33 பெற்றுக்கொண்டு வருகிறார்கள். கூலியும், பஞ்சப்படியும் அவர்களுக்குப் போதவில்லை. திருவள்ளூரில் உள்ள ஸ்டோன்வேர் பைப்ஸ் கம்பெனித் தொழிலாளர் கள் எல்லாவற்றையும் சேர்த்து சுமார் 45 ரூபாய்தான் வாங்குகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் போதவில்லை. இதற்காக ஒரு கமிஷன் வைத்து, அவர்களுக்குச் சம்பளம் நிர்ணயித்தால், தொழிலாளர்களுக்கு நல்ல வகையில் கூலி கிடைக்கும். தமிழ் நாட்டில் இம்மாதிரி ஏறத்தாழ 15,000 தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விமோசனம் கிடைக்கும். ஆகவே, ஸ்டோன்வேர் பைப்ஸ் கம்பெனித் தொழிலாளர் களுக்கும், சிமெண்டு ஆர்டிகிள்ஸ் செய்கிற தொழிலாளர்களுக்கும் சம்ப ளத்தை நிர்ணயித்து, இருக்கிற பஞ்சப் படியைக் கூட்டிக் கொடுக்கிற வகையில் சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாடு விடுதலை அடைந்த பிறகு, குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், தொழில்களைப் பொறுத்த வரையில் நல்ல முன்னேற்றத் தையும், தொழிலாளர்கள் நலனுக்காக நல்ல பல சட்டங்களையும் நாம் செய்து, தொழிலாளர்கள் நல்ல பலனை அனுபவிக்கச் செய்திருக்கிறோம் என்பதைப்பற்றி தொழிலாளர் மக்கள் நம்முடைய சர்க்காரைப் போற்றி யதிலிருந்தே நன்றாக நாம் அறிகிறோம். எதிர்க்கட்சியிலிருந்துகூட சுதந்திரம் அடைந்த பிறகு நல்ல சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லி, அதிலே இருக்கிற சங்கடங்களையும் எடுத்துச் சொன்னார் கள். நாம் என்ன சட்டங்கள் செய்தாலும், தொழிலில் ஈடுபட்டிருக்கக்



கூடியவர்கள், தங்களுடைய சுயநலத்தைக் கருதிச் சட்டத்திலிருந்து
எப்படித் தப்பிப்பது என்று தொழிலதிபர்கள் நினைப்பது இயல்பு. அதற்காக
நாம் கண்காணிப்போடு இருக்கிறோம். பல அதிகாரிகளை நியமித்து, தொழிலா
ளர்களுக்காக நாம் செய்யக்கூடிய சட்டங்களின் பலாபலன்களை தொழிலாளர்
கள் அனுபவிக்கிறார்களா என்பதைப்பற்றி அவ்வப்பொழுது கண்காணித்துக்
கொண்டு வருகிறோம். குறிப்பாக, நம்முடைய மாநிலம் எல்லா மாநிலங்
களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது. எந்த ஒரு சட்டத்தைச் செய்தா
லும், தமிழ் நாட்டில் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கிறார்கள்.
தொழிலாளர்கள், தொழிலதிபர்களுக்கிடையே முக்கூட்டு ஒப்பந்தங்கள்
செய்தோமானால், பிற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் தமிழ்நாட்
டில் என்ன செய்திருக்கிறார்கள் என்று நம்மைப் பின்பற்றக்கூடிய
அளவுக்கு இதுவரையில் நடைமுறையில் நடந்து கொண்டு வந்திருக்கிறது
என்பதைப் பார்க்கும்பொழுது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த
வரையில் தொழிலாளர்களுக்கு இதுவரையில் நாம் எவ்வளவு சலுகைகள்
செய்து கொடுத்திருக்கிறோம் என்பது நான் சொல்லாமலே விளங்கும்.

ஒன்று இரண்டு குறைபாடுகள் நடைமுறையில் இருக்கத்தான் செய்யும்.
வளர்ந்து வரக்கூடிய தொழில்களில் பல பிரச்னைகள் தோன்றுவது
இயல்பு. அதிலே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி நம்
முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதற்குப் பரிகாரம் தேடுவது நம்
முடைய கடமையாகும். சாதாரணமாக இன்றைக்கு தொழிலிலே ஈடு
பட்டிருக்கிறவர்களை நிரந்தரத் தொழிலாளிகளாகச் செய்யவேண்டும் என்று
சட்டம் செய்தால், தொழில் அதிபர்கள் தப்பிக்க வழி இருக்காது. ஆனால்,
காண்டிராக்ட் பேசிசில், டெம்பரரி ஆட்களை வைத்துக்கொண்டு, செயல்
படுவதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, ஒரு தொழி
லில், அந்தத் தொழிலுக்கு வேண்டிய ஆட்கள் 1,000 என்றால், 400
பேர்களை மட்டும் பர்மெனெண்ட் ஆக வைத்துக்கொண்டு, பாக்கி 600
பேர்களையும் டெம்பரவரி என்று வைத்திருக்கிறார்கள். இந்த 400 பேர்
களுக்கு மட்டும் சட்டத்தின் அடிப்படையில் எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்
படுகின்றன. ஆகவே பாக்கி இருக்கும் தொழிலாளர்களுக்கும் இந்த சலுகை
கள் வழங்கியாக வேண்டும். அப்படி எல்லோருக்கும் கொடுப்பதனால்,
அதிபர்களுக்கும் வருவாயில் குறையும் என்ற காரணத்தால், மீதிப் பேர்
களை டெம்பரவரியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சர்க்காருக்
கும் தெரியும். 4 மாதம், 6 மாதம் வரையில் வேலையில் வைத்துக்
கொள்வது, அதன் பிறகு ஒரு வாரம் வேலையிலிருந்து நீக்கிவிடுவது,
பிறகு அவர்களையே வேலைக்கு வைத்துக் கொள்வது, இந்த நிலைதான்
பல சிக்கல்களுக்கும் காரணமாக இருக்கிறது. வேறு எந்த விதமான
சிக்கல்களும் அதிகமாக இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.
சர்க்கார் ரெகம்மெண்டேஷன் செய்கிறார்கள், ஸ்டாண்டிங் ஆர்டரில் போடு
கிறார்கள். ஏதாவது ஒரு தொழிலாளி தவறு செய்தால், உடனடியாக
அவனை வேலையிலிருந்து எடுத்து விடவோ, ஸஸ்பெண்ட் செய்யவோ,
நடவடிக்கை உடனடியாக எடுக்கிறார்கள். சர்க்கார் சிபாரிசுகளை அமல்
படுத்தும்போது, லேபர் ஆபீசர்கள், இவை சிபாரிசுகள் தானே என்று
அவர்கள் போக்கு இருக்கிறது. ஆகவே, சட்ட பூர்வமாக இதைச் செய்ய
முற்பட்டால் சில்லரைச் சிக்கல்கள் எல்லாவற்றையும் தீர்த்து விடலாம்
என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

தோட்டத் தொழில் ஒரு ஏக்கருக்கு $1\frac{1}{4}$ ஆள் என்று நிர்ணயிக்கப்பட்டி
ருக்கிறது. ஒரு இடத்தில் 800 ஏக்கர் என்றால், 1,000 தொழிலாளிகள்
வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைத் தொழில் அதி
பர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் நடைமுறையில், அதைச் செய்
வதேயில்லை. $1\frac{1}{4}$ ஆள் வீதம் இருக்கக்கூடிய தோட்டம் என்றால், ஒன்று
இரண்டு தோட்டம்தான் இருக்கிறது. மற்ற இடங்களில் வேண்டிய தொழி
லாளிகளை பர்மனெண்டாக வைத்துக்கொள்வதில்லை. $1\frac{1}{4}$ ஆள் என்
பதற்குக் குறைவாகத்தான் வைத்துக்கொள்கிறார்கள். $1\frac{1}{4}$ ஆளுக்குக்
குறைவாக வைத்துக் கொண்டு வேலை செய்ய முடியாது. எங்களுக்குத்
தோட்ட வேலையில் பழக்கம் உண்டு. ஒரு ஏக்கருக்கு $1\frac{1}{4}$ ஆளுக்குக் குறை
வாக எந்தத் தோட்டத்திலும் எந்த வேலையும் செய்ய முடியாது

[திரு. ஜே. மாதா கவுடர்] [10th March 1965

தேயிலைத் தோட்ட வேலை மெஷின் வேலை. வாரத்திற்கு ஒரு முறை
என்று தொழிலையே பொறுக்கிக் கொண்டே இருக்க வேண்டும். வேலை
யில்லாமல் ஆட்கள் இருக்க முடியாது. சலுகைகளை எல்லோருக்கும்
கொடுக்காமல் இருக்க, தொழில் அதிபர்கள், பெயரளவாக வைத்து
விடுகிறார்கள். பர்மெனெண்டாக இருந்தால் எல்லோருக்கும் கொடுத்தாக
வேண்டும். நான் சொல்வதெல்லாம், எப்படியாவது ஒரு தொழிலுக்கு
வேண்டிய ஆட்களை பர்மனெண்டாக, நிரந்தரமாக வைத்துக்கொள்ள
வேண்டும் என்று செய்து விட்டால், அந்த வகையில் சட்டத்தைத் திருத்தி
விட்டால், இந்தப் பிரச்னையே தீரும்.

காப்பித் தோட்டத்திலே தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே
பல பிரச்னைகள் இருக்கின்றன. தேயிலை வேஜ் போர்டு சிபாரிசுப்படி
ஒப்பந்தம் செய்தால், கூலியைக் குறைவாகக் கொடுக்க முற்படுகிறார்கள்.
தொழில் ஒன்றுதான், ஒரே இடம்தான். எல்லாம் மலைப் பிராந்தியம்,
ஆனால் காபியில் அதிகமாகக் கஷ்டம் இருக்கிறது. அதற்கு நாம் ஒரு
பாதுபாடு செய்ய வேண்டும். கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். தொழிலாளி
களுக்கு இருக்கும் கஷ்டத்தைப் போக்க வேண்டும். பக்கத்திலே தேயிலைத்
தோட்டத்திலே வேலை செய்கிறான். அவனுடைய கூலியைவிட குறைவாகக்
கொடுக்கிறார்கள் காபித் தோட்டத்திலே. சலுகைகளும் குறைவாக இருக்கி
றது. அதனால் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதைச் சொல்
லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொல்வது என்ன வென்றால்,
எங்களுக்குக் காபியில் தேயிலையில் போல லாபம் அதிகமாக வரவில்லை.
அதனால் அதிகக் கூலி கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். ஆகையி
னால், கூலியைப் பொறுத்த வரை தேயிலை, ரப்பர், காபி இந்த மூன்
றுக்கும் ஒரே விதமாக செய்வதுதான் நல்லது. வேஜ் போர்டு சிபாரிசு
செய்யும்போது அதையும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்
என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை சாதாரணமாக ஸ்டாண்டிங் ஆர்டரை வைத்
துக்கொண்டு, சிறு தவறு செய்தாலும், 8 நாள், 10 நாள் ஸஸ்பெண்ட்
செய்வதும், ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து, டிஸ்மிஸ் செய்து விட்டால்,
லேபர் ஆபீசரை அணுகி, அதன் பின் கன்ஸிலியேஷனுக்குப் போய்
லேபர் கோர்டுக்குப் போய், அவர்கள் டிஸிஷன் கொடுக்கும் வரை அவ
னுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரைக்கும், எந்தவிதமான ஊதியமும்
இல்லாமல் இருக்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. சாதாரண
மாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கூலி கிடைக்கும் ஒரு வேலையாள்
ஊதியம் இல்லாமல் இருக்க வேண்டியிருக்கிறது. ஒரு லேபர் கோர்டுக்குப்
போய், தீர்ப்புக் கிடைக்க கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகிறது. அந்த
ஒரு வருஷத்திற்கு அவன் எப்படிக் கூலியில்லாமல் வருவாய் இல்லா
மல், ஜீவனத்தை நடத்த முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.
நான் கூறுவதெல்லாம், எப்படியாவது தொழிலாளர்களைப் பொறுத்த
மட்டில், கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம் வைத்தால், ஏதாவது வேலை
செய்யும் தொழிலிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டால், அல்லது தொழில்
அதிபர் தாவா போட்டால், அவர்களுக்குத் திரும்ப வேலை வாய்ப்புக்
கிடைக்கும் வரையில் அல்லது குறிப்பிட்ட காலம் வரையில் ஒரு தொகை
கொடுக்க ஒரு இன்ஷூரன்ஸ் ஏற்பாடு இருக்குமேயானால், அவர்கள் அந்த
இடைக்காலத்தில் தங்கள் ஜீவனத்தை நடத்த முடியும். அப்பொழுதுதான்
தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்தவர்கள் ஆவோம் என்று சொல்லி,
அந்த மாதிரிக் கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவர சர்க்கார் ஆலோ
சனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்காரிலே
கூட 500 ரூபாய்க்கு மேல் இருப்பவர்கள் சம்பந்தப்பட்டவரை இன்ஷூரன்ஸ்
கொண்டுவர யோசனை இருப்பதாக அறிகிறேன். நாமும் இங்கே, மாநிலத்தில்
எந்தவிதமான தொழில்களுக்கு அப்படி இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு
வர முடியுமோ அவைகளுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தத் தொழிலுக்குச் செய்தாலும்,
செய்யாவிட்டாலும் தீப்பெட்டித் தொழிலுக்கு உடனடியாக அதைச் செய்தாக
வேண்டும். அது ஒரு பயங்கரமான தொழில். அதில் அபாயங்கள் அதிகமாக
இருக்கின்றன. சாத்தூர் போன்ற இடங்களில் அ... ...யத்திற்கு உள்



10th March 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

ளான தொழிலாக அது இருக்கிறது. ஏதாவது ஏற்பட்டு விட்டால், நெருப்புப்
பிடித்து விட்டால், தொழிலாளர்கள்கூட தப்பிக்க முடியாது. ஒரு
வாரத்திற்கு முன்புகூட ஒரு தீப்பெட்டி லாரிக்கு ஆக்ஸிடெண்டு ஏற்பட்டு
அதனால் லாரியே தீப்பற்றி, இருந்தவர்கள் கருகிச் செத்தார்கள் என்று
பத்திரிகையிலே படித்தோம். அப்படிப்பட்ட பயங்கரமான தொழிலாக
இருப்பதால், இதற்கு இன்ஷூரன்ஸ் அவசியம். அதற்கு ஆவன செய்ய
வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

மெடர்னிடி பெனிபிட் சம்பந்தமாக, முன்பு என்ன செய்திருந்தோம்
என்றால், பிரசவ அலவன்ஸ் சம்பந்தப்பட்ட வரையில், அடிப்படைக்
கூலியில் 2/3 பாகம் அல்லது குறைந்த பட்சம் 12 அணா;
இப்பொழுது அதுவே 75 பைசா ஆகும். இது பத்து
ஆண்டுகளுக்கு முன்பு செய்தோம். இன்றைக்கும் அதே முறைதான் இருக்
கிறது. மத்திய சர்க்காரிலே அண்டை மாநிலத்திலே கூட 2/3 என்ற
சட்டம் இருக்கும்போது நாம் ஏன் இப்படி செய்யக் கூடாது என்று
கேட்க விரும்புகிறேன். எட்டு வாரத்திற்கு பிரசவ அலவன்ஸ் கொடுக்
கும்போது, ரூ. 63 தான் வருகிறது. இந்த 63 ரூபாயில் எட்டு வாரத்தை
யும் பிரசவக் காலத்தையும் எப்படி கழிப்பது? ஜீவனம் எப்படிச் செய்
வது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இருக்கும்
விலைவாசியில் எப்படி வாழமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். ஆகவே, உச்ச வரம்பு கட்டுவதில் அதிக பட்சம் என்பதை
அகற்றிவிட்டால் நலமாகப் போய் விடும். இன்றைக்கு இருக்கும் கூலி
யில் 2/3 பாகம் என்றால் சற்று அதிகமாகக் கிடைக்கும். பெண்களுக்கு
ரூ. 1·50 கிடைக்கிறது, இடைக்காலச் சம்பள உயர்வையும் சேர்த்து
இன்றைக்குச் சட்டப்படி 2/3 பாகம் என்றால் எட்டு வாரத்திற்கு ரூ. 100
வரும். அதைக் கொடுப்பதற்குப் பதிலாய் முதலாளிகள் ரூ. 63 தான்
கொடுக்கிறார்கள் என்பதனால், அதிகபட்சம் என்கிற ஒரே ஒரு வார்த்தையை
நீக்கிவிட்டால், ரூ. 100 கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதை அமைச்சர்
அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1964-ம்
வருஷத்திற்குள்ள போனஸ் விஷயம் இன்னும் முடிவடையவில்லை. 11-30 a.m.
அநேகமாக மே மாதத்தில் முடித்துவிடுவார்கள் என்று நான் நினைக்கி
றேன். இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிந்ததும், முதல் அமைச்சர்
அவர்கள் உதகையிலோ கோயமுத்தூரிலோ வைத்து, தோட்டத் தொழி
லாளர்களைப் பொறுத்த வரையில் 1964-ம் வருஷத்திய போனஸ் பிரச்
னையை முடித்துத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

போனஸைப் பொறுத்த வரையில், குறைந்த பட்சம் நாற்பது ரூபாய்
கொடுக்க வேண்டும் என்று போனஸ் கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டி
ருக்கிறார்கள். லாபம் இருக்கிறதா, நஷ்டம் இருக்கிறதா என்பதைப்பற்றிக்
கணக்கிடவில்லை. லாபம் இருந்தாலும், நஷ்டம் இருந்தாலும், அதைப்
பற்றிக் கவலையில்லை. போனஸைப் பொறுத்த வரையில் குறைந்த
பட்சம் நாற்பது ரூபாய் போனஸ் கொடுக்க வேண்டும் என்று போனஸ் கமி
ஷன் சிபார்சு செய்திருப்பதைத் தயவுசெய்து மாற்ற வேண்டாம் என்று
நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.
எப்படியும் குறைந்த பட்சம் நாற்பது ரூபாய் போனஸ் கொடுக்க ஏற்
பாடு செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்
றேன். தோட்டங்களைப் பொறுத்த வரையில், தேயிலைத் தோட்டங்களுக்
கும், காபித் தோட்டங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்ல
லாம். ஏற்காடு, கூடலூர் பகுதிகளில் காபித் தோட்டங்களில் ஏராள
மான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குறைந்தபட்சம் நாற்பது ரூபாய்
போனஸ் என்பதை அகற்றி விட்டு, காபித் தோட்டத் தொழிலாளர்
களுக்கு வேறு போனஸ் என்று நிர்ணயிப்போமானால், அந்தத் தொழி
லாளர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படும் என்பதை நான் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. ஜே. மாதா கவுடர்] [10th March 1965

லிக் லீவைப் பொறுத்த வரைக்கும், ஓராண்டுக்குப் பதினான்கு நாட்கள்
லிக் லீவ் கொடுக்கிறோம். சாதாரண லிக் பதினான்கு நாட்களில்
சொஸ்தமடையலாம். அதுவும் ஆஸ்பத்திரி வசதி சரியாக இருந்தால் அதற்
குள் குணமடையலாம். தொழிலாளர் பகுதியில் எந்த அளவுக்கு ஆஸ்
பத்திரி வசதி இருக்கிறது என்பதை நாம் நன்றாகத் தெரிந்திருக்கிறோம்.
அங்கே மருந்து அதிகமாக இருப்பதில்லை. ஒரு தொழிலாளி நோயி
னால் பாதிக்கப்பட்டால், க்ரூப் ஹாஸ்பிடலில் அட்மிட் செய்துக்கொள்ளச்
சொல்லி, அவரைச் சாகும் வரையில் அந்த ஆஸ்பத்திரியிலேயே வைக்கி
றார்கள். மருந்தைக் கலக்கிக் கொடுத்து கொடுத்து, சாகிற வரைக்கும் க்ரூப்
ஆஸ்பத்திரியிலேயே வைத்துக்கொண்டிருந்து விட்டு, கடைசியில்,
'டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசரிடம் எடுத்துப் போங்கள், என்னால் முடியாது,'
என்று க்ரூப் ஹாஸ்பிடல் டாக்டர் சொல்லிவிடுகிறார். அதன்பிறகு
அந்தக் கேஸ் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பிடலுக்கு வராது. பாதி
யிலேயே பிணமாகித் திரும்பி வந்து விடும். ஆகவே, தோட்டத் தொழி
லாளிகளுக்கு ஆஸ்பத்திரி வசதிக் குறைவாக இருக்கும் நிலையில், ஒரு
ஆண்டுக்குப் பதினான்கு நாட்கள் லிக் லீவ் அலவன்ஸ் கொடுப்பது போதாது
என்பதைச் சிந்தித்து, அதை அதிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நீலகிரிப் பகுதியில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் டி.பி.
நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று புள்ளி விவரத்திலிருந்து
தெரிந்துகொள்ள முடியும். ஆண்டுக்கு பதினான்கு நாட்கள் லிக் லீவ்
கொடுத்து, சம்பளம் கொடுத்தால் அதற்குள் டி.பி. நோய் எப்படி
சொஸ்தமாகும்? டி.பி. ஆஸ்பத்திரியில் தொழிலாளிகள் ரிஜிஸ்டர்
செய்து அட்மிட் செய்துக்கொள்ள வேண்டுமென்றால், அதில் கஷ்டங்கள்
இருக்கின்றன. ஒரு தொழிலாளிக்கு டி.பி. நோய் ஏற்பட்டு க்ரூப் ஆஸ்
பத்திரிக்குச் சென்றால், அங்குள்ளவர்கள், "டி.பி. ஆஸ்பத்திரிக்குப் போய்
சேர்ந்துக்கொள்" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால், டி.பி. ஆஸ்பத்
திரியில் இடம் வேண்டுமென்று பதிவு செய்துகொண்டவர்களின் "லிஸ்ட்"
டைப் பார்த்தால், இந்தத் தொழிலாளிக்குக் கிட்டத்தட்ட ஒரு வருஷம்
ஆனாலும் கூட டி.பி. ஆஸ்பத்திரியில் இடம் கிடைக்காத நிலைதான் இருக்
கிறது. அந்த ஒரு வருஷத்திற்குள்ளே டி.பி. பேஷண்ட் இறந்துவிடுவார்.
அதனால் இடத்தைப் பற்றிய பிரச்னை அதிகமாக இருக்காது. இதை
எதற்காகச் சொல்கிறேன் என்றால், டி.பி. பேஷண்டுக்காவது, "பதினான்கு
நாள் லிக் லீவ்" என்பதை அதிகரித்து, அவர் சொஸ்தம் ஆகிற வரையில்
லிக் லீவ் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று சட்டம் செய்தோ
அல்லது சிபார்சு செய்தோ சர்க்கார் எப்படியும் வற்புறுத்தி ஏற்பாடு
செய்துவிடுமானால் அவர்களுக்கு நலம் ஏற்படும் என்பதை நான் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுத் தானியங்கள் (ஃபுட் க்ரெயின்ஸ்) சம்பந்தமாக
எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். நம்
நாட்டில் அஸ்ஸாம் போன்ற இடங்களில், பத்து ரூபாய்க்கு 25 லிட்டர் அரிசி
கொடுக்கிறார்கள் தோட்ட முதலாளிகள். பத்து ரூபாய்க்கு 25 லிட்டர்
அரிசி எப்படிக் கொடுக்கிறார்கள் என்றால், சர்க்கார் நிர்ணயித்த விலையைக்
காட்டிலும் அதிகமாக இருக்கும் விலையைத் தோட்ட முதலாளிகளே
தங்கள் கையிலிருந்து போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், நம்
முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அந்த ஏற்பாடு இதுவரை
செய்யப்படவில்லை. அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் யோசிக்
கிறேன். இதையும் தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் ஏப்ரல், மே
மாதத்தில் நீலகிரிக்கு வரும்போது யோசித்து முடிவு செய்ய வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தோட்டத் தொழிலாளிகளுக்கு
பத்து ரூபாய்க்கு 25 லிட்டர் அரிசி கொடுக்க, சர்க்கார் விலைக்கு அதிகமாக
உள்ளதை முதலாளிகள் தங்கள் கையிலிருந்து போட்டு, இந்த திட்டத்தை
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் மீண்டும் பணிவன்போடு கேட்டுக்
கொள்ளுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தோட்டத் தொழி
லிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில்
சேர்ந்தால் அவர்களுக்கு நூறு ரூபாய் தோட்ட முதலாளிகள் கொடுக்க



10th March 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

முன்வந்திருப்பதைப் பார்த்து நான் மிகவும் சந்தோஷம் அடைகின்றேன்.
ஜனப்பெருக்கம் அதிகமாகி இருக்கும் இந்த நேரத்தில், சர்க்கார் எடுத்துக்
கொண்டிருக்கும் இந்த ஒரு திட்டத்தில் இந்த முதலாளிகள் ஒத்துழைக்கி
றார்கள்என்றாலும், எத்தனை காலம் அவர்கள் இதிலே ஒத்துழைப்பார்களோ
என்று நான் அஞ்ச வேண்டியிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நம்
முடைய நாட்டில் இன்னும் பல ஆண்டுக் காலத்திற்கு மிக மிகக் கண்டிப்
பாக இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நிலையில், இந்தத்
திட்டத்தில் சேர்கிற தோட்டத தொழிலாளிக்கு 100 ரூபாய் கொடுத்துவிட
வேண்டும் என்று சட்டமாகவே செய்துவிடலாம். என்பதைப் பற்றிச்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கென்று ஒரு சட்டம் செய்தோ, அல்லது
லேபர் ஆக்ட்டைத் திருத்தியோ நூறு ரூபாய் கண்டிப்பாகக் கொடுத்துவிட
வேண்டும் என்று ஏற்பாடு செய்தால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்குத்
துணையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு இந்த மானியத்தை
ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.
வணக்கம்.

***திரு. சி. சிவசுப்பிரமணியன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்கள்
சொல்ல விரும்புகிறேன். தொழில் முன்னேற்றம், தொழிலாளர் முன்
னேற்றம் என்பது பற்றி நம்முடைய அரசாங்கம் எடுத்துக்கொண்ட நட
வடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். தொழிலாளர்களைப் பற்றியெல்லாம்
பலர் பேசிவிட்டார்கள். விவசாயத் தொழிலாளர்களைப்பற்றியும் ஒரு சிலர்
நம்முடைய மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். சிதம்பரம் தாலூக்காவைப்
பொறுத்த வரையில், காங்கிரஸ் விவசாயத் தொழிலாளர் சங்கம் ஒன்று
இருக்கிறது. அது 1952-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நாளது தேதிவரையில்
அது நடந்து கொண்டிருக்கிறது. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச்
சட்டம் சிதம்பரம் தாலுக்காவிற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,
இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறதா என்றால் நிச்சயமாக அந்தத்
தாலூக்காவில் இல்லவே இல்லை. ஏனென்றால், நினைத்தபடி யெல்லாம்
அந்தச் சட்டம் அங்கே அமுலாக்கப்படுகிறது. சட்டம் வேண்டுமா? திட்டம்
வேண்டுமா? என்ற முறையிலேதான் சிதம்பரம் தாலூக்காவில் ஆட்சி
இருக்கிறதே தவிர, சட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்த முடியவில்லை.
காந்தி மகான் சொன்னார்கள், "விவசாயிகள் இந்த நாட்டின் முது
செலும்பு" என்று. அப்படி அவர்கள் கருதப்படுகிறார்களா என்று பார்த்
தால், அவர்கள் விவசாயத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்று
கருதப்படுவதாக நிச்சயமாகத் தெரியவில்லை. பண்ணையாள் பாதுகாப்புச்
சட்டம் வந்திருக்கிறது. பண்ணையாள் சட்டம் என்றால், வருஷம் பூராவும்
விவசாயி வேலை செய்ய வேண்டும். வருஷம் பூராவும் விவசாயிக்குக் கூலி
கிடைக்க வேண்டும். ஆனால், மூன்று மாதம் விவசாய வேலை முடிந்த
பிறகு, பண்ணையாளை நீக்குவதிலேயே முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறதே
தவிர, அவர்களை வைத்து வேலை வாங்கவேண்டும் என்ற நிலை இல்லை.
பண்ணையாளை நீக்கிவிட்டால் குறைந்த பட்சம் ஆறு மாத வருமானம்
கொடுத்து நீக்கவேண்டும் என்று இருக்கிறது. அதன் பிரகாரம் அங்கு
இல்லவே இல்லை. ஆகவே, அப்படிப் பண்ணையாளை நீக்கினால்
ஆறு மாத வருமானத்தைக் கொடுத்து நீக்கவேண்டும் என்ற ஒரு
நடவடிக்கையை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துக் கூலிகளைப் பற்றிப் பலர் பேசினார்கள். தொழில் கோர்ட்
தொழிலாளர் முன்னேற்றம், தொழில் சட்டம் என்றெல்லாம் இருக்கிறது.
ஆனால், விவசாயத் தொழிலாளர்கள் எங்கு போய் சொல்லிக் கொள்வது
என்றே தெரியவில்லை. டெபுடி கலெக்டரிடம் போவதா, போலீஸ்
ஸ்டேஷனில் போய்ச் சொல்வதா என்று அவர்களுக்குத் தெரிய
வில்லை. கடைசியில் அவர்கள் போகும் இடம் போலீஸ்
ஸ்டேஷனாகத் தான் இருக்கிறது. போலீசாரும் கூலிக்கு நிர்ணயமான
திட்டம் இல்லை என்கிறார்கள். அத்துக்கூலி என்றால் நிலையான
கூலி இல்லை என்று இருக்கிறது. அவர்களுக்குக் கூலி நிர்ணயம்
செய்ய வேண்டும். நாங்கள் என்ன திட்டம் கொடுத்திருக்கிறோம்

என்ருல், உழவடை காலத்திலே பெண்களுக்கு எட்டு (சின்ன) படி ஆண்களுக்கு பத்து (சின்ன) படியும், சாப்பாடும் போட வேண்டும் என்று சொல்கிறேம். அறுவடை சமயத்தில், பெண்களுக்கு பத்து (சின்ன) படியும், ஆண்களுக்கு 12 (சின்ன) படியும், சாப்பாடும் போடவேண்டும் என்று சொல்கிறேம். அதன்படி நடக்கிறதா என்ருல், "கொடுக்க முடியாது" என்று சொல்கிருர்கள், தகராறு வருகிறது. தகராறு வந்தால் உள்ளூர் ஜனங்களுக்கு வேலை இல்லை என்று சொல்கிருர்கள். வெளியூர் ஜனங்களைக் கொண்டுவருகிருர்கள். உள்ளூர் ஆட்களுக்கு வேலை கொடுத்து விட்டுத்தான் வெளியூர் ஆட்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற சட்டம் ஏற்பட்டாகவேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்ருல், உள்ளூர் ஆட்களை விட்டுவிட்டு, நாற்றுக்களைக்கான ஆட்களை வெளியூரிலிருந்து லாரி களில் கொண்டுவந்து இறக்கி வேலை செய்யச் சொல்லுகிருர்கள். இதனுல் உள்ளூர் ஆட்களுக்குப் பசி பட்டினி தாண்டவம் ஆடவேண்டிய நிலை ஏற்படுகிறது. விவசாயிக்கு நல்லது செய்யவேண்டும் என்ற வகையில் சட்டம் இருக்கும்போதே விவசாயிகள் இந்தக் கஷ்டத்தை அடைந்துக்கொண்டிருக் கிருர்கள். ஆக, உள்ளூர் ஆட்களுக்கு வேலை கொடுத்துவிட்டு, மேலும் ஆட்கள் தேவைப்பட்டால்தான் வெளியூர் ஆட்களை வைத்துக்கொள்ள லாம் என்று சட்டம் கொண்டுவர அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். உதாரணமாக, ஒரு ஊரில் மூன்று மரக்கால், இன்னொரு ஊரில் இரண்டரை மரக்கால், இன்னொரு ஊரில் 11 படி, இப்படிப் பலவிதமாக இருக்கிறது. ஆனால், கேட்க முடியவில்லை." என்ன செய்வது ? என்ன கூலி கொடுக்க வேண்டும் என்று சர்க்காரிலே சட்டம் போடவில்லை" என்று போலீசார் சொல்கிருர்கள். கலெக்டரும் "பார்த்துச் செய்யுங்கள்" என்று சொல்லிவிடுகிருர். ஆகவே, கூலி நிர்ணயம் வேண் டும். நம்முடைய சர்க்கார் எத்தனையோ நல்ல காரியங்கள் பல துறை களில் செய்திருக்கும் இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு நல்லது செய்ய இன்னும் முன்வரவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 60 : 40 சட்டம், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கோஷம் இருக்கிற இந்த நேரத்திலே, விவசாயி களினுடைய முன்னேற்றம் இன்னும் தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது என் பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நில வெளியேற்றம் அதிகமாக இருக்கிறது. குத்தகைச் சீட்டு, வாரச் சீட்டு எழுதிக்கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கவில்லை யென்ருல் வெளியேற்றுகிருர்கள். அதே சமயத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் மிராஸ்தாரர்கள் ரிப்போர்ட்டும் செய்து விடுகிருர்கள். போலீசாரும் நிலத்தில் தலையிடக்கூடாது என்கிருர்கள். மேலும் " உங்களிடத்தில் சீட்டு இருக்கி றதா ?" என்கிருர்கள். மிராசுவான்தார்கள் விவசாயிகளுக்குச் சீட்டுக் கொடுப்பதே கிடையாது. சீட்டுக் கொடுத்துவிட்டால் அடுத்த வருஷம் நிலம் வேண்டுமென்று சொல்வார்கள். ஆகவே சீட்டுக் கொடுக்கக் கூடாது என்று இருக்கிருர்கள். இவர்களிடம் சீட்டு இல்லை என்று தெரிந்தவுடன் போலீஸ்காரர்கள் தலையிடுகிருர்கள். அவர்கள் தலையிடக்கூடாது. அப்படி யின்றி இவர்கள் அந்த விவசாயி பயிரிட்ட இடங்களுக்குச் சென்று பக்கத்து நிலக்காரர்களை இந்த நிலத்தில் பயிர் வைத்தது யார் என்று விசாரிக்கலாம். அல்லது அடங்கலையும் பார்க்கலாம். அப்படிச் செய்வது கிடையாது. அதற்கு மாருக அவர்கள் விவசாயிகளிடத்திலேயே " நீ ஏன் அறுவடைக்கு அந்த நிலத்திற்குச் சென்ருய் ?" என்று கேட்கிருர்கள். இப்படி இவர்கள் தலையிடுவது தேவையே இல்லையென்று சொல்ல ஆசைப்படு கிறேன். இவர்கள் மிராஸ்தாரை சிவில் கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டும். இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இத்துடன் ஒரு விவசாயியின் **சோகக் கதை** ஒன்றை சொல்கிறேன் சிதம்பரம் தாலுக்கா, வயலாமூர் என்ற கிராமத்தில் மூன்று மாதத் திற்கு முன்னுல் ஒரு விவசாயி நிலத்திற்கு பூச்சி மருந்து தெளித்தான். பூச்சி மருந்து தெளித்துவிட்டு கரையேறியவுடனே அங்கேயே இறந்துவிட்டான். அவன் சவத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருர்கள். பரிசோனை செய்தார்கள். பஞ்சாயத்தார் பூச்சி மருந்து தெளித்த காரணத்தினுல் இறந்து இருக்கிருன் என்று கண்டு அவருக்கு நஷ்ட ஈடாக—கோர்ட்டுக்குப் போனுல் காலதாமதமாக ஆகலாம், கிடைக்காமல் போகலாம்—சின்ன வயதுடையவன், 25 வயதுடைய மனைவியும், குழந்தையும் அவனுக்கு





இருக்கிறது—ஆகவே 100 ரூபாய் தொகையும், ஒரு காணி நிலமும் அந்த நிலக்காரர் அவன் குடும்பத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். நிலக்காரர் தருவதாகச் சொன்னுர். போலீசார் வாங்கித் தருவதாகவும் ஒப்புக் கொண்டார்கள். ஆனுல் இன்றுவரை தரப்படவில்லை. நான் சப்-இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன். வாங்கித் தரு வதாகச் சொன்னுர். போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன். விசாரித்து உடனே கொடுக்கும்படி செய்வதாகச் சொன்னுர். டிப்டி. சூப் பிரண்டிடமும் சொன்னேன். உடனே கீழ் அதிகாரியைக் கூப்பிட்டு உடனே அதை வாங்கித் தரும்படி செய்வதாகச் சொன்னுர். மூன்று மாதம் ஆகிறது. இன்னும் அதற்குப் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

பண்ணையாளை வெளியேற்றக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. இருந்தும் பலர் வெளியேற்றப்படுகிருர்கள், ஆகவே சர்க்கார் கண்டிப்பாக பண்ணையாட்களை வெளியேற்றக் கூடாது என்பதற்கும், வெளி ஊர்களில் இருந்து ஆட்களைக் கொண்டு வரக்கூடாது என்பதற்கும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. து. ப. அழகமுத்து** : துணைத் தலைவர் அவர்களே, தொழிற் சாலை, தொழிலாளர் மானியம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மானியத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தில் முதல் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுடைய நலனுக்காக என்ன என்ன சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன, அது எப்படி அமுல் நடத்தப்பட்டு வருகிறது என்று விளக்கம் கொடுத்திருக்கிருர்கள். நம்முடைய அரசாங்கம் ஜன நாயக சோஷலிசக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. ஜனநாயக சோஷலிசத்தில் தனியார் துறையும் இருக்கும், பொதுத் துறையும் இருக் கும். பொதுத் துறையில் நடைபெறுகிற காரியங்கள் தனியார் துறைக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும். இன்றைய தினம் குறிப்பாக பொதுத் துறையில் இரண்டு தொழில்களை எடுத்துக் கொள்ளலாம். ஒன்று மின்சார போர்டு இரண்டு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட். மின்சாரத்துறை அடானமஸ் பாடி—மேல் அதிகாரம் சர்க்கார் கையில் இருக்கிறது. ஆகவே அங்கே வேலை பார்க்கிற தொழிலாளர்கள் எப்படிச் சட்டத்தின் பயனை அனுபவிக்கி ருர்கள் என்று தெரிந்து கொண்டால் அதேபோன்ற சலுகை தனிப்பட்ட வர்களிடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் கொடுக்க ஊக்கம் பிறக்கும். ஆனுல் இங்கே மின்சார போர்டைப்பற்றி எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் குறிப்பிட்டபோது கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அதைப்பற்றிப் பேசக் கூடாது என்று தொழில் அமைச்சர் அவர்கள் பேசினுர்கள். இது சர்க்காருக்கு நல்ல பாதுகாப்பாக இருக்கிறது. அவர்கள் தவறு செய்கின்ற நேரத்தில் தொழிலாளர் நலம் பற்றியதானுலும், துப்பாக்கிச் சூடானுலும் அதன் மூலம் வழக்கு ஏற் பட்டால்—அந்தத் தவறை எடுத்துச் சொல்ல முடிவதில்லை. வழக்கு இருக் கிறதென்ற காரணத்தைக்காட்டியே அவர்கள் தப்பித்துக் கொள்கிருர்கள். மின்சார போர்டு தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயம் கிடைக்கவில்லை. அதுபோல ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்று என்னுல் சொல்ல முடியும். ஆனுல் அதுபற்றி தனியாகவே ஒரு மானி யம் வர இருப்பதனுல் அப்போது அவற்றைக் குறிப்பிடலாம் என்று விரும்புகிறேன்.

தொழிலாளர்களுடைய நலன்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதுபற்றி விளக்குவதற்குகாக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் ஆபீசர்கள் ஒழுங்காகச் சென்று பரிசீலனை நடத்துகிருர்கள் என்ற குறிப்பும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரத்தில் ஷாப்புச் சட்டங்களின் கீழ் ஷாப்பு இன்ஸ்பெக்ஷன் எவ்வாறு நடைபெறுகின்றன என்பது பற்றியும் கொடுக்கப்பட்டு

இருக்கிறது. அதிலே கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இரண் டாயிரத்துக்கும் மேற்பட்டு அந்த ஸ்தாபனங்கள் அதிகமாகி இருக்கிறது. தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒன்பதாயிரம் பேர் குறைந்து இருக்கிறார்கள். ஒருகால் தொழிலாளர்கள் முதலாளிகளாக மாறி விட்டார்கள் என்று கூறலாம். ஆனால் இரண்டாயிரம் தொழில் ஸ்தாபனங்கள் அதிகமாகி, வேலையாட்கள் ஒன்பதாயிரமாகக் குறைந்து இருப்பது என்ன காரணத்தால் ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள கடமைப்பட்டு இருக்கிறோம். முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாகப் பல தொழிலாளர்களை வேலையைவிட்டு அனுப்பிவிட் டிருக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நஷ்டம் ஏற்படாத வகையில் இதைச் செய்திருக்கிறார்கள் என்று கொள்ளவேண்டும். அதேபோல ஹோட்டல் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் இருக்கிறது. அதைச் சரியான முறையில் அமுல் நடத்துகிறார்களா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஹோட்டல் தொழி லாளர்களுக்குத் தரவேண்டிய சலுகைகளைத் தராமல், தகராறு ஏற்பட்டு சட்டபூர்வமாகத் தரத்தான் வேண்டும் என்று தீர்ப்பாகிற போது, முதலாளிகள் அந்த ஹோட்டலையே மூடிவிட்டு, வேறு பெயரில் இன்னொரு ஹோட்டலைத் திறந்துவிடுகிறார்கள். தொழி லாளர்கள் அவர்களுக்கான சட்டத்தின் பயனை அடைய முடியாத சூழ்நிலைதான் ஏற்படுகிறது.

அதே போல இன்றைய தினம் பஸ் முதலாளிகள்—சர்க்கார் டிரான்ஸ் போர்ட்டில் உள்ள நிலையை எடுத்துக் காட்டி அதிகமான சலுகை கொடுக்காமல் தப்பித்துக்கொண்டுவிடுகிறார்கள். உதாரணமாக தொழிலாளர்களை டெம்பரரியாகவே வைத்துக்கொள்கிறார்கள். இவ்வளவு காலம் ஒருவர் தொடர்ந்து வேலையில் இருந்தால் நிரந்தரமாகப்பட வேண்டும் என்று இருப்பதால் அதற்குள் இடையில் போகச் சொல்லிவிடுகிறார்கள். அதுபோல் அவர்கள் இவ்வளவு மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. அதற்கும் அதிகமாகவே வேலை வாங்கப்படுகிறார்கள். லீவு முதலிய சலுகைகள் கொடுப்பது இல்லை. இருபது தொழிலாளர்கள் இருந்தால் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் அவர்களுக்குக் கொடுக்கலாம். அதனை முதலாளிகள் கொடுப்பதாகத் தெரியவில்லை. இன்றைக்கு பல முதலாளிகள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே பதவியில் உள்ளவர்களின் துணையைக் கொண்டு தப்பித்து விடலாம் என்று காரியங்களைச் செய்கிறார்கள். பல முதலாளிகள் டெம்பரரியாக ஆட்களை மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக வேலைதேடித்தரும் ஸ்தாபனம் இருக்கிறது. சர்க்கார் கொடுத்துள்ள கணக்குப்படி வேலை இல்லாதவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஸ்தாபனம் எப்படிப் பணியாற்றுகிறது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

வேலை வேண்டியவர்கள் அந்த ஸ்தாபனத்தில பதிந்து வைத்துக் கொள்கிறார்கள். முறைப்படி வேலை கிடைக்கிறதா என்றால் இல்லை. அங்கே ஊழல்தான் இருக்கிறது என்று சொல்வதற்கு இடம் உண்டு. ஒரு ஸ்தாபனத்திற்கு வேலைக்கு ஆள் வேண்டுமென்றால், அந்த ஸ்தாபனத்திற்கு ஒரு லிஸ்ட் அனுப்புகிறார்கள். அந்த லிஸ்டில் உள்ள ஆட்கள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால் மற்றொரு லிஸ்ட் கேட்கிறார்கள். மறு முறையும் ஒரு லிஸ்ட் அனுப்புகிறார்கள். இப்படித் தாங்கள் விரும்புகிற ஆட்கள் அல்லது தாங்கள் விரும்புகிற பெயர்கள் வருகின்ற வரை லிஸ்ட் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். வேண்டிய ஆட்களின் பெயர்கள் வந்த வுடனே வேலைபோட்டுக் கொடுக்கிறார்கள். இதை நான் பஞ்சாயத்து யூனியனில் பார்த்திருக்கிறேன். பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஆளை வேலைக்குச் சேர்க்கவேண்டுமென்று கூறினால் அவர்கள் எம்பிளாய்





பொழுது பெயரை மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து லிஸ்ட் அனுப்பும் என்று சொல்கிறார்கள். அனுப்புங்கள், நாங்கள் போட்டுத் தருகிறோம் யாரைப் போட வேண்டும் அவர்கள் . வேலைக்கு ஆள்போடும்போது பெயர்கள் வரும்வரை என்று விரும்புகிறார்களோ அவர்கள் போட்டுக்கொள்கிறார்கள். இந்த நிலைமை காத்திருந்து அவர்களைத்தான் சாதாரணமானவர்கள், ஏழைகள், இவர்களுக்குக் நீடிப்பதின் மூலம், கிடைக்காமல் போய்விடுகிறது. கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புக் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சி எனவே இதைப் போக்குவதற்கு, ஒரு கமிட்டியை அமைக்க னுடைய வேலையைப் பரிசீலிப்பதற்கு கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமென்று

இந்த நாட்டிலே ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் வேலையில்லாத் திண்டாட் இருக்கிறது. இதோடு உற்பத்தி செய்யப்பட்ட பொற்கொல்லர்கள். இந்த பொற் டத்திற்கு ஆளானவர்கள் கவனிக்கப்படவில்லை. ஏதோ கொல்லர்கள் நிலைமை இன்னும் சொல்கிறார்கள். அப்படிச் சலுகைகள் சலுகைகள் தரப்படுவதாகச் தகுந்த பரிகாரங்கள் கொடுத்தும் அவர்களுடைய குறைகளுக்குத் நடவடிக்கைகள் எடுக்க கிடைக்கவில்லை. எனவே, அதற்கான வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, கடற்கரைப் பக்கங்களில் வாழும் மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சிறு குழந்தை களையும் தங்கள் தொழிலிலேயே ஈடுபடுத்துகிறார்கள். அவர்கள் படிப்பதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. இன்னொரு பரிதாபமான விஷயம் , அந்தக் குழந்தைகளை அவர்கள் 2,000, 3,000 ரூபாய்க்கு அடகு வைத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக்காக மற்றவர் களிடம் விட்டுவிடுகிறார்கள். இப்படிச் செய்வதால் அவர்கள் படிப்பதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, இந்த நிலைமையைப் போக்குவதற்கு, அந்தக் குழந்தைகளைக் கல்வி கற்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் "Government sanctioned a sum of rupees thousand towards Legal Assistants at State cost, to poor and deserving workers or their dependants, claiming compensation under the Workmen's Compensation Act". என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த மாதிரி, சட்டப்படித் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமையைப் பெற முடியாதவர்களுக்கு லீகல் அஸிஸ்டென்ஸ் என்று ரூ. 1,000 கொடுத்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அநேகம் தொழிலாளர்கள் சட்டப்படித் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள், பண வசதியில்லாத காரணத்தால் கோர்ட் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதனால் முதலாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த உதவியை அதிகமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று தொழிலாளர் சம்பந்தமாக நல்ல பல சட்டங்கள் அமுலில் இருக்கின்றன. இது சம்பந்தமாக ராஜ்யத் தொழில் அட்வைசரி போர்டு ஒன்று நிறுவப்பட்டு அது மிக நல்ல முறையிலே என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டு மென்பதைப் பற்றி தீர்மானங்கள் போட்டிருக்கிறது. முக்கியமாக இப்பொழுது "The need to prepare new series of cost of living Index taking the base year 1960

instead of 1936". என்று போடப்பட்டிருக்கிறது. உண்மையிலே இது நல்ல ஒரு காரியம்; செய்யப்பட வேண்டிய ஒரு காரியம். ஆனால் அதிலும் ஒரு குறை இருக்கிறது. காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டெக்ஸ் எடுக்கும்பொழுது முக்கியமாக ஒன்று கவனிக்க வேண்டும். பல ராஜ்யங்களில், அதாவது, குஜராத், மகாராஷ்டிரம் போன்ற ராஜ்யங்களில் ஏற்கனவே காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டெக்ஸ் எடுக்கப் பட்டது; அதில் ஏராளமான தப்புகள் இருக்கிறது. விலைவாசியை ஒட்டி காஸ்ட் ஆப் லிவ்விங்கும் சரியான படி உயரவில்லை என்று உணர்ந்து, அதைக் கண்டு பிடிப்பதற்காக அவர்கள் ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டியைப் போட்டு அதை எந்த வகையில் மாற்றியமைக்க வேண்டுமோ அந்த வகையிலே மாற்றியமைத்து இருக்கிறார்கள். அதேபோல் நம்முடைய ராஜ்யத்திலும் ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டி போடப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்னும் சரியாக வேலை செய்ய வில்லை. நம்முடைய காஸ்ட் ஆப் லிவ்விங் குறைவாக அதாவது டிபெக்டிவ் ஆக இருக்கிறது. அதைச் சரியான முறையிலே திருத்தியமைக்கவேண்டும். ஏனென்றால், டி.ஏ.வை காஸ்ட் ஆப் லிவ்விங் உடன் லிங்க் பண்ணுவது என்று கொள்கைப்படி அந்த அடிப்படையிலே டி.ஏ. இருக்கவேண்டும் என்று ஒப்புக்கொண் டிருக்கிறோம். ஆகையால் காஸ்ட் ஆப் லிவ்விங் சரியாக இருந்தால் தான் டி.ஏ. யும் அதற்குத் தகுந்தபடி கிடைக்கச் செய்ய முடியும். ஆகவே, எக்ஸ்பெர்ட் கமிட்டி இந்தக் குறைகளைப் போக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லேபர் சம்பந்தமாக இந்த இண்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமை எடுத்துக் கொண்டால், உதாரணமாக, மதுரை மீனாக்ஷி மில்ஸ் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் அங்கு இந்த ஸ்கீம் இருக்கிறது. இதே மாதிரி இன்னும் பல இடங்களிலும் கோவாபரேடிவ் சொஸைட்டிகளில் இந்த ஸ்கீம் இருக்கிறது. இதை யொட்டி சில ஆண்டுகளுக்கு முன்பே இடமெல்லாம் வாங்கிப் போட்டுவிட்டார்கள். இடம் வாங்கிப்போட்டு கட்டிடம் கட்டத் தயாராக இருக்கும் அந்த அளவிலே ஒரு கட்டம் வரைக்கும் இந்த ஸ்கீம் சென்றுவிட்டது. ஆனால், இந்த நிலையில் இப்பொழுது ஏதோ ஒரு காரணம் சொல்லி, அதாவது எமர்ஜென்ஸி என்ற காரணத்தைச் சொல்லிக் கைவிடப்பட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். எமெர் ஜென்ஸியாக இருப்பதால் அதற்குப் பணம் கொடுக்கப்பட முடியாத நிலை இருக்கிறது; அந்தப் பணம் வேறு வகையிலே செலவிடப்பட வேண்டியிருக்கிறது என்று ஒரு பதில் ஒரு சமாதானம் சொல்லப் படுகிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலை. புதிதாக யாராவது இப்படிப்பட்ட ஸ்கீமில் சேர்ந்திருந்தால் பரவாயில்லை. ஏற்கெனவே அந்த ஸ்கீமில் சேர்ந்து, நிலமெல்லாம் பணத்தைப் போட்டு வாங்கி, இப்பொழுது கட்டிடத்திற்கு பணம் இல்லை, ஆகையால் நிலத்தையே விற்றுவிடுங்கள் என்று சொல்வது சரியல்ல. ஏனென்றால் இது போன்ற கோவாபரேடிவ் பில்டிங் சொஸைட்டிகளில் எங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். எங்களை எல்லாம் டைரக்டர்களாகப் போட்டுவிடுகிறார்கள். எங்களுக்கெல்லாம் மதிப்புக்கொடுத்து நாங்கள் இருந்தால் தான் அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்ற எண்ணத்திலே மரியாதை கொடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படி யிருக்கும் பொழுது தற்போதைய நிலையில் நாங்கள் அவர்கள் முன்னால் தலைதூக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஏற்கனவே எடுத்துக்கொண்ட ஸ்கீம்களையாவது எடுத்து வீடு கட்டிக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆறு சத வீதம் வட்டியில் Life Insurance Corporation-ல் கடன்வாங்கச் சொல்லப் படுகிறது. அப்படி வாங்கினால் அந்த ஸ்கீமில் உள்ளவர்கள் முதலில் 1,000 முதல் 1,500 ரூபாய் வரையில் கட்டி, 38 ரூபாய், 40 ரூபாய் என்று தவணை மாதாமாதம் கட்டி வர வேண்டும். எனவே



இடமெல்லாம் வாங்கின பிறகு இடத்தை விற்றுவிடுங்கள் என்று சொல்வது நியாயமல்ல; எனவே இதை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் ஜில்லாவிலே மேட்ச் பாக்டரிகள் இருக்கின்றன. அங்கு சிறுவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கிறார்கள். டாக்டர் சர்டிபிகேட் வாங்கினால் போதும். சிறுவர்களை எல்லாம் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். ஸ்கூல் சர்டிபிகேட் இருந்தால்தான் அவர் களை வேலையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்ற வகையிலே மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தினால் மூன்று அபாயங்கள் உள்ளன. அதாவது ஒன்று ஹெல்த், இரண்டாவது டேஞ்சர், மூன்றாவது கல்வி பாதிக்கப்படுவது. ஓரளவு 18 வயது வந்தவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டால் பரவாயில்லை; அவர்களுக்குப் படிப்பு வரவில்லை என்று சொல்லலாம். ஆனால் 10 வயது 12 வயதுச் சிறுவர்களை எல்லாம் வேலைக்கு அமர்த்துக் கிறார்கள். இப்படிச் செய்வதால் அந்தச் சிறுவர்கள் கல்வி கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை மறுப்பது போன்று ஆகிவிடும். ஆகவே இந்த விஷயத்தில் கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இது மாதிரி மாட்ச் பாக்டரியைப் பார்க்கும்போது ஒர்க் ஷெட் என்று பாக்டரி லிமிட்டுக்குக் கொஞ்சம் தள்ளிப் போட்டிருக் கிறார்கள். அதைப் பற்றிக் கேட்டால் அது பாக்டரி லிமிட்டில் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அந்த இடத்திலேயும் அதே வேலை யைத்தான் செய்கிறார்கள். பாக்டரி கண்டிஷன்கள் அதற்கு பாதிக்காத வகையில் அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். இதையும் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 12 00 noon.

கேடரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட், ஷாப் ஆக்ட் ஆகியவை எல்லாம் பூரணமாக அமல் நடத்தப்படவில்லை. ஹோட்டல்களில் ஒருவன் ஆறு மாதத்திற்கு மேல் வேலை செய்தால்தான் நிரந்தரமான தொழிலாளி என்று கருதப்படுவானாகையால் ஆறு மாதத்திற்குள்ளாகவே ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, அவனை வெளியே தள்ளிவிடுகிற நிலை இருக் கிறது. பொதுவாக அவர்களுக்குச் சம்பளம், 20, 30, 40–க்கு மேல் நிர்ணயிப்பதில்லை. அதன் காரணமாகப் அவர்கள் பெரும்பாலோர் 'அன் மாரீடு' ஆகவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. சில சமயங் களில் ஹோட்டல் முதலாளிகள் ஹோட்டலை மூடிவிட்டு மறுபடியும் ஏதா வது ஒருவர் பெயரிலே ஆரம்பிக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. அதே சுவான்தார்தான்; ஆனால் வெளியிலே தோற்றத்திற்கு வேறு ஹோட்டல் மாதிரி காணப்படும். இது போன்ற நிலைமையைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு உணவு கொடுக்காவிட்டால் அவர்களுக்கு ஒரு நாளைக்கு $1\frac{1}{2}$ ரூபாய் படி கொடுக்க வேண்டும் என்று விதி இருப்பினும், அப்படிக் கொடுக்கும்போது, $1\frac{1}{2}$ ரூபாய் கொடுக்காமல் ஒரு ரூபாய், அதற்குக் கீழேயும் கொடுக்கிறார்கள். அதோடு ஷாப் ஆக்டின் படி வேலை நேரம் சரியானபடி அமல் நடத்தப்படுவதில்லை. இதை எல் லாம் சரியான முறையில் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் சம்பந்தப்பட்ட மட்டில் மினிமம் வேஜஸ் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்டது. இப்போது விலைவாசி மிகவும் உயர்ந்திருக்கிறது. சாதாரணமாகவே மூன்று வருஷத்திற்கு ஒரு முறை மினிமம் வேஜஸைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகவே, தற்போதைய விலைவாசிக்குத் தகுந்தபடி டிரான்ஸ்போர்ட் ஒர்க் கர்சுடைய மினிமம் வேஜஸை மாற்றி அமைக்க வேண்டுமென்று' கேட்டுக் கொள்கிறேன். டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் ஆக்ட் சம்பந்தமாக ரூல்ஸ் பப்ளிஷ் ஆகவில்லை. பப்ளிக் அப்ஜக்ஷன்ஸ் எல்லாம் கால்ஃபார் பண்ணப் பட்டு காலதாமதம் இல்லாமல் ரூல்ஸ்களைப் பிறப்பிக்க முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக்டின் கீழ் மினிமம் வேஜஸ் சம்பந்த மாக Sweated இண்டஸ்ட்ரியல் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஆர்பிட்ரரியாக fix செய்யப்பட்டு உள்ளது. காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸை லிங்க் பண்ணினால் நலமாக இருக்கும். அதற்குத் தகுந்தாற்போல் தற்போதைய மினிமம் வேஜஸ் ஆக்டில் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

திரு செங்காளியப்பன் அவர்கள் சொன்னதுபோல் பம்பாய், அகமதாபாத்
டெக்ஸ்டைல் மில் ஒர்க்கர்ஸ் இன்க்ரீஸ்டு பிரிவிலேஜ் லீவ், காஷுவல் லீவ்
வித் வேஜஸ், டிப்யூனலுக்குப் போய், சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று
பெற்றிருக்கிருர்கள். அதேபோன்று நம்முடைய மாநிலத் தொழிலாளர்
களும் டிமாண்டு கொடுத்திருக்கிருர்கள். நம்முடைய கவர்ன்மெண்ட் இது
விஷயத்தில் செலக்டண்ட் ஆக இருக்கிருர்கள். இதையும் ஆர்பிட்ரேஷ
னுக்கு ரெபர் பண்ண வேண்டும். பப்ளிக் செக்டாரில் டிரேட் யூனியன்
ரைட்ஸ் ஓரளவுக்கு இருந்தாலும், முழு அளவுக்கு அவர்களுக்கு டிரேடு
யூனியன் ரைட்ஸும் இன்னும் நல்ல சர்வீஸ் கண்டிஷன்களும்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செட்டில்மெண்ட் ஆப் இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ்களின் தீர்ப்புப் பெற
ஓராண்டுக்கு மேல் ஆகிறது. டிஸ்மிஸ் செய்யப்பட்ட கேஸ்களில் தொழி
லாளர்கள் ஓராண்டு காலத்திற்கு மேல் அனுகூலம் பெறுவதற்காகக்
காத்திருக்க வேண்டியிருக்கிறது. செட்டில்மெண்ட் ஆப் லேபர் டிஸ்ப்யூட்
சில் நான்-எம்ப்ளாய்மெண்ட் கேஸ்களை மூன்று மாதத்தில் முடிக்க
வேண்டுமென்ற நிலைமை ஏற்பட வேண்டும். போனஸ் சம்பந்தமாக
ஒரு கமிஷன் போடப்பட்டு லெஜிஸ்லேஷன் பாஸ் பண்ணுவதாக இருக்கிறது.
டெம்பரரியாக 2 மாத போனஸ், ஒரு மாத போனஸ் மட்டும் கொடுத்து
விட்டு லெஜிஸ்லேஷன் வரப்போகிறது என்று கூறிக்கொண்டு தள்ளிக்
கொண்டே போகிருர்கள். சீக்கிரத்தில் லெஜிஸ்லேஷன் கொண்டுவர
ஏற்பாடு செய்ய வேண்டும். முனிசிபல் மீனியல் சம்பந்தப்பட்ட வரையில்
டெம்பர்வரியாக வைத்திருக்கிருர்கள். ப்ராவிடண்ட் பண்ட், பென்ஷன்
போன்ற எந்த வசதிகளும் அவர்களுக்குக் கிடையாது. லேபர் மான்ற
முறையில்........(மணி அடிக்கப்பட்டது).

*திரு சி. பொன்னுசாமி: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே,
கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை
ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தொழி
லாளிகள் சம்பந்தமாகப் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நான்
என்னுடைய சொந்தக் கருத்தைப் பொதுவாக உள்ள முறையிலே சொல்
வதுதான் சரி என்று சொல்ல விரும்புகிறேன். தொழிலாளிகளை எடுத்
துக்கொண்டால் இந்த நாட்டில் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று
தினப்படி கூலி வாங்குகிறவர்கள்; மற்றொன்று மாதச் சம்பளம் வாங்கு
கிறவர்கள். பிளாண்டேஷன் போன்ற வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்
கூடிய பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழி
லாளிகளையும், உணவுப் பொருளான நெல் போன்றவற்றை உற்பத்தி
செய்யக்கூடிய தொழிலாளிகளையும், தொழிற்சாலையில் வேலை செய்யக்
கூடிய தொழிலாளிகளையும் எடுத்துக் கொள்ளும்போது அவர்களுடைய
வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது என்பதை நாம் கொஞ்சமும்
சுணங்காமல் வேகமாகப் பார்க்க வேண்டிய காலம் இந்தக் காலம்
என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கு பொருள்களின் விலை ஏறிக்
கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அவற்றை வாங்கும் சக்தி இல்லாமல்
கஷ்டப்படுகிறவர்கள் தொழிலாளிகள் என்பதை நாம் எல்லோரும் அறிந்து
கொள்ளவேண்டும். மாதம் 75 ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய தொழி
லாளிகள் லட்சக்கணக்கான பேர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்
கள். இவர்களுடைய கஷ்டங்களை அறிந்து நிவர்த்தி பண்ணுவதற்கு வழி
கண்டுபிடிக்க ஒரு கமிஷனை ஏற்பாடு செய்து அவர்கள் ஆறு மாத காலம்
நன்ருக ஸ்டடி செய்து ரிப்போர்ட் கொடுத்தால் அதை வைத்துக்
கொண்டு, மாகாண சர்க்கார், மத்திய சர்க்கார், தொழில் அதிபர்கள்
என்ற மூன்று செக்ஷனும் சேர்ந்து அந்தத் தொழிலாளர்களுடைய
வாழ்க்கையை உயர்த்தப் பாடுபடுவார்களேயானுல், அவர்களைப் பொறுத்து
இந்த நாட்டில் ஒரு நல்ல நிலைமை ஏற்பட முடியும் என்பது என் சொந்தக்
கருத்து. இன்று தேயிலை, மிளகு, தும்பு, ஈக்கு, சென்னு இலை
போன்ற பொருள்கள் பெருமளவுக்கு அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதியாகிக்
கொண்டிருக்கிறது. அதனுல் இரண்டு கோடிக்கும் அதிகமாக அந்நியச்
செலாவணி கிடைக்கிறது. அந்த அளவுக்கு அந்நியச் செலாவணியைப்



பெற்றுத் தரக் கூடிய தொழிலில் பாடுபடக்கூடிய அந்தத் தொழிலாளர்
களுக்கு மிகுந்த சலுகைகளைக் கொடுக்கும் வகையில் மத்திய சர்க்கார்
தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு மாகாண சர்க்காரும் கவனம்
செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியிலிருந்து பெருமளவுக்கு தும்பு, ஈக்கு, சென்னு இவை
கள் அதிகமான அளவுக்கு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டு
இருக்கிறது. அந்தத் தொழிலாளிகள் தினக் கூலி கூடச் சரியானபடி
கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர்
களுடைய சம்பளத்தை மாற்றி அமைக்கும் வகையில் அதற்கான ஒரு
திட்டம் வகுத்து நம்முடைய மாநிலம் முழுவதும் ஒரு நல்ல ஏற்பாட்டைச்
செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் தொழில் வாய்ப்பை அதிகப்படுத்த வேண்டும். விவசாயத்
தொழிலுக்கு ஏற்கனவே தொழிலாளர்கள் இல்லாமல் வெளியில் இருந்து
கொண்டுவந்து குறைந்த சம்பளத்திற்கு ஏற்பாடு செய்கிருர்கள் என்று
சொன்னுர்கள். அதுபோல் பல தொழில்கள் இருக்கின்றன. ஆகவே,
தொழில் வளர்ச்சி அடையும் நிலையை உண்டுபண்ண வேண்டும். சிறு சிறு
தொழில்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், மூன்று லட்சம் ரூபாயில்
தொழில்கள் ஆரம்பித்தால் பர்மா அகதிகள், சிலோன் அகதிகள்,
பொற்கொல்லர்களாக இருந்து கஷ்டப்படுபவர்கள் இருப்பார்களானுல்,
அவர்களுக்கு எல்லாம் இந்தத் தொழிலை ஆரம்பிக்க முதல் வாய்ப்பு
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்கள் இந்த
நாட்டின் மேல் பற்றுக்கொண்டவர்களாக இருக்கிருர்கள். குறிப்பாக
சமீபத்தில் நடந்த புயல் நிவாரணத்திற்காக ஒவ்வொருவரும் தங்கள் ஒரு
நாள் சம்பளத்தை தூத்துக்குடியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள்
கொடுத்திருக்கிருர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள
ஆசைப்படுகிறேன். பாக்டரிகளை எடுத்துக் கொண்டால், சில பாக்டரிச்
சட்டங்கள் தொழிலாளர்களுக்கு அல்லது தொழில் வளர்ச்சிக்கு சில
கஷ்டங்களை ஏற்படுத்துகிறது. அவற்றை மறு பரிசீலனை செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தீப்பெட்டித் தொழிலைச்
சேர்ந்த மத்தாப்பு, வாண வேடிக்கைப் பொருள்கள் இவை எல்லாம்
குடிசைத் தொழிலாக இருந்து லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு
வேலை வாய்ப்புக் கொடுக்கிறது. அந்தத் தொழில் அதிபர்களுக்கு அதிகப்
படியான லாபம் கிடைத்தால், அதை வரி மூலம் சர்க்கார் எடுத்து தொழி
லாளர்களுக்கு நன்மை செய்ய முடியும். அப்படியில்லையென்ருல் அவர்
களுக்கு வீடு கட்டும் திட்டம், போனஸ் திட்டம் போன்றவற்றின்
மூலம் நன்மை செய்யமுடியும். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்
நிறைய இருக்கின்றன. ஆகவே தொழில் வளர்ச்சிக்காக என்ன
என்னச் செய்யவேண்டுமென்பதை மாநில சர்க்கார் பார்த்து அவைகளைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சானிட்டரி தொழிலாளர்கள்,
சுகாதார சம்பந்தமான தொழிலாளர்களுக்கு ஸ்டேட் வொய்டாக சட்டம்
கொண்டு வந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும்
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடியில் நகரசுத்தித்
தொழிலாளர்களுக்கு பல இன்னல்கள் இருக்கின்றன. அவர்களுக்குச் சில
அலவன்ஸ் கொடுத்து அவர்களை நல்லமுறையில் ஆதரிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். பாமிலி ப்ளானிங்கை எடுத்துக் கொண்டால், உணவுப்
பொருள்களை உற்பத்திச் செய்ய எப்படி தொழிலாளர்களுக்குஉற்சாகம் காட்ட
வேண்டுமென்று நினைக்கிருேமோ, அதேபோன்று இந்த உற்பத்தியைக்
*குறைத்துக்கொள்ள அதற்காகப் பாடுபடும் தொழிலாளர்களுக்கு உற்சாகம்
ஏற்படக்கூடிய நிலையில் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக ஈடுபடும் தொழி
லாளிகளுக்கு எந்தெந்த வகையில் உற்சாகம் ஊட்ட முடியும் என்பதிலும்
சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து
ஏராளமான பணம் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிருர்கள். அதை
வாங்கி கமிஷன் கொடுப்பது அல்லது உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம்
அதிகமாகக் கொடுப்பது அல்லது விசேஷமாகச் செலவு செய்வது ஆகியவை
செய்ய வாய்ப்பிருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அடுத்தபடியாக, சினிமா மூன்ருவது ஷோ காண்பிப்பதை

கூடுமான வரையில் குறைத்தால் தொழிலாளர்கள் சிக்கனமான முறையில்
வாழ வாய்ப்பு ஏற்படும். அதோடு வீணாக நம்மன் சக்தியை விரயம்
செய்யாத, செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படும். 9½ மணிக்குமேல் உள்ள
சினிமாக் காட்சியை வைத்துக் கொள்ளாமல், பகலில் வேண்டுமானால்
வைத்துக்கொள்ளட்டும். அதை வேண்டாமென்று தள்ளிவிட்டால் அது தொழி
லாளர்களுக்கு நன்மை பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.
தூத்துக்குடியை எடுத்துக் கொண்டால் நம் மாநில சர்க்காரும், மத்திய சர்க்
காரும் தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக்கொண்டு பெரு முயற்சி செய்து
வருவது பெருமைக்குரியது, வரவேற்கத்தக்கது. இரண்டு ஆண்டுகளாக அந்த
வேலைகள் வேகமாக துரிதமாக நடந்து கொண்டுவந்தது. ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள் அங்கு வேலை செய்து வருகிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு
மாதங்களாகக் கொஞ்சம் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரி
லிருந்து காலாகாலத்தில் வரவேண்டிய பணம் துரிதமாக வரவில்லை
என்று தெரிகிறது. ஆகவே மாநில சர்க்கார் இதை கூர்ந்து அதைக்
கவனிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்
என்பதோடு அந்தந்தக் காலத்தில் வேலைகள் விசேஷமாக நடக்காவிட்டால்
மெயின்டெனன்ஸ் காஸ்டில் சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படும். ஆகவே
அதுகுறித்து மாநில சர்க்கார் வேண்டுவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒரு கமிஷன் ஏற்பாடு செய்து வாங்கும்
சக்தி தொழிலாளர்களுக்கு எப்படியிருக்கிறது என்று தெரிந்து அதற்கு
வேண்டியதைச் செய்யவேண்டும் என்று கூறி இதை ஆதரித்து என் பேச்சை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member Sri K. A. Mathialagan may now speak. I allot him 10 minutes.

SRI K. A. MATHIALAGAN : **Sir, I want at least 15 minutes.**

MR. DEPUTY SPEAKER : There is another hon. Member to speak, viz., Sri M. S. Mani. Anyway, let the hon. Member proceed.

***திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இப்போது நடைபெறுகிற இந்தத் தொழில் மானியத்தின் மீது கனம்
உறுப்பினர்கள் எல்லாம் கூறியதைத் தொடர்ந்து ஒரு அம்சத்தைமட்டும்
கனம் முதல் அமைச்சர் அவர்களின் பார்வைக்கு வைக்கலாம் என்று
நான் கருதுகிறேன். 1958-ல் நைனிட்டாலில் நடைபெற்ற தொழிலாளர்
மாநாட்டிலிருந்து தொழில் அமைதியும், தொழில் முறைகளும் நிர்ண
யிக்கிற நல்ல கொள்கைகளும் உருவாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை
இந்த மன்றமும் நம் கனம் முதல் அமைச்சர் அவர்களும் நன்கு
அறிவார்கள். முதலில் தொழில் தகராறுகளை பேச்சு வார்த்தைகள்
மூலம், பின் ஆர்பிட்ரேஷன் மூலமும், அப்படி முடியாது போனால்
இறுதி முடிவாக அட்ஜுடிகேஷன் மூலமும் நிறைவேற்றிக் கொள்ள
வேண்டுமென்ற கொள்கைக்கு நம் சென்னை மாநிலத்திலும் உடன்பாடு
வந்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அதுவும் குறிப்
பாக நம் கனம் முதல் அமைச்சர் அவர்கள் 1962-ம் ஆண்டு இங்கு
ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தொழிலுறவு மாநாட்டிலும்
அதற்குப் பின்னால் நடைபெற்ற மாநாட்டிலும் எல்லாம்
இந்தக் கொள்கைகளை மிக அழகாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.
பொதுத் துறைத் தொழில்களைப் பொறுத்த வரையில் அவைகள் எப்படி
நடந்துக் கொள்ள வேண்டும், நடக்க வேண்டுமென்று கூறுகிற நேரத்தில்
அது ஒரு "மாடல் எம்ப்ளாயர்" ஆக, முன் மாதிரியான ஒரு எம்ப்ளாய
ராக இருக்க வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதை
இந்தச் சபையும் நாடும் நன்றாக அறியும். ஆண்டுதோறும் இந்த மன்றத்
தில் இந்த விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால்
இந்தக் கொள்கைகள் எல்லாம் எப்படி நடைமுறைப்படுத்தப் படுகிறது
என்று இன்றைக்குப் பரிசீலித்துப் பார்த்தால் சொல்கிற கொள்கைக்கும்



நடைமுறைக்கும் நேர் முரண்பாடு இருக்கிறது என்று கூற மிகவும்
வருத்தப்படுகிறேன். நான் இந்த சர்க்கார் மீது இந்தத் தொழிலாளர்
சம்பந்தமாக சில குற்றச் சாட்டுக்களைச் சாட்டுகிறேன்.

I charge this Government that in this final year of Third Plan period, this Government has failed in fulfilling the principles laid down in the preamble to the Plan that the success of the plans depends to the extent of rallying the voluntary and willing co-operation of thousands of our citizens. This is my charge number one.

Then, I charge this Government that they have totally failed to instil in the minds of tens of thousands of workers that they are partners in these enterprises and not merely wage earners. This is my charge number two.

Then, I charge this Government particularly the Hon. Chief Minister-*cum*-Labour Minister for not honouring the declarations of the Tripartite Conferences to which he has been a party. This is my third charge.

Sir, above all, I charge this Government that they had abdicated from exercising the quasi-judicial function entrusted to it under the Act of Parliament and has acted in an arbitrary fashion and partisan spirit in dealing with the Labour disputes in the Industrial concerns controlled by it. This is my fourth charge.

இந்த நான்கு குற்றச்சாட்டுகளையும் நான் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்
கள் மீதும் இந்தச் சர்க்கார் மீதும் சாட்டுகிறேன். அதற்கான ஆதாரங்களாகக்
கூறுகிறேன். வழக்கிற்குள் போகவில்லை. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்
படி 12 (5) செக்ஷன்படி அட்ஜுடிகேஷன் கேட்டால் மறுப்பதற்குக் காரணம்
சொல்ல வேண்டுமென்று இருக்கிறது. அதைச் செயல்படுத்தினார்களா
இந்தச் சர்க்கார், அதற்கான காரணங்களைக் காட்டிக் கொண்டார்களா என்
றால் இல்லை. 12 (5) விதிப்படி அரசாங்கம் தீர்ப்புக்கு விடுவதை தன்னிச்
சையாக மறுக்கும் உரிமை படைத்திருப்பதாகக் கொள்ள முடியாது.
தகராறைத் தீர்ப்புக்கு விட மறுப்பதற்குக் குறிப்பிடும் காரணங்கள் தகராறுக்
குரிய சம்பவங்களையும் சூழ்நிலைகளையும் அரசாங்கம் பரிசீலித்து அதன்
விளைவாக எழுந்தவையாக இருக்க வேண்டும். அப்படி அல்லாது சட்டத்
தில் உள்ள பதங்களை மட்டும் கையாள்வது என்றால் அது பொருத்தமல்ல.
அதை அரசாங்கம் கொடுக்க வேண்டிய காரணங்களாக நிச்சயமாகக்
கொள்ள முடியாது. அரசாங்கம் செக்ஷன் 12 (5)-ன் கீழ் விசாரணைக்கு
அனுப்ப மறுக்கும்போது அதற்குரிய காரணங்களைக் காட்டுவதற்குக் கடமைப்
பட்டுள்ளது. காரணங்களின் தன்மையோ அதிலுள்ள ஏற்கத் தக்க
அம்சமோ நியாயப்படுத்த இயலாத ஒன்றாக இருந்தாலும், ஒருவரால்
புரிந்து கொள்ளக் கூடியதாகவேனும் இருக்க வேண்டும். ட்ரிப்யூனலின்
தீர்ப்புக்கு விட சாத்தியமில்லை என்ற நிலையை அரசாங்கம் மேற்
கொண்டால் அதற்கு ஆதரவாகக் கூறப்படும் காரணங்கள் நன்றாக
ஆய்ந்து பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும். "சாத்தியமில்லை" "It is
inexpedient" என்று சொல்வதை சட்டப்படியும் ஏற்றுக்
கொள்வதற்கில்லை. சாத்தியக்கூறு பற்றிய பரிசீலனைகளைப் புறக்கணிக்க
இயலாது என்ற போதிலும் ட்ரிப்யூனலின் தீர்ப்பிற்கு விட அரசாங்கம்
தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமா வேண்டாமா என்
பதை எண்ணிப் பார்க்கும்போது "சாத்தியக் கூறு" என்ற போர்வையில்
முற்றிலும் சம்பந்தமற்ற புறம்பான காரணங்களை ஆதாரமாகக் கொள்
வதற்கும் அரசாங்கத்திற்கும் வாய்ப்பு இருக்கக் கூடாது. எழுப்பப்பட்டுள்ள
தகராறில் வற்புறுத்தப்படும் உரிமை காலங்கடந்ததாகவோ சட்டத்தின்
விதிகளுக்கு எதிரானதாகவோ, அல்லது இரண்டு தரப்பினரும் செய்துக்

கொள்கை ஒப்பந்தத்திற்குப் புறம்பானவையாகவோ இருக்கிறதா என்ப
தைத் தெரிந்த அத்தகைய தொழிலாளிகள் அந்தத் தகராறில் உள்ளடு
என்று அரசாங்கம் முடிவு செய்தால் "சாத்தியக்கூறு" என்ற அடிப்
படையில் அதனை விசாரணைக்கு அனுப்ப மறுக்கலாம். என்றாலும்
விசாரணைக்கு அனுப்புவது சாத்தியமா இல்லையா என்பதைப் பரிசீலனை
செய்வதில்கூட தவறுக்கும் உணர்வோடு அரசாங்கம் ஒருபோதும்
செயல்படக் கூடாது. மற்ற முறையான ஆதாரங்களையும் குற்றச்சாட்டுகளை
யும் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு பிரச்னையை பாரபட்ச மற்ற
முறையிலும் நியாயமாகவும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்படிச்
சீர்தூக்கிப் பார்க்கிறதா அரசாங்கம்? இது மட்டுமல்ல, சட்டப்பகுதியில்
வரும் சொற்களை மட்டுமே வைத்துக்கொண்டு விசாரணைக்கு அனுப்ப
மறுப்பதும் "அதற்குச் சாத்தியமில்லை" என்பதையே காரணமாகக் காட்டு
வதும் அதன் உட்பொருளோடு ஒன்றியதாக இருக்க முடியாது என்பதை
நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் சாத்தியமில்லை
என்பதை விளக்குவதற்குத் தக்க காரணங்கள் காட்டப்பட்டிருக்க வேண்டும்
என்று பல முறைகளிலும் சட்டப்படி சொல்லப்பட்டிருக்கிறது. சாத்திய
மில்லை என்ற காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு விசாரணைக்கு
அனுப்பக் கோரும் வேண்டுகோளுக்கு ஒரு இறுதி முடிவு கட்டக் கூடியதாக
இந்த அரசாங்கம் சொல்லி வருகிறது என்பதைத்தான் நான் இந்த
அரசாங்கத்தின்மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். எனக்கு இதில் இன்
னும் பத்து நிமிடங்கள் அதிகமாகப் பேசுவதற்கு இடம் தரவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** அவ்விதம் எடுத்துக் கொண்டால் மற்றவர்
கள் எப்படிப் பேசுவது? கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசட்டும்,
பார்க்கலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சர்க்கார் இவ்விதம் சாத்தியமில்லை என்று
சொல்வது சரியா தப்பா என்பதைப் பரிசீலிக்கும்போது, இந்தச் சந்தர்ப்பத்
தில் நான் ஒரு வழக்கினுடைய தீர்ப்பைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.
இன்றைய தினம் மத்திய அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்துவரக்
கூடிய திரு. சாக்ளா அவர்கள் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் பிரதம
நீதிபதியாக இருந்த நேரத்தில்—பம்பாய் அரசாங்கத்திற்கும், எஞ்சினியரிங்
ஸ்டாப் யூனியனுக்கு இடையில் ஏற்பட்ட வழக்கில், தீர்ப்பு வழங்கியிருக்
கிறார்கள், அந்தத் தீர்ப்பில் "The Government is the executive power
of the State and when the Legislature entrusts certain powers to
Government, it does so in the hope and expectation that that power
would be exercised in the 'intertests of the people at large."
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் செக்ஷன் 12(5)ன் கீழ் ட்ரிப்யூன
லுக்கு விடுவதற்கு மறுக்குமேயானால் அதனுடைய தன்மையைப்பற்றி
பரிசீலிக்கக் கூடாது என்ற வாதத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதில்
அரசாங்கத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதையும் விளக்கி
இருக்கிறார்கள். சமரசம் செய்துக் கொள்வதற்கு முன் வைத்த அடிப்படை,
பாரபட்சமற்ற நியாயமான அடிப்படைதானா என்பதையோ அல்லது
தொழிலாளர்கள் முன் வைத்த கோரிக்கைகள் அநியாயமான கோரிக்கை
களா என்பதையோ பரிசீலனை செய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரமில்லை
என்பதே இதன் விளைவு என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மின்சார
போர்டை பொறுத்த வரையில் இந்தச் சட்டமன்றத்தால் பதவி வகிக்கும்
அமைச்சரவைதான் வழி நடத்திச் செல்கிறது. இந்தச் சட்ட மன்றம் நிறை
வேற்றிய சட்டத்தின் அடிப்படையில்தான் இந்த நிறுவனம் உருவாக்கப்
பட்டது. அமைச்சரவையின் கொள்கைக்கு ஏற்பத்தான் இந்த நிறுவனம்
நடந்து வரமுடியும். அந்த முறையில் மின்சார நிறுவனத்திலுள்ள
50 ஆயிரம் பேர்கள் தங்களுக்குப் பஞ்சப்படி வேண்டும், அதனை அட்ஜூடி
கேஷனுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு
இந்தச் சர்க்கார் என்ன சொன்னது? பஞ்சப்படி கொடுத்தால் லாபம்





போய்விடுமே என்று சாதாரண தனிப்பட்ட முதலாளிகள் சொல்வது
போல் சொல்லியது. இதே போன்று தனியார் சொன்னார்கள் என்றால்
அதை அட்ஜூடிக்கேஷனுக்கு விடுவதற்கு சர்க்கார் முனைகிறது, அது
மட்டும் எப்படி நியாயமாகும்? அதே நேரத்தில் இங்கே மின்சார
போர்டாரிடம் பஞ்சப்படி வேண்டும் என்று கேட்கும்போது என்ன
சொல்லியிருக்க வேண்டும், மற்றவர்களுக்கு மாடலாக இதன் மீது
சர்க்கார் முடிவு சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இதற்கு மட்டும்
"சாத்தியமில்லை" என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்பதை
கனம் உதவி சபாநாயகர் அவர்களே உங்கள் மூலமாக இவர்களைக் கேட்க
விரும்புகிறேன். மின்சார போர்டிலுள்ள 50 ஆயிரம் தொழிலாளர்கள்
தங்களுக்குப் போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அது
கொடுப்பதற்கில்லை, இந்தக் கோரிக்கையைத் தீர்ப்புக்கு அனுப்ப முடியாது
என்று சர்க்கார் கூறுகிறது. அதற்கு என்ன காரணம் கூறுகிறது
சர்க்கார்? எங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை, அவர்
கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லிவிடுகிறார்களே
தவிர, முதலமைச்சர் அவர்கள் அதிலுள்ள முக்கியத்துவத்தைப் பார்க்கத்
தவறி விட்டார்கள் என்றே நான் கூற ஆசைப்படுகிறேன். சர்க்கார் இதை
ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக கோர்ட்டுக்கு விஷயம் போனது,
கோர்ட்டார் இதில் என்ன சொன்னார்கள்.........

1. Fixation of dearness allowance;
2. Claim for bonus;
3. Provision of Provident Fund Benefits and Gratuity claims;
4. Fixing the age of superannuation;
5. Permanancy of N.M.R. workers; and
6. Abolition of the Contract system.

இந்த ஆறு விஷயங்களையும் அதாவது இந்த ஆறு கோரிக்கைகளையும்
அட்ஜூடிகேஷனுக்கு விடவேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு
அளித்திருக்கிறது. நாங்கள் அதற்கு அப்பீல் செய்யப் போகிறோம் என்று
அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் சொல்வார்கள். ஓர் உயர்நீதிமன்றம்
அட்ஜூடிகேஷனுக்கு விடவேண்டியதுதான் இந்த கோரிக்கைகள் என்று
சொல்லும்போது, சர்க்கார் அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்வரவில்லை
என்றால், இதில் சர்க்காருடைய தொழில் கொள்கை எங்கே இருக்கிறது?
நீங்கள் பிரகடனப்படுத்திய தொழில் கொள்கைக்கு எங்கே விசுவாசமாக
நடந்து கொண்டீர்கள் என்று கேட்கிறேன். எங்கே சோஷியலிஸ சமதர்ம
கொள்கை இருக்கிறது என்று கேட்கிறேன். உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளி
வந்த மறுநாளே தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சங்கம் அமைச்சரை
சந்தித்து கோரிக்கைகளை மன்றத் தீர்ப்பிற்கு அனுப்பவேண்டும், முக்கூட்டு
மாநாடு கூட்ட வேண்டும் என்று வற்புறுத்தியது. கோரிக்கையை ஒத்துக்
கொள்ளாதது மட்டுமல்ல, கோர்ட்டுக்குப் போயிருக்கிறீர்கள். மீண்டும் கேட்
கிறேன், இது உங்கள் தொழில் கொள்கைக்கு உகந்ததுதானா?
மின்சார போர்டை பொறுத்தவரையில் உள்ளபடியே சர்க்கார் ஆக்டின்
கீழ் தான் நடந்துக் கொண்டிருக்கிறது. சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழ்
தான் நடந்துக் கொண்டிருக்கிறது. இந்த மன்றத்தினுடைய சட்டத்தின்
மூலம் தான் இது இயங்கி வருகிறது. இப்பேர்ப்பட்ட நிலையில் சர்க்காருக்கு
இதில் ஒன்றும் செய்வதிற்கில்லை என்று சொன்னால் அதை எப்படி
ஒப்புக்கொள்வது? ஏழைத் தொழிலாளர்களைப் பாதுகாத்துக்கொள்ளக்
கூடிய விதம் இது தானா? இது தானா சோஷயலிஸ கொள்கை? என்று
கேட்க ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தஅளவில், இது
கனம் முதலமைச்சர் அவர்களுடையவும் கனம் தொழில் அமைச்சர்
அவர்களுடையவும் பிரச்சினையாக இருந்து வருகிறது. ஏதாவது செக்ஷ
னிலுள்ள சூத்திரத்தை மட்டும் கடைப்பிடித்துக்கொண்டு, அட்ஜூடிகேஷ
னுக்கு விட வேண்டுமா, விடக்கூடாதா என்று பகைபுலனில் தாவா
விலுள்ள பிரச்சினையை சர்க்கார் பரிசீலனை கூடச் செய்யாமல் இதற்காக
எத்தகைய காரணங்களையும் கொடுக்காத நிலையில் சர்க்கார் தங்கள்

[illegible] 50,000 [illegible] இந்த முறையது என்று கூறி [illegible] வணக்கம்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் [illegible] அவர்கள் [illegible] தொழிலாளர்களைக் குறித்தும் [illegible] முறையில் நான் [illegible] கொள்கிறேன்.

[illegible] சர்க்கார் இயற்றிய [illegible] சட்டத்தின் [illegible] நமக்கு அதிகாரம் கிடையாது. சட்டத்திற்கு உட்பட்டு நடந்து [illegible] போன்ற [illegible] மின்சார போர்டு [illegible] சர்க்கார் [illegible] ஆனால், பாலிஸி விஷயத்தில் சர்க்கார் அவர்களுக்கு [illegible] பொதுவான நோக்கம். கனம் என்று மட்டும் சொல்லப்பட்டது. சட்டத்தின் என்ன அதிகாரம் இருக்கிறதோ அதைத்தான் சர்க்கார் செய்யும். [illegible] எதையும் செய்ய முடியாது. சர்க்காரிடமிருந்து நான் பணம் கொடுக்கிறேன் என்ற காரணத்திற்காகவும் எதையும் செய்ய முடியாது, சர்க்கார் [illegible] காரணத்தினாலும் எதையும் செய்ய முடியாது. நான் பொதுவாக விளக்க விரும்புகிறேன்.

12-30 p.m. அடுத்தபடியாக, கோரிக்கைகளைப்பற்றி நான் ஏற்கனவே கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் பேசுகிறபோது, "அதை விளக்கினால் நான் பதில் சொல்லும்படியாக இருக்கும். அதனால் ஏதாவது தீர்ப்புகள் பாதிக்கப்படலாம்" என்று சொன்னேன். ஆனால் கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் அந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக இருக்கிற தீர்ப்புகளை வெளியே எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தினால், சர்க்காருடைய.......... (திரு. கே. ஏ. மதியழகன். தீர்ப்புகளைச் சொல்லவில்லை) நானும் எந்தத் தீர்ப்பு என்று சொல்லவில்லை. இது சம்பந்தமாகச் சர்க்காருடைய கொள்கை என்ன என்று விளக்க விரும்புகிறேன். 1957-ம் வருஷம் வரையிலும் மின்சார போர்டு ஊழியர்கள் எல்லோரும் சர்க்கார் ஊழியர்களாக இருந்தார்கள். அதற்குப் பிறகு தனியான போர்டு அமைத்தவுடன், அவர்கள் தனி ஊழியர்களாக, சாதாரண கமர்ஷியல் எம்ப்ளாயீஸ் போல இருக்க விரும்புகிறார்களா அல்லது சர்க்கார் ஊழியர்கள் போல இருந்து, சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற எல்லா விதச் சலுகைகளையும் பெறத் தயாராக இருக்கிறார் களா என்ற ஒரு பிரச்சினை எழுந்தது. அப்படி 1957-58-லே சில கோரிக்கை கள் விடுக்கப்பட்டன. என்னிடத்தில் ஒரு சங்கத்தார்—எனென்றால் இந்த மின்சார போர்டில் 50,000 தொழிலாளர்கள் இருந்தாலும், சற்று ஏறக் குறைய 7-8 தொழிற் சங்கங்கள் இருக்கின்றன—எல்லோரும் இந்த 50,000 பேருக்காகப் பேசுவதாகச் சொல்லுகிறார்கள், எந்தத் தொழிற் சங்கம் 50,000 பேர்களுக்காகச் சொல்லுகிறது என்று நான் சொல்ல முடியாது, குறிப்பாக ஒவ்வொரு தொழிற் சங்கத்திலும் உள்ள அங்கத் தினர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் மிகவும் குறைவாகத் தான் இருக்கும். அநேகம் பேர்கள் சந்தா கொடுப்பது கூட வேஸ்ட் என்ற





நிலையில் இருக்கிறார்கள். இருந்தாலும், 50,000 தொழிலாளர்கள் சார் பாகப் பேசுவதாக ஒவ்வொரு தொழிற் சங்கமும் சொல்லிக் கொண்டி ருக்கிறது—ஒரு தொழிற் சங்கம் வந்து "எங்களைத் தனியான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும், சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் தேவையில்லை, அந்தப் பலவிதச் சலுகைகள் வேண்டாம், தனித் தொழிலாளர்களாக எங்களை நிர்வகிக்கலாம்" என்று சொன் னார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க—நான் அப்போது தொழில் அமைச்சராக இருந்தேன், அப்போது தொழிலாளர்கள் இலாகா என்னிடம் இருந்தது—அப்போது ஒரு கமிட்டி போட்டோம். அந்தக் கமிட்டி பலவிதப் பரிசீலனைகளைச் செய்து ஒருவகைக்குச் சில சிபாரிசுகளைச் செய்தது. அதே சமயத்தில் சில தொழில் சங்கங்கள் இந்தக் கமிட்டியின் சிபாரிசுகளைப் பார்த்து விட்டு, "சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கிற எல்லாச் சலுகை களும் கொடுத்தப்படக் குறைவு இல்லாமல் செய்தால் நலமாக இருக்கும்" என்று சொன்னார்கள். அந்த இடைக்காலம் முடிந்த பிறகு மின்சார இலாகா பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அப்போது தொழிற்சங்கத் தலை வர்கள் பலரைக் கூப்பிட்டு விசாரித்தேன். "நீங்கள் சர்க்கார் ஊழியர்களைப் போல, அவர்களுக்குக் கிடைக்கிற மாதிரி சலுகைகளைப் பெறத் தயாராக இருந்தால், அதற்காக கோரிக்கை போட வேண்டியதில்லை, சர்க்கார் பே கமிஷன் போட்டு அவர்கள் என்ன செய்கிறார்களோ, அது உங்களுக்குக் கிடைக்குமிடும், சர்க்கார் பஞ்சப்படியை உயர்த்தினால் தானாகவே உங்க ளுக்கும் உயர்ந்து விடும். சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் வைத்திய வசதி கொடுக்கப்படும் சர்க்கார் ஊழியர்களுக்கு இருக்கக் கூடிய எல்லாச் சலுகைகளும் கிடைக்கும், இதை விரும்பி ஏற்றுக்கொள்வதாக இருந்தால் நான் அந்தவித ஏற்பாட்டைச் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று கேட்டேன். என்னுடைய அபிப்பிராயம் தவருக இருக்கலாம். பெரும்பாலான தொழிலாளர்கள், "சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கிற எல்லாச் சலுகைகளையும் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி, "சில சலுகைகள் சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவது எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை, அதை நிவர்த்தி செய்து அந்தச் சலுகைகளையும கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். உதாரணமாக, சர்க்கார் ஊழியர்களுக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து வாங்கிக் கொள்ள, ட்ரீட்மென்ட் செய்து கொள்ள வசதி இருக்கிறது. போர்டு ஊழியர்கள் என்ற காரணத்தினால் இவர்களுக்கு அந்த விதமான ஆஸ்பத்திரிக்குச் சென்று இலவச வைத்தியம் செய்துகொள்ள உரிமை இல்லை. அதை வைத்திய இலாகாவிடம் மீண்டும் மீண்டும் எடுத்து சொல்லி அவர்களுக்கும் இலவச வைத்திய வசதி கொடுக்க வேண்டு மென்று சொன்னேன். அப்போது வைத்திய இலாகாவும், நிதி இலாகாவும்; போர்டு ஊழியர்களுக்கு அந்தச் சலுகை கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். என்றாலும் மின்சாரத் தொழிலாளர்களுக்கு எல்லா வித சர்க்கார் வசதிகளும் செய்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்ததற்கு ஒப்ப மின்சார இலாகாவிலிருந்து மொத்தத் தொகையை நிதி இலாகாவிற்குக் கொடுத்து விட்டு, சர்க்கார் ஊழியர்களுக்கு இருக்கிற வசதியைச் செய்து கொடுங்கள், ஆண்டு முடிவில் கொடுத்ததை விட இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்றால் கொடுங்கள், அல்லது சர்க்காரிலிருந்து பாக்கி கொடுக்க வேண்டுமென்றால் நாங்கள் கொடுத்து விடுகிறோம் என்று சொன்னேன். சர்க்கார் ஊழியர்களுக்கு பே கமிஷன் போடப்பட்டது. பே கமிஷன்படி சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை ஏதும் போடாமலேயே உடனேயே அதை அவர்களுக்கு நாங்கள் அமல்படுத்தினோம். பஞ்சப்படியில் பெரும் பகுதி சம்பளத்தில் சேர்க் கப்பட்டது. தமிழகம் மாத்திரம் அல்ல, இந்தியா பூராவிலும் பார்த்தாலும் பஞ்சப்படியைக் கூலியோடு சேர்த்திருக்கிற பிரைவேட் எம்ப்ளாய்மெண்ட் கிடையாது. மின்சாரத் தொழிலாளர்களுக்கு, சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படி சேர்த்தோமோ, அதே மாதிரி ஊதியத்துடன் சேர்த்துக் கொடுத் தோம். அப்புறம் சர்க்கார் ஊழியர்களுக்கு 5 ரூபாய் அலவன்ஸ் கொடுத் தார்கள். உடனே அவர்களுக்கும் கொடுத்தோம். போன வருஷம் 5 ரூபாய் உயர்த்தினார்கள். உடனே இவர்களுக்கும் கொடுத்தோம். அப்புறம், 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்று உயர்த்தினோம். அதே மாதிரி இவர்களுக்கும் ஆட்டமாட்டிக்காகக் கொடுத்து விட்டோம்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [10th March 1965

பிரச்சினை என்ன என்றால், சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கிற மாதிரி மின்சார இலாகாவில் இருக்கிற தொழிலாளர்களுக்கும் கொடுக்கிற வசதியைத் திருல், இந்தப் பிரச்சினை எழாமல், இருந்தாலும், மருத்துவப் போர்டுக்கு விடுவதற்கு அவசியம் இல்லை என்று "இன்எக்ஸ்பீடியண்ட்" என்ற வாரத்தை உபயோகப்படுத்தியிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் ஒன்று நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சலுகைகள் வேண்டாம், சாதாரணத் தொழிலாளர்கள் போல அவர்களுக்கு இருக்கிற சலுகைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று சொன்னால், இன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1957-58-ல் இருந்த அமைப்புகளுக்குச் சம்பள விகிதத்தைக் குறைத்து, கோட்டுக்குச் சென்று கோர்ட்டில் கொடுப்பதை வாங்கிக் கொள் ளட்டும். இரண்டு சலுகைகளையும் பெற முடியாது என்பது சர்க்கார் வாதம். "சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கிற அளவை விடக் குறையாமல், சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ அந்த முறையிலே பஞ்சப்படி ஆனாலும், மற்றவைகளானாலும், எல்லா விதச் சலுகைகளையும் ஆட்டோமேட்டிக்காக, தானாகக் கிடைக்க வேண்டுமென்றால், உங்களுக்கு நன்மை என்று நினைத்து, உங்களில் பலர் வந்து சொன்ன காரணத்தினால், அந்த லிஸ்டத்தை அடல் நடத்துகிறோம். யாரோ சில புல்கமெண்ட்டில் ப்பில் இருப்பார்கள். எதிர்க்கட்சிகளைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள் கிறேன். சில மனத்தாங்கல் பெற்றவர்கள், புல்கமெண்ட் பாலனென்ஸ் சொல்லுவதைத் நன்றாகப் பரிசீலனை செய்து, பொதுவாக 50,000 தொழி லாளர்களுக்கு நன்மையா, தீமையா என்று சொன்னால் எங்களுக்கு உதவியாக இருக்கும். என் அபிப்பிராயத்தில், என் தொழிற் சங்க அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன், நான் அந்தச் சங்கங்களைக் கலந்துகொண்டு, அந்தச் சங்கங்களின் தலைவர்களுடன் பேசியதிலிருந்து சொல்லுகிறேன், பெருவாரியான தொழிலாளர்களுக்கு இப்போது சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கிற முறையில் அவர்களுக்குக் கொடுப்பது நல்லது என்று நினைக்கிறார்கள். அதிலே ஒரு செக்ஷன் இருக்கிறது. அது என்ன செக்ஷன் என்று தெரியும். அதைச் சொல்ல விருப்பமில்லை. அது மாத்திரம் வேண்டாம் என்று சொல்லி, கிளர்ச்சி தான் வேண்டும் என்று, அந்த எண்ணத்தில் இருக்கிறது. ஆகவே, இப்போது கோர்ட்டில் இருப் பது சர்க்கார் கொடுத்திருக்கிற காரணங்கள் போதுமா, போதாதா என்பது தான். அது தான் இப்போது அப்பீலில் இருக்கிறது. சர்க்கார் சொல்லி யிருக்கிற காரணங்கள் "இன்எக்ஸ்பீடியண்ட்" என்று சொல்லுவதற்குப் போதுமா, போதாதா என்பது தான் பிரச்சினை. போதும் என்று சொன் ஞல் அப்பீலை ஏற்றுக் கொண்டுவிடுவார்கள். போதாது என்று சொன்னால் அதற்கு மேல் என்ன செய்யவேண்டுமென்று பரிசீலனை செய்யும். ஒன்று திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். சர்க்கார், தனித் தொழிலாளர்களைப் போலச் சலுகை வேண்டுமென்றால், கொடுக்கத் தயாராக இருக்கிறது. அல்லது தனி ஊழியர்களுக்கு இருப்பது போன்ற சலுகைகள் வேண்டுமென்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறது. இரண்டு சலுகைகளும் வேண்டும் என்று சொன்னால் சர்க்கார் கொடுக்கத் தயாராக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** கனம் உதவிச் சபாநாயகர் அவர்களே, அமைச்ச ருடைய வாதத்தை ஏற்றுக்கொள்கிறோம். 1957-ம் ஆண்டு வரையில் சர்க்கார் ஊழியர்களாக ட்ரீட் செய்யப்பட்டார்கள். அவர்களை இப்போதும் ஸ்டாச்சுட்டரியாக சர்க்கார் ஊழியர்கள் என்று சொல்ல முடியாதா? ஸ்டாச்சுட்டரியாக சர்க்கார் ஊழியர்கள் என்று இல்லாமல் இருப்பதால் தானே இந்த மாதிரி தகராறு ஏற்படுகிறது? இதை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்றைக்கு அவர்களை சர்க்கார் ஊழியர்கள் என்று சொல்ல சட்டப்படி இயலாது. ஆதலால் தான் நடைமுறையில் சர்க்கார் ஊழியர்களாக நடத்தி எல்லாச் சலுகைகளையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறோம். ஏன் சர்க்கார் ஊழியர்கள் என்று சொல்ல முடியாது என்று சொன்னால், ஒரு புறத்தில் அடானமஸ் போர்டு என்றும், அது தனியாக இயங்குகிறது என்றும், சர்க்கார் அதைக் கட்டுப்படுத்துவதில்லை என்றும், சட்டப்படி என்ன



10th March 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அதிகாரம் இருக்கிறதோ அதைத் தான் செய்ய முடியும். எல்லா துறைகளிலும் தனித்து இயங்குகிற ஒரு சக்தி இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, மீண்டும் அவர்களைச் சர்க்கார் ஊழியர்கள் என்று டிக்ளேர் செய்ய முடியாது. சட்டப்படி டிக்ளேர் செய்ய முடியா விட்டாலும், சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற எல்லாச் சலுகை களும் நாங்கள் அவர்களுக்குஅளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எந்த இடத்தில் சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள் கிடைக்கவில்லை என்று சொன்னால், உடனடியாக நாங்கள் அதை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்று நான் நான் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழில் மானியத்தின் மீது நான் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து அவர்கள் ஷாப் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே 3 ஆண்டுகளுக்கு அந்தப் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. 1963, 1964, 1965-ம் ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் சிறிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரையில் அதிகமான எண்ணிக்கையை இங்கே காட்டியிருக்கிறார்கள். 1963-ம் ஆண்டில், 1,70,353 என்று குறிப்பிட்டுள்ளது. 1964-ல் 1,78,671 என்றும், 1965-ல் 1,81,225 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ஷாப் சட்டத்திற்கு உட்பட்டு வேலை செய்கிற தொழிலாளர்களுடைய எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைகிறது. தொழில் நிறுவனங்கள் அதிகமாக ஆகியும், தொழி லாளர்களுடைய எண்ணிக்கை குறைவதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கண்டறியவேண்டும். பொதுவாக ஷாப் சட்டத்திற்கு உட்பட்ட பல கடைகளில் இன்றையதினம் பார்க்கிறோம். "இங்கே வேலை ஆள் யாரும் இல்லை" என்று போர்டு போட்டு விடுகிறார்கள். அந்த போர்டைப் பார்த்த உடனேயே உதவி லேபர் இன்ஸ்பெக்டர் அங்கே செல்லாமல் இருந்து விடுகிறார். எனவே தான் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது, சிறிய நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், அதே நேரத்தில் தொழி லாளர்களின் எண்ணிக்கை குறைகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. 1964-ம் ஆண்டை விட 1965-ம் ஆண்டில் 9,855 தொழிலாளர்கள் குறைந்திருக் கிறார்கள். கிட்டத்தட்ட 50,000 தொழிலாளர்கள் அதிகமாக ஆவதற்குப் பதிலாக, குறைந்திருப்பதற்குக் காரணம் இப்படிச் சட்டத்தை ஏமாற்று கிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே இன்ஸ்பெக்டர்கள் அதிலே நல்ல முறையில் கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட நிலையை மாற்றி அமைப்பதற்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும். அவர்களை— "ப்ராஸிகியூஷன்" செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, குறைந்தபட்ச சம்பளச் சட்டப்படி அதாவது மினிமம் வேஜஸ் சட்டப்படி பைசல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1964-ம் ஆண்டில் 47 வழக்குகளை பைசல் செய்திருக்கிறார்கள். இந்த வழக்குகள் பெருவாரி யாக தொழிலாளிகளால்தான் கொண்டு போகப்படுகிறது. மினிமம் வேஜஸ் ஆக்டின்கீழ் தொழிலாளர்கள் வழக்குகளைக் கொண்டுபோகின்ற நேரத்தில் அவர்கள் முதலாளிகளுடைய பகைக்கு ஆளாகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உதவி லேபர் இன்ஸ்பெக்டர் இதில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்திருந்தால், உள்ளபடியே இன்றையதினம் இது மாதிரி ஏராளமான வழக்குகளை நாம் பார்த்திருக்க முடியாது. ஆனால், குறைந்த பட்ச சம்பள நிர்ணயம் என்று சொல்லுகிறபொழுது, பழைய நிலைமையையும், இன்றைய நிலைமையையும் ஒத்துப்பார்க்க வேண்டும். பழைய நிலைமையிலிருந்து புதிய நிலைமைக்கு வருகிற பொழுது, வாழ்க்கைத் தரப் புள்ளி அதிகமாக உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், குறைந்தபட்ச சம்பள சட்டப்படி, தொழிலாளர் களுக்கு நிர்வாகத்தினர் ஒழுங்காகப் பணம் கொடுப்பதில்லை. அடிப்படைச்

[திரு. எம். எஸ். மணி] [10th March 1965

சம்பளம் ரூ. 65 என்றால், ரூ. 65-க்கு கையெழுத்து வாங்கிக்கொள்ளப்படு
கிறது. ஆனால் உண்மையிலேயே கொடுக்கப்படுவது ரூ. 40 தான்.
இல்லையென்று சொன்னால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, வேலையை
விட்டு நீக்கிவிடுவார்கள் என்ற காரணத்தினால், அவர்கள் இப்படிப்பட்ட
வழக்குகளைப் போட முடியாமல் இருக்கிறது. எனவே, லேபர்
இன்ஸ்பெக்டர் இதில் அக்கறை செலுத்தி, சம்பளம் கொடுக்கும் முறையில்
முறையில் திருப்தியளிக்கும் கையெழுத்து வாங்குகிற நிர்வாகத்தின்
மீது நடவடிக்கை எடுத்தால், இந்தக் குறைகளை நீக்கமுடியும் பகுதி
செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு வழக்
கைப் பார்த்தால் 606-ஆக இருக்கிறது. எனவே அடிப்படைச் சம்பளத்தை
விட அவர்களுடைய சம்பளத்தை அவர்களுக்கு அதிகமாக வாங்கிக்கொடுக்க
தான் நான் இந்த உயர்ந்த புள்ளியை. விலைவாசியை சமாளிக்க தொழி
லாளர்களால் முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

மூன்றாவதாக, "எம்ப்ளாயீஸ் பிராவிடெண்ட் பண்ட் ஆக்ட்"-ன்படி
1964-ம் ஆண்டில் 4,00,454 தொழிலாளிகள் தங்களுடைய பங்கை இதிலே
செலுத்தியிருக்கிறார்கள். முதலாளிகள் அதை கொண்டு கிட்டத்தட்ட
ரூ. 5,37,59,624·75 செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பல முதலாளிகள்
இந்த பிராவிடெண்ட் பண்ட் ஸ்கீமிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும்
என்பதற்காக, 5 வருஷம் சர்வீஸ் ஆகவில்லை அல்லது 20 தொழிலாளர்
களுக்குக் கீழே தான் வேலை செய்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டுகிறார்
கள். குறிப்பாக ஒரு நிறுவனத்தில் 30 பேர்கள் வேலை செய்தால்,
அதிலே 11 பேர்கள் இந்தத் தொழிலிலே சம்பந்தப்படவில்லை, அவர்கள்
தங்களிடம் தொழிலாளர்களாக இல்லை என்று சொல்லி அவர்களிடம்
வேலையை மட்டும் வாங்குகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே
அவற்றையெல்லாம் கண்டு பிடித்தால், பல முதலாளிகள் இந்தச் சட்டத்
தின் கீழ் அகப்படுக்கொள்வார்கள். மேலும் அதை கண்டுபிடிக்காமல்
கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு முதலீடாகக் கிடைக்கும். கண்டு
பிடிக்காமல் இருக்கும்போதே அரசாங்கத்திற்கு ரூ. 5 கோடி வருகிறது
என்று சொன்னால், கண்டு பிடித்தால் இன்னும் எத்தனையோ கோடி
ரூபாய் கொண்டு வர முடியும். பொதுவாக பல பேர்கள், தொழில்
பிரமுகர்கள் இம்மாதிரி ஏமாற்றுகிறார்கள் என்பதை ஆதாரத்தோடு நான்
இங்கே நிரூபிக்க முடியும். எனவே, அவற்றைக் கண்டுபிடித்தால்,
இன்னும் தொழிலாளர்களும் பயன் அடைவார்கள். அதே சமயத்தில்
நமது அரசாங்கத்திற்கு இன்னும் கொஞ்சம் பணம் முதலீடாகக் கிடைக்கும்
என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

லேபர் கோர்ட்டைப் பொறுத்தவரையில், லேபர் கோர்ட்டில் தீர்ப்பு
கொடுக்கிறார்கள். ஆனால், அந்தத் தீர்ப்பு அமல் நடத்தப்படுகிறதா,
இல்லையா என்று அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. அதே நேரத்தில்
அந்தத் தீர்ப்பைப் பற்றி அரசாங்கமும் கவனம் செலுத்துவதில்லை.
இன்றைய தினம் லேபர் கோர்ட்டுகளில் கொடுக்கப்படுகிற தீர்ப்பு,
சம்பந்தமாக சிவில் கோர்ட்டு அல்லது கிரிமினல் கோர்ட்டு எப்படி நடவ
டிக்கை எடுத்துவருகிறதோ அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுப்பதாக
இருந்தால், உள்ளபடியே இந்தத் தீர்ப்புக்கு ஒரு பலன் ஏற்படும் என்பதை
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லேபர் கோர்ட்டில் இருக்கிற
ஜட்ஜுகள் பல பேர்கள் இதன் காரணமாக, இதிலே ஒரு அதிகாரமும்
இல்லை என்ற காரணத்தினால் இந்த வேலைக்கே வர மறுக்கிறார்கள்.
பொதுவாக பிராஸிக்யூஷன் அல்லது ரெகவரி பவர்ஸ் இந்த இரண்டும்
அவர்களுக்கு இருந்தால், அந்த உத்தியோகத்திற்கு ஒரு மதிப்பு இருக்கும்
என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லேபர் கோர்ட்டு
ஜட்ஜைப் பொறுத்தவரையில் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.
கடந்த ஆண்டில் மட்டும் நான்கு ஜட்ஜுகள் இங்கே மாறியிருக்கிறார்கள்.
இந்த நிலை கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு
கிறேன்.

இந்த மாநிலத்திலே மூன்று கோர்ட்டுகள் இருக்கின்றன. சென்னையி
லும் கோவையிலும் மதுரையிலும் இருக்கின்றன. இன்னும் ஒரு அடி
ஷனல் கோர்ட்டு ஏற்படுத்தினால் வழக்குகளை மிக விரைவிலே பைசல்



10th March 1965] [திரு. எம். எஸ். மணி]

செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இன்னொரு கோர்ட்டு ஏற்
படுத்தவேண்டும். அதிகப்படியான ஜட்ஜுகளை நியமிக்க வேண்டும் என்று
இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. லேபர்
கோர்ட்டு நடைமுறைச் சட்டங்களை அமுல் நடத்துவதற்காக "லேபர் ப்ளாஸீ
ஜர் கோடு" என்ற ஒரு சட்டத்தை வகுக்க வேண்டும். அம்மாதிரி ஏதுத்
தான் நான், சிவில், கிரிமினல் சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுத்து
ஒரு நல்ல நீதியை வழங்குவதுபோல், உடனடியாக பரிகாரம் கிடைப்பது
போல், தொழிலாளர்களுக்கும் உடனடியாக பரிகாரம் கிடைக்க வழிவகை
கள் ஏற்படும். உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமென்றால்,
கோர்ட்டு கொடுத்த தீர்ப்பை அமுல் நடத்தாத பல முதலாளிகளைப் பார்க்
கிறோம். குறிப்பாக பஸ் முதலாளிகள் தான் அப்படிச் செய்கிறார்கள்
என்று சொல்ல முடியும். பி. எம். பஸ் சர்வீஸ், கன்யாகுமரி. அது
கோர்ட்டு தீர்ப்பை அமுல் நடத்தாத காரணத்தால் கொடுக்கப்பட்டிருக்கிற
அபராதம் என்ன? ரூ. 25. அதை எளிதில் கட்டிவிடுகிறார்கள்.
ஆனால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போலத்
தான், கொங்கணபுரம் ட்ரான்ஸ்போர்ட், சேலம்; பாரதி இண்டஸ்ட்ரீஸ்
ஃபௌண்டரி, மதுரை; ஸ்ரீ லக்ஷ்மி சரஸ்வதி பஸ் சர்வீஸ், வேலூர்;
சௌடாம்பிகை பஸ் சர்வீஸ், தாராபுரம்; எம்.எஸ்.என்.எஸ். பஸ் சர்வீஸ்,
திருச்சி. இவர்கள் நான்கு பேரும் அவார்டுகளை அமுல் நடத்தவில்லை. அதே
மாதிரித்தான், வி.ஆர்.எம்.எஸ். பஸ் சர்வீஸ், திருச்செங்கோடு. ஆகவே,
இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இவைகளிலே பெரும் பகுதி, காங்கிரஸ்
காரர்களே இருப்பதால், அவர்களே காங்கிரசுக்குக் கெட்ட பெயரை உண்
டாக்குகிறார்கள். கோர்ட்டு கொடுக்கும் தீர்ப்பை அமுல் நடத்தாத முதலாளி
களையெல்லாம் கண்டிக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழில் தகராறு,
இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் அதிகாரிகளுடைய விசாரணைக்கு யாரா
வது வரவில்லையென்றால், தொழிலாளர்கள் வந்து விடுகிறார்கள். ஆனால்
முதலாளிகள் வரவில்லையென்றால், சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்
கமுடியாத நிலை இருக்கிறது. எனவே, சட்டத்தின் கீழ் வழிவகை செய்ய
வேண்டும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழக்குகள் தீர்க்கப்படவேண்
டும். பல வழக்குகள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன.
ஒரு வழக்கு என்றால், இத்தனை மாதங்களில் தீர்க்கப்படவேண்டும்
என்று ஏற்படுத்தினால் தான், தொழிலாளர்களுக்கும், சம்பந்தப்பட்டவர்
களுக்கும் நம்பிக்கை ஏற்படும்.

இந்த இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் தனிப்பட்ட தொழிலாளி
களுக்குப் பரிகாரம் கொடுக்க வழியில்லை. சென்ற பட்ஜட் கூட்டத்
திலேயே குறிப்பிட்டேன். கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த
வில்லை. தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் ஐ. டி. ஆக்ட் கீழே பரிகாரம்
காண வழி செய்யப்படவேண்டும் என்பதை நான் விரும்பி வேண்டிக்
கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்டவர்களிடம் கார் ஓட்டுபவர்கள், தனிப்
பட்டவர்களிடம் தோட்ட வேலை (கார்டன்) செய்யும் தொழிலாளிகள்,
வீட்டு வேலை செய்யும் தொழிலாளிகள் ஆகிய அத்தனை பேரும்
இந்த சட்டத்தின் கீழ் வரமுடியவில்லை. அவர்களுக்கு இந்தச் சட்டத்
திலே நல்லதொரு பரிகாரத்தைத் தேடித்தர அமைச்சர் அவர்கள் ஆவன
செய்யவேண்டும். கல்வி ஸ்தாபனங்களிலே வேலை செய்பவர்கள் இந்தச்
சட்டத்தின் கீழே வரமுடியவில்லை; இந்த சட்டத்தின் அடிப்படையில்
நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. அதேமாதிரி தர்ம ஸ்தாபனங்களில்
வேலை செய்பவர்கள் சம்பந்தமாகவும் இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை
எடுக்க முடியவில்லை. இன்னும் பல கூட்டுறவு ஸ்தாபனங்களில் வேலை
செய்யும் ஊழியர்கள் சம்பந்தமாகவும், இந்தச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை
எடுக்கமுடிவதில்லை. ஆகவே, கல்வி ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள்,
கூட்டுறவு ஸ்தாபனங்கள் இவைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள்
சம்பந்தமாகவும் இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு
அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக்
கேட்டுக்கொள்கிறேன். மகாராஷ்ட்ரத்தில் தொழில் உறவு என்று இண்டஸ்

ட்ரியல் ரிலேஷன்ஸ் ஆக்ட் என்று ஒன்று இருப்பதாகத் தெரிகிறது.
அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இந்த மாநிலத்திலும் அமுல் செய்தால்
நலமாக இருக்கும் என்ற ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் தகராறு சட்டத்தின் 33-வது உட்பிரிவின் சலுகைகளைப்பெற
உடனடியாக விதிகள் கொண்டு வரவேண்டும். காலதாமதம் செய்யக்
கூடாது என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மோட்டார் தொழிலாளர்களுக்குச் சட்டம் இருக்கிறது. ஆனால் அந்தச்
சட்டம் இதுவரையில் அமுல் நடத்தப்படாமல் இருக்கிறது. அதற்குக்
காரணம் என்ன ? கடந்த கூட்டத்திலேயே விரைவில் அமுல் நடத்தப்படும்
என்று முதலமைச்சர் உறுதி அளித்தார். அதற்கும் ஆவன செய்யவேண்டும்
என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற மாநிலங்
களில் அமுலுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. ஆனால் நம்
மாநிலத்தில் அமுலாக்காமல் இருப்பது வருத்தத்தைத் தருகிறது என்
பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கார
ணம் என்ன என்று பார்க்கும்போது, தொழிலாளர்கள் நினைக்கிறார்கள் ;
முதலாளிகளில் பெரும் பகுதி, பஸ் முதலாளிகள், காங்கிரஸ் காரர்களாக
இருப்பதால்தான் அமுல் நடத்தப் படவில்லை என்கிற அச்சம் இருக்கிறது.
அந்த அச்சத்தை சர்க்கார் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு
கிறேன். அப்படி அமுல் நடத்த உடனடியாக ஒரு அதிகாரியை நியமனம்
செய்து ஏற்பாடு செய்தால் மிக்க நலமாக இருக்கும். தொழிலாளர்களுக்கு
மிக்க நலன் பயக்கும்.

இன்னும் எம்ப்ளாயீஸ் ப்ராவிடண்ட் ஃபண்ட் இருக்கிறது. இன்றைய
தினம் தொழிலாளர்கள் அதில் சேமித்து வைத்திருக்கும் நிதியி
லிருந்து அவர்கள் தள்ளாத நிலையில் இருந்தால், அல்லது நோய்வாய்ப்
பட்டிருந்தால், அல்லது ஆஸ்பத்திரிகளில் இருக்கும் போது, லோன்
கொடுக்கும் நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது எமர்ஜென்ஸியைக்
காட்டி லோன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நான் அமைச்
சரைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், திரும்பவும் அவர்
களுக்கு அந்த நிதியிலிருந்து கடன் கொடுக்க வழிவகை செய்ய
வேண்டும் என்று வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலியைப் பொறுத்த மட்டில், இன்றையதினம், வேறு விசேஷ
மான குறைகள் இல்லாவிட்டாலும், உடனடியாகத் தீர்க்கவேண்டியது
குடிதண்ணீர்ப் பிரச்சினை. இன்றைய தினம் அங்கே குடிக்கிற தண்ணீர்
கந்தகம் கலந்த தண்ணீராக இருப்பதால். அதை டாங்கில் தேக்கி
வைத்துக்கொடுக்கும் போது சூடு ஏறிவிடுகிறது. குடிக்கிற நேரத்தில்,
பலருக்கு நோய் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, அந்தத் தண்ணீரைக்
குடிக்காமல் தடுத்து, 15 மைல் தொலைவில் உள்ள கொள்ளிடத்திலிருந்து
குழாய் மூலம் தண்ணீரை நெய்வேலித் தொழிலாளர்களுக்குக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரியலூர் பக்கத்திலே ஜிப்சம் எடுக்கிறார்கள். அந்தத் தொழில்
மத்திய சர்க்கார் பொறுப்பு. இருந்தாலும் நிலத்தை மாநில சர்க்காரிடம்
இருந்துதான் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். அங்கே வெட்டப்படும்
ஜிப்சத்தின் அளவு வேறு, சர்க்காருக்குக் காட்டப்படும் ஜிப்சத்தின் கணக்கு
வேறு. சரியான கணக்குக் காட்டப்படுவதில்லை. அரசாங்கத்திற்கு சரி
யான கணக்கு வருவதில்லை. ஒரு ஆயிரம் டன் எடுத்தால், 200 டன்தான்
கணக்கில் காட்டப்படுகிறது. பாக்கி 800 டன் திருட்டு மார்க்கமாகப்
போகிறது. அதைக் கண்காணித்தால், சர்க்காருக்கு அதிக வருமானம்
வரும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
எனவே இப்படி வெட்டுகிற தொழிலை தேசீய மயமாக்கினால் லாபம் அதிக
மாக வரும்.

நெசவாளர்களைப் பற்றி ஒரு வார்த்தை. இன்றைக்கு நெசவாளர்
களுக்குப் பாதுகாப்புக் கிடையாது. திடீரென்று, துணி விற்பனை ஆகா
விட்டால், அவர்கள் மனைவி மக்களோடு பிச்சை எடுக்க ஆரம்பிக்கிறார்கள்.
அந்த நிலை என் ஏற்படுகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.





என் தொகுதியைப் பொருத்த மட்டில், நெசவாளர்கள் ஒரு பாவுக்கு
கூலி ரூ. 18 பெறுகிறார்கள், அது நல்ல முறையிலே நடக்கும் சமயத்தில்.
ஆனால் கைத்தறி சேலைகள், வேட்டிகள் விற்பனை ஆகாவிட்டால், மாஸ்டர்
வீவர்கள் அவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. ஆகவே, இவர்கள் பிச்சை
எடுக்கும் நிலைதான் இருக்கிறது. வேலை இல்லை என்றால், மாஸ்டர்
வீவர்கள் அவர்களுக்கு பாதிச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று
ஏற்பாடு இருந்தால் நலமாக இருக்கும். உயர்ந்த விலைக்கு சரக்கு விற்ற
போது அவர்கள் லாபம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, சரக்கு தேங்கி
நிற்கிறபோது, பாவுக்கு ரூ 18-க்குப் பதிலாக, 12 தான் கொடுக்கிறார்கள்.
அப்படிக் குறைக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போட்டால்
தான், அவர்களைக் காப்பற்ற முடியும். இந்த பிரச்சினை அடிக்கடி மோச
மான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

நகைத் தொழிலாளர்கள் பற்றி ஒன்று சொல்ல வேண்டும்,
இன்றைக்கு அவர்களுக்குக் கடன் வசதி கொடுக்கப்படுகிறது. ஆனால்,
அது ஒழுங்கான விதத்தில் இல்லை. சிக்கல் உள்ளதாக இருக்கிறது.
ஒருவன் வாடகை சைகிள் கடைவைக்க வேண்டும் என்று விரும்பி
கடன் கேட்டால், ரூ. 500 சாங்ஷன் செய்யபட்டு, முதல் தவணையாக ரூ. 200
மட்டும் கொடுக்கப்படுகிறது. ஒரு சைகிளின் விலையே ரூ. 240 ஆக
இருக்கும்போது, 200 ரூபாயை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்ய
முடியும் ? ஒரு சைகிளை மட்டும் வைத்துக் கொண்டு வாடகை சைகிள்
கடை வைக்க முடியுமா ? 100 மரங்கள் இருந்தால் தோட்டம் என்று
சொல்லலாம். ஆனால் ஒரு மரத்தைத் தோட்டம் என்று சொல்லுவது
எப்படி ? ஆகவே, இன்றைக்குக் கொடுக்கப்படும் பணம் வெட்டிச் செல
வுக்கோ அல்லது சாப்பாட்டுச்செலவுக்கோ போய்விடுகிறது. ஆகவே அவர்
கள் உள்ளாகும் தொல்லைகள் சொல்லிமுடியாது. அதையும் மறுபரி
சீலனை செய்யவேண்டும்.

அதோடு இன்னொரு தொழில் பற்றியும் சொல்லவேண்டும். மண் 1-00 p.m.
ணரிப்பு தொழிலாளிகள் என்று ஒரு வகைத் தொழிலாளிகள் இருக்
கிறார்கள். அவர்கள் மண்ணை அரித்து தங்கத்தை எடுக்கும் தொழிலில்
ஈடுபட்டிருக்கிறவர்கள். அவர்கள் இதிலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
அவர்களுக்கும் "லோன்" வசதி செய்ய நம்முடைய அமைச்சர் அவர்கள்
ஆவன செய்யவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

அடுத்து, கவர்ன்மெண்ட் ப்ரெஸ் தொழிலாளர்கள் இன்றையதினம்
சலுகைகளைப் பெறுவதைப்போல சாதாரண அச்சகங்களிலே வேலை செய்யக்
கூடியவர்கள் சலுகைபெற முடியவில்லை. ஆகவே, அவர்களுக்கும் இந்த
வகையிலே சலுகைகள் அளிக்க வேண்டும்.

அடுத்து, வேலை தேடித்தரும் ஸ்தாபனம் நாட்டில் வேலையில்லாதோர்
பலருக்கும் வேலை தேடித் தரும் நிலைமையில் இல்லை. ஏதாவது
தகவல் கேட்டாலும் சரியான தகவல் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே,
வேலை தேடித் தரும் ஸ்தாபனமானது தொழிலாளர்களுக்காகவும் இருக்
கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன் 151-வது
சட்டப்படி நானும், கனம் உறுப்பினர் திரு. தருமலிங்கம் அவர்களும்
சென்னையிலே இருக்கவேண்டும் என்று கோர்ட்டார் எங்களுக்கு உத்தரவிட்
டிருக்கிறார்கள். இங்கே இருக்கிறோம். தொழிற் சங்கங்களில் ஈடுபட்டிருக்
கிறோம் என்ற காரணத்தால். நடந்தேறிய கலவரத்திற்காகப் பலரைக்
கைது செய்யவேண்டும் என்பதற்காக, ஒன்றும் தெரியாத அப்பாவி
ரிக்ஷாத் தொழிலாளர்கள் 300-க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்து
வைத்திருக்கிறார்கள். தேர்தலில் எனக்கு யார் யார் வேலை செய்தார்
களோ, பஸ் தொழிலாளர்கள் மற்றும் அந்த வகையிலே இருக்கும்
தொழிலாளர்கள் யார் யார் எனக்கு தேர்தலில் வேலை செய்தார்களோ,
அத்தனை பேரும் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மணப்
பாறை ஆலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களைப் பிடித்து

உள்ளே வைத்திருக்கிறார்கள். [illegible] வரை இருக்கிறது. அவர்களைத் [illegible] தால், அவர்கள் [illegible] வெளியே [illegible] காகக் [illegible] அவர்களைத் [illegible] தொழிலாளர்கள் [illegible] தொழிலாளர்கள் [illegible]? [illegible] அவர்களுக்கு ஜாமீன் [illegible] கிறது. கனம் [illegible] லாளர்களுடைய [illegible] கைது செய்யப்பட்டாலும், அதற்காக [illegible] தொழி [illegible] வேண்டுமானாலும் [illegible] அவர்களைச் சிறையில் வைத்துக்கொள்ளலாம் [illegible] மிக்க நன்றி [illegible] சொல்லுவதோடும் தெரிவித்து, என்னுடைய [illegible] இந்தச் சந்தர்ப்பத்தில் [illegible] உரையை நான் முடிக்கின்றேன். வணக்கம்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் நலனைப்பற்றிய இந்த மானியத்தின் மீது நடைபெற்ற விவாதத்திலே கனம் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டார்கள்; கருத்துக்கள் தெரிவித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாகக் குற்றம் சாட்டப்பட்டாலும், தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு, அதை ஓரளவு தெரிந்துகொண்டு, தெரிந்துகொள்ளமுயன்று கருத்துக்கள் தெரிவித்ததை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

நம்முடைய நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால், தொழில் வளம் பெருக வேண்டும், விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். இது நடைபெற வேண்டுமானால் உழைப்பு மிக முக்கியமானது. ஆகவேதான், தொழிலாளர் நலனில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த நாட்டில் கவனம் செலுத்தப்படுவது மட்டுமல்ல, அகில உலக ரீதியிலும் தொழிலாளர்களுடைய நலவுக்கென்று ஆண்டுதோறும் மகாநாடுகள் நடத்தப்பெற்று, அவர்களுடைய நலனைப்பற்றி மேலும் மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் தொழிலாளர்களுடைய வாழ்க்கை சீரிய முறையில் அமையவேண்டும் என்பதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், பல சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. மாநில சர்க்கார் சட்டம் இயற்றுவது மட்டும் அல்ல. மத்திய சர்க்காரும் சட்டங்கள் இயற்றியிருக்கின்றது. நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பல சட்டங்கள் இயற்றப்பட்டு, அந்தச் சட்டங்களின் மூலம் தொழிலாளர்களுடைய குறைகள் பெரிதும் தீர்க்கப்படுவதிலும், நலன் பாதுகாக்கப்படுவதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பது தொழிலாளர்களே உணர்ந்த விஷயம்.

தொழிலாளர்களுக்கும், அவர்களிடம் வேலை வாங்குகின்ற முதலாளிகளுக்கும் இடையே தகராறு ஏற்படுகிறதென்றால், சுயநலம் காரணமாகத் தகராறுகள் ஏற்படுகின்றன. தொழிலாளர்களுடைய நலன்தான் தொழிலதிபர்களுடைய நலன். தொழிலாளர்களுடைய உழைப்பின்றி, அவர்களுடைய திருப்திகரமான வாழ்க்கையின்றி தொழில் வேண்டிய அளவுக்கு வளர்ச்சி அடைய முடியாது. ஆக, தொழிலாளர்களுடைய உழைப்பு இன்றியமையாதது. அதே மாதிரி, தொழில் வளர்ச்சி அடைந்தால் தான் தொழிலாளர்களுடைய நலனும் மேலும் மேலும் பெருக முடியும். அப்பொழுது தான், வேலை கிடைக்காமல் அவதிப்படும் மக்களுக்கு வேலை கிடைத்து, எல்லோரும் இன்புற்று வாழக்கூடிய நிலைமை ஏற்படும், வேலையில்லாத் திண்டாட்டம் போகும். பரஸ்பரம் ஒருவருடைய நன்மை தான் மற்றவருடைய நன்மை என்பதைத் தொழிலாளர்களும், முதலாளிக



ளும் உணர்வார்களானால், அதிகமாகத் தகராறுகள் ஏற்படுவதற்கு இடமே இல்லை. இருந்தாலும், சுயநலம் குறுக்கிடுகிறது. ஆகவேதான், அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கிறது. சட்டத்தைச் செய்து, தொழிலாளர்களுடைய நலனைக் கருத வேண்டிய ஒரு இயந்திரத்தை அமைத்து அதன் மூலம் அரசாங்கமும் தலையிடவேண்டியிருக்கிறது என்பதைத் தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் நன்கு உணர்வார்கள். ஆனால், இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், பொதுவாக, கூடிய வரையில் சுமுகமான உறவு இருந்துகொண்டு வருகிறது. திடீரென்று கோவை போன்ற இடங்களில் வேலைநிறுத்தம் ஏற்பட்டபோதிலும், பொதுவாகப் பார்க்கும்போது தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே சுமுகமான உறவு இருந்துகொண்டு வருகிறது. சற்று முன்பு பேசிய கனம் உறுப்பினர் கூடப் பாராட்டுதல் தெரிவித்தார்கள். கூடியவரை தகராறு இன்றி தொழில் வளர்ச்சி ஏற்படுவது இந்த மாநிலத்திற்கு நன்மை தரக்கூடியதாகும். இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்யக்கூடியதாகும். இதைக் குறித்து நாமெல்லோரும் பெருமைப்படலாம். ஆனால், விலக்காக, இங்குமங்கும் சிற்சில இடங்களில் தகராறுகள் இருந்தாலும், அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், சட்டப்படி வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறது என்று நான் மீண்டும் இங்கே கூற விரும்புகிறேன்.

பொதுவாக ஒன்று சொல்வேன். ஆலைத் தொழிலாளர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்வேன். என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் நடைபெற்ற கலவரங்களில், பலாத்காரச் செயல்களில் ஒரு சில சமூக விரோதிகள் ஈடுபட்டார்கள் என்றாலும், ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் இதிலே சிறிதும் ஈடுபடவில்லை. அவர்கள் உணர்ச்சி வசப்பட்டதாகச் சொல்லிக்கொண்டு பலாத்காரத்தில் இறங்கவில்லை. அதனால் தொழில் பாதிக்கப்படவில்லை. அவர்கள் நிதான கண்ணோட்டத்தோடு, நாட்டின் நலன் எவ்வாறு கவனிக்கப்படவேண்டும் என்பதை உணர்ந்து, தீய சக்திகளுக்குச் சிறிதும் இரையாகாமல் நடந்துகொண்டதை நாம் எல்லோரும் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இது ஆலைத் தொழிலாளர்களைப் பற்றியது. ஆனால், கடைசியில் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் ஏதோ சில ரிக்ஷாத் தொழிலாளர்கள், மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதைப்பற்றிக் கூறினார்கள். நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத் தான் பிடிக்கப்பட்டார்கள் என்பதற்கில்லை. கனம் அங்கத்தினர் சொல்வது போல் " நிரபராதி " என்றும் அவர்களை நான் சொல்லிவிட முடியாது. எதையும் ஆராய்ந்து தான் சொல்லவேண்டும். ரிக்ஷாக்காரர்கள் மீதோ வேறு சிலர் மீதோ யாருக்கும் பொறாமை ஒன்றும் இல்லை. அவர்கள் மீது வெறுப்பு ஒன்றும் இல்லை. ஆனால், சில சமயங்களில் தவறுதல் நடக்கிறது. இம்மாதிரி பலாத்காரச் செயல்களில் சிலர் ஈடுபடுகிறார்கள். கனம் அங்கத்தினருக்கு அவர்கள் வேண்டியவர்கள் என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் எல்லாரும் அவர்களுக்கு வேண்டியவர்கள் என்று அவர்கள் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அரசாங்கத்தைச் சார்ந்த அதிகாரிகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் ரிக்ஷா இழுக்கின்றவர்கள் மீதோ, வேறு தொழிலாளர்கள் மீதோ, அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டியவர்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. அமைதியை நிலைநாட்டும் பொருட்டு, மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் . . . .

**திரு. எம். எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, சமீப காலத்திலே நான் சிறையில் இருந்தபோது, 200 ரிக்ஷாத் தொழிலாளர்களை உள்ளே கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். அந்த 200 பேர்களுடைய பெயர், விலாசம், தாயார் பெயர், தகப்பனார் பெயர் இவைகளைக் கூட சிறைக்குள்ளே வந்தபிறகு எழுதினார்களே தவிர, வெளியிலே கைது செய்து, விலாசத்தை விசாரித்து உள்ளே அனுப்பவில்லை. நேற்று முன் தினம்

கூட ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலைகளிலே வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வேலை செய்யாமலிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்பதற்காகக் கூறினேன்.

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** குற்றம் செய்தவர்களை என்று முடிவு செய்வதற்குத் தகப்பனார் யார், தாயார் யார் என்று கேட்க வேண்டியதில்லை. "குற்றம் செய்யக்கூடும்", "குற்றம் செய்வார்கள்" என்று ஏற்பட்டாலும், குற்றம் செய்வதைத் தவிர்க்கவேண்டுமென்று ஏற்பட்டாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், அதையொட்டிய வகையில் யாரையும் வைத்திருக்கமாட்டார்கள். ஒரு விபரீதமான நிலை ஏற்பட்ட போது அதைச் சமாளிக்கும் நோக்கத்துடன், நாட்டிலே மேலும் சேதம் விளைவிக்காமல், மக்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் போலீசார் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்களே தவிர, யார் மீதும் வெறுப்பு கொண்டோ, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டுமென்றோ அவ்வாறு ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று நான் முதலிலே உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில், பொதுத் துறை (பப்ளிக் செக்டார்) யைப்பற்றி இங்கே கூறப்பட்டது. சர்க்காரே நடத்துகிற ஸ்தாபனங்கள், அல்லது சர்க்காரின் ஆதரவோடு நடத்தப்படுகிற ஸ்தாபனங்கள் இவைகளிலே இருக்கும் தொழிலாளர்கள் என்றும், தனிப்பட்டவர்கள் நடத்தும் ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் என்றும் பிரித்துப் பேசினார்கள். நான் முன்பே அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். தனியார் துறையாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, எல்லாத் தொழில் ஸ்தாபனங்களிலும் உள்ள தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்பது தான் நம் கொள்கை. தனியார் தொழில் துறைப் பிரதிநிதிகளை அழைத்து அவ்வப்போது பேசி, எங்கே குறைபாடுகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து தனியார் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, பொதுத் துறை தொழிலாளர்களாக இருந்தாலும் சரி—தொழிலாளர்களுடைய நலன் பெரிதும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. ராஜ்ய அரசாங்கமும் சரி, மத்திய அரசாங்கமும் சரி என்ன என்ன வகையில் செயல்படவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இப்போது கடைசியாகப் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களுக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டு இருக்கின்றன. அவை எல்லாம் ஒரு சங்க அடிப்படையில் தான் வகை செய்யப்பட்டு இருக்கிறது. எந்த ஒரு சங்கத்திலும் சேராது தனிப்பட்டவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டங்களினால் பயன் இல்லாமல் போகிறது என்பதாகக் குறிப்பிட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பே நான், தொழிற்சங்கங்களில் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தனிப்பட்டவர்களாக இருந்தாலும் தொழிலாளர்கள் எல்லோருடைய உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தினேன். நமது மாநில அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அதற்கு அங்கீகாரம் பெற மத்திய ஆட்சியிடத்திலும் கோரினார்கள். அகில இந்திய முக்கூட்டுக் கமிட்டியிலே—இண்டஸ்ட்ரியல் ஸ்டாண்டிங் லேபர் கமிட்டியிலே இது வைக்கப்பட்டது—ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல. எந்தத் தொழிற்சங்கத்திலும் உறுப்பினராக இல்லாத தொழிலாளர்களுடைய நலனுக்காக என்று சட்டம் செய்வதைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தான் ஆட்சேபித்தார்கள். அவ்வாறு செய்வது தொழிற்சங்கங்களையே பாதிக்கும் என்று குறிப்பிட்டார்கள். அப்போது நானும் வற்புறுத்தினேன். எந்த ஒரு தொழிலாளரையும் இந்தச் சங்கத்தில் நீயும் ஒரு உறுப்பினராகத்தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது, எந்தச் சங்கத்திலும் சேராமல் தான் இருப்பேன் என்றாலும் அப்படிப்பட்டவர்களுடைய நலனும் பாதுகாக்கப்படவேண்டும் என்று சொன்னேன். இப்போதும் கூட அதுபற்றி பார்லிமெண்டில் தனியாகச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னோம். இந்த மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.



அதேமாதிரி பீடித் தொழிலாளர்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் இருக்கிற சங்கடங்களை நான் முன்பே விளக்கியிருக்கிறேன். அவர்களுக்காகத் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தை நிறைவேற்றுவதில் பக்கத்தில் உள்ளவர்களும் ஒத்துழைத்தால் தான் சரியாக நிறைவேற்ற முடியும். நாம் அந்தச் சட்டத்தை நிறைவேற்றி அவர்கள் நிறைவேற்றாமல் இருக்கிறபோது நம்முடைய ராஜ்ய தொழிலாளர்களின் நலன் பாதிக்கப்படுகிறது. வருமானமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே தென்மண்டல ஆட்சியாளர்களிடத்தில் இதுபற்றிச் சொன்னோம். ஒருவர், இருவர் செய்தார்கள். மற்றவர்கள் செய்யவில்லை. ஆகவே எல்லோருக்கும் பொதுவாக மத்திய அரசாங்கம் இதுபற்றி பார்லிமெண்டில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று ஒரே மாதிரி யோசனை கூறியிருக்கிறோம். அதேமாதிரி அவர்களும் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மோட்டார் தொழிலாளர்களைப் பற்றி பார்லிமெண்டில் நிறைவேற்றியுள்ள, நாம் நிறைவேற்றியுள்ள சட்டம் அமுலாக்கப்படுவது பற்றி திரு. மணி அவர்கள் கூறினார்கள். அதில் உள்ள சிக்கல்களை முன்னமேயே விளக்கியிருக்கிறேன். இந்தச் சட்டம் ஐந்து பேர்களுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிற ஸ்தாபனங்களுக்கு எல்லாம் பொருந்தும். ஆகவே எல்லோரையும் இதுபற்றிக் கலக்க வேண்டியதாக இருந்தது. தொழில் நடத்துகிறவர்களை எல்லாம் கேட்க வேண்டியதாக இருந்தது. அதுமாதிரி கேட்டதிலே தாமதம் ஆயிற்று. 250 ஆட்சேபங்கள் வந்தன. இதையெல்லாம் சர்க்கார் ஆராய்ந்தது. அதன் பிறகு இப்போது விதிகளை சீக்கிரத்தில் பிரசுரிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் ஏற்படவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய வீட்டுவசதியைப் பற்றியும் சொன்னார்கள். ப்ளான்டேஷன் தொழிலாளர்களுடைய வசதிக்காக 34,640 வீடுகள் கட்டப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்போது 29,409 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. ஆகவே முக்கால் பங்கு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அதேபோன்று தோட்டத்தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம் செய்யலாம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு இப்போதே வைத்திய வசதி அளிக்கப்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த வசதி அளிப்பதிலே ஒவ்வொரு எஸ்டேட்டாக எடுத்துக் கொண்டு என்ன செய்வது என்று நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அதிலே குறிப்பாக 135 எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரையில் என்ன என்ன வைத்திய வசதிகள் அளிப்பது என்பது முடிவு செய்யப்பட்டுவிட்டது. இன்னும் 73 எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக என்ன என்ன ப்ரொவிஷன் செய்யப்படவேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. வார்டுகளோடுகூடிய 49 ஆஸ்பத்திரிகள், 99 டிஸ்பென்சரிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இன்னும் ஆஸ்பத்திரிகளில் என்ன என்ன சாதனங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதை நிர்ணயிக்க சப்—கமிட்டி நியமிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் காஷுவல் லேபரைப்பற்றிச் சொன்னார்கள். ப்ளாண்டேஷனைப் பொறுத்தவரையில் காலவரம்பின்றி காஷுவல் லேபர் என்று வைத்துக்கொள்ளக்கூடாது என்று நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இன்னும் குறைந்த பட்ச கூலி நிர்ணயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கும் இன்றைக்கு வேஜ் போர்டு இருக்கிறது. குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்படுகிறது, இன்னும் ப்ளாண்டேஷனைப் பொறுத்த வரையில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. நான் மத்திய கமிட்டிக் கூட்டத்தில் இதைப்பற்றியெல்லாம் பேசுகிறபோது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய நலனுக்காக சர்க்கார் சொல்கிற ஏற்பாடுகளை தொழில்திபர்கள் ஏற்றுக்கொள்வதைப் பாராட்டினார்கள். தொழிலாளர்களுக்கு என்று தொழில்திபர்கள் பண்டகசாலைகள் வைப்பதிலே தமிழ்நாடு தான் முன்னணியில் இருக்கிறது என்றும் சொன்னார்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1965

கள். எல்லாத் தொழிலதிபர்களும் சொன்னால் கேட்பது இல்லை. ஆகவே
தான் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஸ்தாபனங்கள்
நியாயவிலைப் பண்டகசாலைகள் வைக்கவேண்டும் என்பதாக இப்போது
சட்டம் கொண்டுவர அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

அதேமாதிரி மற்ற விவசாயத்தொழிலாளர்களைப் பற்றி சில உறுப்
பினர்கள் பேசினார்கள். குறைந்த பட்சக் கூலி இப்போது நிர்ணயம்
செய்யப்பட்டு இருக்கிறது. இதைக் கண்டிப்பாக அமுல் செய்வது
என்றால் விவசாயிகளுக்கே பாதகமாக விளையும். காரணம் சில பகுதி
களில் நாம் நிர்ணயித்துள்ள கூலிக்கும் அதிகமாக அவர்கள் வாங்குவதால்
அவ்வாறு கொடுக்கக் கூடாது என்று நாம் தடுக்க முடியாது. விவசாயத்
தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் வெளியூர், இலாகா கவனித்து
வருகிறது. ஆனால் நான் இது சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்லி
யிருக்கிறேன். குத்தகையைப் பற்றியும் சாகுபடி உரிமையைப் பற்றியும் பல
தகராறுகள் வருகின்றன. உடனடியாக அவற்றைத் தீர்க்க தக்க நடவடிக்
கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறோம். அதைப்
பற்றியும் இப்பொழுது சட்டம் செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்
பட்டிருக்கிறது.

கோட் ஆப் டிஸிப்ளின் இருக்கிறது. அதையொட்டித்தான் இப்
பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கூடியவரையில்
சுமூகமான முறையிலே கலந்து பேசி எல்லாவற்றையும் நிர்ணயம் செய்து
வருகிறோம். பொதுவாக, இந்தக் கஷ்டங்கள் ஏற்படுவதெல்லாம் போட்டி
சங்கங்கள் இருப்பதால்தான். இந்தப்போட்டி சங்கங்கள் தொழிலாளர்
களுக்குக் கேடு விளைவிக்கக்கூடியவை. தொழிலதிபர்கள் இதை நன்றுகப்
பயன்படுத்திக்கொண்டு விடுகிறார்கள். இந்தப் போட்டி சங்கங்கள் தொழி
லாளர்களுக்குக் கேடு விளைவிப்பதால் போட்டி கூடாது என்று சொல்
கிறோம். தற்காலிகமாக கோடு ஆப் டிசிப்ளின் மூலம் கூடியவரையிலே
அதைக் கவனிப்பதற்கு முற்படுகிறோம். தொழிற் சங்கங்களிலே அக்கறை
கொண்டவர்கள் எல்லாம் இந்தப் போட்டியை எவ்வாறு தவிர்ப்பது என்று
தான் யோசிக்கிறார்கள். சில சமயங்களிலே அரசியல் புகுந்துவிடுகிறது.
அரசியல் ரீதியிலே தொழிற் சங்கங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள
வேண்டும். இது சிறிதும் தொழிலாளர்களுடைய நலனுக்கு உகந்தது
அல்ல என்பதை யாவரும் உணர்வார்கள். எனவே, இந்தப் போட்டிச்
சங்கங்களைத் தவிர்ப்பதற்குக் கூடிய வரையிலே இந்தச் சபையிலே உள்ள
அங்கத்தினர்கள் எல்லோரும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்பு
கிறேன்.

அடுத்து, காஸ்ட் ஆப் லிவிங் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்
பற்றி சில மாதங்களுக்கு முன்பே உதகையிலே நடைபெற்ற முக்கூட்டுக்
கமிட்டியிலே விவாதிக்கப்பட்டது. மேலும் இதைப் பரிசீலனை செய்ய
வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. பரிசீலனை செய்வதிலே
தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் இவர்கள்
மட்டுமல்லாமல் ஒரு நிபுணரையும் போட்டு மேலும் பரிசீலனை செய்ய
வேண்டுமென்று முடிவு செய்து, அந்த வகையிலே எப்படி மாற்ற
வேண்டும், எப்படிச் சீர்படுத்தவேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயம்
செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது
என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, போனஸ்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது விஷயமாக
மத்திய அரசாங்கம் முடிவு எடுத்து வருகிறது. அந்த முடிவின்படி
மசோதா சட்டமாக்கப்பட வேண்டியிருக்கிறது. இருந்தாலும், எந்த முடிவை
மத்திய அரசாங்கம் எடுக்கிறதோ அந்த அடிப்படையிலே சட்டம் வரவில்லை
யென்றாலும், எந்த வகையிலே கவனம் செலுத்தினால் சுமூகமான
முறையிலே தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் ஒன்றுபடுவார்கள்



10th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று பார்த்து அந்த வகையிலே முடிவுசெய்ய தொழில் இலாகா கவனம்
செலுத்தி வருகிறது. கூடிய வரையிலே சுமூகமான முறையிலே
தகராறுகளைத் தீர்த்துக்கொண்டு வருகிறோம். கோர்ட்டுகளுக்குப் போனால்
காலதாமதம் தான் ஆகும். ஆகையினால்தான் அதைத் தவிர்க்க
வேண்டுமென்று நினைக்கிறோம். எலக்ட்ரிசிட்டி போர்டு தொழிலாளர்
களைப்பற்றி, நமது தொழில் அமைச்சர் அவர்கள், என்னுடைய சக
அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். கோர்ட்டுகள் தீர்ப்பு
வழங்கியபடி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்புத்தான்.
அதற்காக திட்டம்போல் ஒன்றைக் கோர்ட்டுக்கு விடுவது, மற்றொன்றை
விடுவதில்லை என்பது கிடையாது. கேட்டதை எல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு
விடுவது என்றால் அது தொழிலாளர்களுடைய நலன்களுக்கு உகந்ததாக
இருக்காது. எனவே இவை எல்லாவற்றையும் யோசித்துத்தான் தொழி
லாளர்களுடைய தகராறுகளைத் தீர்ப்பதிலே நாம் கவனம் செலுத்திக்
கொண்டு வருகிறோம். சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும்,
எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவராக இருந்தாலும் சரி, தவறுமல் நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்பதுதான் நம்முடைய கொள்கை. நான் ஏன் இதைச்சொல்லுகிறேன்
என்றால், யார் மீது ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது
என்று மனதிலே ஞாபகம் இருக்கிறது.

பஸ் முதலாளி என்றால் 1, 2 பஸ் வைத்திருக்கிறவர்கள் இருக்கிறார்
கள். அதிகமாக பஸ் வைத்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள். பஸ்
முதலாளிகள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் என்று திரு எம். எஸ்.
மணி அவர்கள் சொன்னார்கள். அது மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவே
யாருடைய தவறானாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவருடைய தவறானாலும்
அதற்காகக் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வரு
கின்றன என்று நான் கூறுவேன்.

அடுத்தபடியாக, முக்கியமான ஒன்று, அதைப்பற்றி எந்த அங்கத்தின
ரும் இதுவரை குறிப்பிடவில்லை. எம்பளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ்
என்று இருக்கிறது. வேலையில்லாதவர்களுக்கும் இன்ஷூரன்ஸ் கொடுக்க
வேண்டும் என்று சொல்கிறார்கள், அது வேறு விஷயம். தொழிலாளர்
களுடைய நலன் என்றால் முதலிலே உடல் நலன் பாதுகாப்பு ஆகும்.
பேக்டரிகளைப் பொறுத்தமட்டில் ஆபத்து இல்லாமல் தடுக்கவேண்டும்.
அதற்கான பேக்டரிச் சட்டங்கள், அது பிரைவேட் செக்டாராக இருந்தாலும்
சரி, பப்ளிக் செக்டாராக இருந்தாலும்சரி, கண்டிப்பாக அமுல் நடத்தப்
படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. முக்கியமாக,
தொழிலாளர்களுக்கு ஆபத்து, அதாவது "ரிஸ்க்" ஏற்படுவதற்கு இடம்
கொடுக்கக் கூடாது. அதோடு வியாதி வந்துவிட்டால் அவர்கள் நல்ல சிகிச்சை
பெறவேண்டுமென்ற முறையிலே எம்பிளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ்
திட்டம் வந்திருக்கிறது. இந்தத் திட்டம் இந்த மாநிலத்திலே சீரிய
முறையிலே அமல் நடத்தப்பட்டு வருகிறது என்பது அங்கத்தினர்களுக்குத்
தெரியும். கீழ்ப்பாக்கத்திலே ஒரு ஆஸ்பத்திரி கட்டப்பட்டு வருகிறது.
மேலும் அதை விரிவாக்குதவற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கமிட்டியை எம்பிளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் வைத்திய வசதியை
எவ்வாறு பெருக்க வேண்டுமென்று ஆராய்வதற்காக மத்திய அரசாங்கம்
ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியினர் இந்தியா
வெங்கும் போய் அங்கங்கே இதுபற்றி ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள்.
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் வேகமாக இதை நிறை
வேற்றி வருகிறோம் அதாவது இதனால் 2,76,000 தொழிலாளர்கள்
பயனடைந்திருக்கிறார்கள்; அது மட்டுமல்ல, அவர்களுடைய குடும்பங்
களும் ஏறத்தாழ 57,000 குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன. இதை
மேலும் கமர்ஷியல் எஸ்டாபிளிஷ்மெண்டுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று
எண்ணம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்
களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற முறையிலேதான் கவனம்
செலுத்தப்பட்டு வருகிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1965

கோர்ட்டுகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கோர்ட்டுகள் அதிகம் வேண்டுமென்றார்கள்; நீதிபதி மாற்றப்படுவதுபற்றியெல்லாம் சொன்னார்கள். அது ஹைகோர்ட்டாருடைய பொறுப்பு. புரொமோஷன் ஆக இருக்கலாம் அல்லது மாற்றலாக இருக்கலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதுபோல் பிடிக்கவில்லை என்பது அல்ல. அவர்களுக்கு என்ன வேலை இடப்படுகிறதோ அதை அவர்கள் சரியாகச் செய்வார்கள். அதிகத் தாமதமாகிறது என்பதற்காக 4-வது கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது, நிலைமையெல்லாம் முடிவாகிவிட்டது. இதற்குமேல் கோர்ட் அவசியமில்லை என்றால், அந்தக் கோர்ட்டை அனுமதியாக வைத்துக் கொண்டிருக்கப்போவதில்லை.

இந்தச் சபையில் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பிரச்னைகளுக்கு எல்லாம் ஒவ்வொன்றுக்கும் விஸ்தாரமாகப் பதில் கூறுவதற்கு அவகாசம் இல்லையென்றாலும், குறிப்பிட்ட குறைபாடுகள், மற்ற முக்கியமான விஷயங்கள் இவைகளையெல்லாம் தொடர்ந்து கவனத்தில் இருக்கின்ற விஷயங்கள் என்று கூறி, தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதிலே, தொழிற் சங்கங்கள் வைத்துக்கொள்வதிலே, எல்லாக் கட்சிகளும் தங்கள் கட்சியைப் பலப்படுத்தவேண்டுமென்று தவறான எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல், தொழிலாளர் நலனிலே அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக்கோரிக்கையை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 1,61,96,000 under Demand No. XXIV—Labour including Factories—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,61,96,000 under Demand No. XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

1-30 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

139. *Notification issued with G.O. Ms. No. 3876, Home, dated 14th December 1964, amending sub-rule (B) IV (1) of rule 10 of the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A-291 of 1960, dated the 18th August 1960, at pages 3–121 of the Supplement to Part V of the Fort St. George Gazette, dated the 14th September 1960, as subsequently amended. [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*



10th March 1965]

140. *Notification issued with G.O. Rt. No. 1093, Revenue, dated 24th December 1964, appointing Srimathi N. K. Ranganayaki, M.L.A., as a Member of the Area Committee, Salem. [Laid on the table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

141. *Notification issued with G.O. (Press) No. 3125, Revenue, dated 30th December 1964, exempting from the tax payable under the Madras General Sales Tax Act, 1959, the sale of goods by any dealer in this State to the Canteen Stores Department (India). [Laid on the table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

### B. Reports, Notifications and other papers.

'Nil.'

# APPENDIX

(*Vide* Answer to Starred question No. 194 on page 86.)

*Conclusions of the 22nd Session of the Indian Labour Conference.*

| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
| --- | --- |
| ***General.***— | |
| (i) *Price situation.*—The Conference discussed in detail the current price situation and came to the following conclusions:— " Considering the hardship caused by the high prices of essential commodities; and recognising the imperative need for ensuring the supply of these commodities to the industrial workers at reasonable prices: The Indian Labour Conference agrees, in principle, that a part of their wages may be made payable in kind, if necessary, by legislation. The payment in kind should consist of the supply of rice, wheat or wheat substitutes, sugar, pulses, one or two popular varieties of cloth and cooking medium. Government should supply to the employers rice, wheat or wheat substitutes and sugar at controlled prices for distribution to the industrial workers through Fair Price Shops. The employers should distribute the other three commodities namely, textiles, pulses and cooking medium at prices, equivalent to the wholesale prices, the cost of distribution being borne by the employers. The Standing Committee on the Industrial Truce Resolution should work out the details of the scheme ". | At the third meeting of the Standing Committee on Industrial Truce Resolution held in New Delhi on 13th November 1964, it was decided that the scheme of payment of wages in kind need not be pursued. The Government of India however, propose to include the main features of the scheme, such as, supply of articles at wholesale prices, in the proposed legislation on Fair Price shops. |
| (ii) *Setting up of Fair Price Shops.*—The Conference reviewed the position concerning the setting up of Fair Price Shops and Consumers stores. It was considered that progress in this regard had not been quite satisfactory. *Establishments which had not yet set up such Stores/Fair Price Shops should do so without further delay.* The Chairman concluded that legislation as already agreed to at the meeting of the Standing Labour Committee in December 1963 was now inevitable. | In this State, so for 19 Fair Price Shops and 133 Consumers' stores have been opened. Further action is being pursued in respect of the remaining ones. *As the Government of India is undertaking legislation on this, no legislative action is necessary at the* State level. |
| (iii) *Linking of D.A. with C.P.I.*—The Conference reiterated the decision reached at the Standing Committee on Industrial Truce Resolution that dearness allowance should be suitably linked with the cost of living index. | The question of issuing instructions in this regard to the wage fixing authorities in this State, is under the consideration of the Government. |
| (iv) *Report of the Bonus Commission.*—The Conference recommended that Government should take a quick decision on the report of the Bonus Commission. | Legislation in this respect lies in the sphere of the Government of India. No action is called for by the State Government. |
| (v) *Labour Policies and Programmes for the Fourth Plan.*—Organisations of workers and employers should send to the Ministry of Labour and Employment and Planning Commission their proposals concerning Labour policies and programmes for consideration for inclusion in the Fourth Five-Year Plan. | No action is required by State Government. |
| *Item* 1.—*Action taken on the conclusions of the 21st Session of the Indian Labour Conference held at New Delhi on 13th July* 1963.—Representatives of the workers referred to voluntary arbitration and pointed out that hesitation on the part of some of the employers still remained. The employers' representatives pointed out that they had been doing their best to persuade their affiliates to accept voluntary arbitration as a means for settlement of industrial disputes. It was explained that difficulties, if any, standing in the way of employers in this regard, would be gone into in detail at the next meeting of the Central Implementation and Evaluation Committee. | So far as this State is concerned, both the employers' and employees' representatives are willingly submitting their disputes to voluntary arbitration. So far, about 225 cases have been referred to the Commissioner or Assistant Commissioner of Labour for informal arbitration. Therefore, no specific action is called for on this. |

| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
| --- | --- |
| *Item* 2.—*The Punjab Industrial Establishments (National and Festival Holidays and Casual and Sick Leave) Bill.*—It was agreed that this legislation was a matter for the State Government. | No action is required by this State Government. |
| *Item* 3.—*Introduction of the Pay Roll Savings Scheme.*—Employers and Trade Unions should give wider publicity to the scheme and extend their fullest co-operation to ensure satisfactory working of the scheme. | Instructions have already been issued to the Superintending Inspectors of Factories, Inspectors of Factories, and Labour Officers asking them to render all possible assistance to the Regional Director and Assistant Director of Small Savings when they approach them for the introduction of the Pay Roll Savings Scheme. Under instructions from Government, the Commissioner of Labour has issued an appeal to the Central Organisations of employers and employees to extend their full co-operation in this regard. |
| *Item* 4.—*Classification of misconduct like 'go slow' 'malingering' and 'sleeping on duty' as minor misconduct by some tribunals.* | No remarks. |
| *Item* 5.—*Suggestions for staggering of weekly holidays and for a 54-hour week in the textile industry.*—The above two items were earlier deleted from the Agenda. | No remarks. |
| *Item* 6.—*Recognition of categorywise or departmentwise unions in an establishment/industry under the Code of Discipline and the Rights of unrecognised unions.*—The consensus of opinion was that the recognition of categorywise/departmentwise unions should not be encouraged. Unions not recognised under the Code of Discipline should, | The decision has been communicated to the Commissioner of Labour. |



| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
| --- | --- |
| however, have the right to represent individual grievances relating to dismissal and discharge or other disciplinary matters affecting their members. The question of other rights of unrecognised unions was deferred for future consideration. | |
| *Item* 7.—*Review of the progress of the Scheme for setting up Co-operative Societies/Fair Price Shops in Industrial Establishments.*—This item was considered in the general discussion on the question of prices. The conclusions on this subject have been set out under the item "General". | Please see remarks against item (ii) under "General". |

## இந்தியத் தொழில் மாநாட்டின் 22-வது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்.

| முடிவுகள். (1) | எடுத்துக்கொண்ட அல்லது எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை. (2) |
|---|---|
| **பொது :** | |
| (i) **விலைவாசிகள் நிலவரம்.**—தற்போதைய விலைவாசிகள் நிலவரத்தை இம் மாநாடு விரிவாக விவாதித்து பின்வரும் முடிவுகளுக்கு வந்தது:—<br><br>இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகள் வெகுவாய் உயர்ந்துவிட்டதால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் கருதியும், தொழிலாளிகளுக்கு இப் பொருட்கள் நியாயவிலைகளில் கிடைக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தும் இந்தியத் தொழில் மாநாடு பின்வருவனவற்றைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறது. தொழிலாளர்கள் ஊதியத்தில் ஒரு பகுதியினைப் பண்ட ரூபமாகச் செலுத்தலாம். இதற்குச் சட்டம் இயற்றுவது அவசியமென்றால் அவ்வாறே சட்டம் இயற்றலாம். அரிசி, கோதுமை அல்லது கோதுமைப் பண்டங்கள், சர்க்கரை, பருப்பு வகைகள், இரண்டொருப் பிரபலத் துணி ரகங்கள், சமையலுக்குத் தேவைப்படும் பொருட்கள் இவற்றைப் பண்ட ரூபமாகச் செலுத்தலாம். அரிசி, கோதுமை, அல்லது கோதுமைப் பண்டங்கள், சர்க்கரை இவற்றை அரசாங்கம் தொழிலதிபர்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளில் வழங்க வேண்டும். இவற்றை நியாயவிலைக் கடைகள் மூலமாக தொழிலாளிகள் பெறுவர். தொழிலதிபர்கள் மற்ற மூன்று பொருள்களை அதாவது துணி வகைகள், பருப்பு வகைகள், சமையலுக்குத் தேவைப்படும் பொருள்கள் இவற்றை மொத்த விற்பனை விலைகளுக்குச் சமமான விலைகளில் வழங்க வேண்டும். இவற்றை வழங்குவதற்கான செலவைத் தொழிலதிபர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தின் விவரங்களைத் தொழில் துறை அமைதித் தீர்மானம் சம்பந்தமான நிலைக்குழுவினர் தயாரிக்க வேண்டும். | 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந் தேதி புது டில்லியில் நடைபெற்ற தொழில் துறை அமைதித் தீர்மானம் சம்பந்தமான நிலைக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில் ஊதியங்களைப் பண்ட வகையில் செலுத்தும் திட்டம் சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று தீர்மானிக்கப்பட்டது என்றாலும், இத் திட்டத்தின் முக்கிய அம்சங்களான, அதாவது இன்றியமையாப் பண்டங்களை மொத்த விற்பனை விலையில் வழங்குவது போன்ற அம்சங்களை, நியாயவிலைக் கடைகள் சம்பந்தமாக இயற்ற உத்தேசித்துள்ள சட்டத்தில் சேர்க்க இந்திய அரசாங்கம் உத்தேசிக்கிறது. |
| (ii) **நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துதல்.**—நியாயவிலைக் கடைகளையும், பயன்கொள்வோர் பண்டகசாலைகளையும், ஏற்படுத்துவது சம்பந்தமான நிலைமையை மாநாடு ஆராய்ந்தது. இது சம்பந்தமான அபிவிருத்தி அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்று கருதப்பட்டது. எந்தெந்த தொழில் நிறுவனங்களில் அத்தகைய பண்டகசாலைகளோ, நியாய விலைக்கடைகளோ இன்னும் திறக்கப்படவில்லையோ அவை மேலும் தாமதப்படுத்தாமல் அவற்றைத் திறக்கவேண்டும். 1963 டிசம்பரில் நடைபெற்ற நிலைத்தொழில் குழுக் கூட்டத்தில் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி சட்டம் இயற்றுவது இப்போது அவசியமென்று தலைவர் முடிவு செய்தார். | இந்த மாநிலத்தில் இதுவரை 19 நியாயவிலைக் கடைகளும், 133 பயன்கொள்வோர் பண்டகசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொழில் நிறுவனங்கள் குறித்தவரை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக இந்திய அரசாங்கம் சட்டமியற்ற நடவடிக்கை எடுத்து வருவதால், மாநில அளவில் சட்டம் இயற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை. |
| (iii) **அகவிலைப் படியை வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் இணைத்தல்.**—அகவிலைப் படியை வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் ஏற்ற வகையில் இணைக்க வேண்டுமென்று தொழில் துறை அமைதித் தீர்மான நிலைக் குழுவினர் எடுத்த முடிவினை இம் மாநாடு மீண்டும் வற்புறுத்தியது. | இது சம்பந்தமான உத்தரவுகளை இம்மாநில ஊதிய நிர்ணய அதிகாரிகளுக்கு பிறப்பிப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது. |
| (iv) **போனஸ் கமிஷன் அறிக்கை.**—போனஸ் கமிஷன் அறிக்கை மீது அரசாங்கம் விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டுமென்று இம்மாநாடு பரிவுரை செய்தது. | இத் துறையில் சட்டம் இயற்றுவது இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும். மாநில அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை. |
| (v) **நான்காம் திட்டம் சம்பந்தமாக தொழிற் கொள்கைகளும், திட்ட வேலைகளும்.**—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து ஆராய்வதற்குரிய தொழிற் கொள்கைகள், திட்ட வேலைகள் சம்பந்தமான பிரேரணைகளைத் தொழிலாளர் நிறுவனங்களும், தொழிலதிபர் நிறுவனங்களும், தொழில்-வேலைவாய்ப்பு அமைச்சரகத்திற்கும், திட்டக் கமிஷனுக்கும் அனுப்பி வைக்கவேண்டும். | மாநில அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுக்கவேண்டிய அம்சம் எதுவும் இல்லை. |
| **இனம் 1 :** | |
| **1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ந் தேதி புது டெல்லியில் நடைபெற்ற இந்தியத் தொழில் மாநாட்டின் 21-வது கூட்டத்தின் முடிவுகள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை.**—தாமாகவே நடுவர் தீர்ப்புக்கு விடும் திட்டத்தைப் பற்றி தொழிலாளர் பிரதிநிதிகள் குறிப்பிட்டு, இது சம்பந்தமாக சில தொழிலதிபர்கள் நடவடிக்கை எடுக்க இன்னும் தயங்குவதை எடுத்துக் காட்டினார்கள். தொழிலாளர் தகராறுகளைத் | இம் மாநிலத்தை பொறுத்தவரை, தொழிலதிபர்கள் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஆகிய இருதரப்பாரும் தங்கள் தகராறுகளைத் தாங்களாகவே நடுவர் தீர்ப்புக்கு விட்டுவருகின்றனர். இதுவரை சுமார் 225 வழக்குகள் தொழில் துறை ஆணையாளருக்கு அல்லது தொழில் துறை உதவி ஆணையாளருக்கு நடுவர் தீர்ப்புக்கு விடப் |